Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 16+8

விலை ரூ. 60

சுடர் : 38
கதிர் : 260

ஞாயிற்றுக்கிழமை 13 ஓகஸ்ட் 2023

ஆடி 28 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

### சிறுமிகள் மீதான 106 வன்புணர்வுகள்;

## மருத்துவ அறிக்கை தாமதம்; நீதி வழங்குவதில் சிக்கல்!!

கிளிநொச்சி, ஒகஸ்ட் 13

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த 3 ஆண்டுகளாக சிறுமிகள் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்ட 106 சம்பவங்களின் மருத்துவ அறிக்கைகள் கிடைக்கப்பெறாமையால், அது தொடர்பில் வழக்குத் தொடர்ந்து குற்றவாளிகளுக்குத் தண்டனை பெற்றுக்கொடுக்க முடியாத நிலைமை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. »15

பாலியல் துன்புறுத்தல்:

## ஆசிரியர்களுக்கு எதிரான நடவடிக்கையை உறுதி செய்க

**வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அமைச்சுச் செயலர் கண்டிப்பான உத்தரவு**

யாழ்ப்பாணம், ஓக. 13

வடக்கு மாகாணத்தில் பாடசாலைப் பிள்ளைகளுடன் முறைகேடுகளாக நடந்த ஆசிரியர்களுக்கு எதிராக நிர்வாக ரீதியான »04

## பெரிய தந்தையால் சிறுமி துஷ்பிரயோகம்

யாழ்ப்பாணம், ஓக. 13

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 17 வயதுச் சிறுமி ஒருவர், அவரது பெரிய தந்தையால் பாலியல் »04



## விகாரைக்குத் தடைபோட சம்பந்தருக்கு அதிகாரமா?

திருகோணமலையில் வீதியை மறித்து பிக்குகள் நேற்று அதகளம்

திருகோணமலை, ஓக. 13

திருகோணமலை, இலுப்பைக்குளம் கிராமத்தில் புத்தசாசன அமைச்சால் அனுமதி வழங்கப்பட்ட விகாரையின் நிர்மாணப் பணி »14

## போரின் பின்னர் வடக்கில் தற்கொலைகள் அதிகரிப்பு

சுகாதாரப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 13

வடக்கு மாகாணத்தில் போருக்குப் பின்னரான காலப்பகுதியில் தற்கொலை முயற்சி மற்றும் தற்கொலை என்பன அதிகரித்துச் செல்லும் போக்குத்தான் காணப்படுகின்றது. »15

## மலையகத் தமிழருக்காக கைகோர்த்த யாழ். பல்கலை

யாழ்ப்பாணம், ஓக. 13

எங்கள் மலையகத் தமிழ் மக்களின் 200 வருட வரலாற்றை நினைவுகூரும் வகையில் »04

## பொருளாதார நெருக்கடி; இரட்டிப்பானது மனநோய்

கொழும்பு, ஓக. 13

பொருளாதாரப் பிரச்சினைகள் காரணமாக உளவியல் பிரச்சினைகளுக்காகச் சிகிச்சைபெற மனநல மருத்துவர்களிடம் செல்லும் நோயாளிகளின் எண்ணிக்கை இரு மடங்காக அதிகரித்துள்ளதாக சிறப்பு மனநல மருத்துவர் ரூமி ரூபன் தெரிவித்துள்ளார். »15

## மோ.சைக்கிள் மோதியதில் காயமடைந்த பெண் சாவு!

யாழ்., ஓக. 13

யாழ்ப்பாணம், பருத்தித்துறை பிரதான வீதியைக் கடக்கும் »04

யாழ். போதனாவில் மாத்திரம்

## நாளொன்றுக்கு 120 பேர் விபத்துக்களால் அனுமதி

பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம், ஓக. 13

தினமும் 120 பேர் விபத்துகளால் பாதிக்கப்பட்ட நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்படுவதாக மருத்துவமனையின் பணிப்பாளர் த.சத்திய »14

## தொடர் காய்ச்சலால் ஒருவர் உயிரிழப்பு

யாழ்., ஓக. 13

5 நாள் தொடர் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட ஒருவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள் »15

## நிர்வாணநிலையில் சடலம் கோப்பாயில் நேற்று மீட்பு

அடித்துக் கொலையா?

யாழ்ப்பாணம், ஓக. 13

கல்வியன்காடு ஜி.பி.எஸ். வீதியில் நிர்வாணமாக 52 வயது நபருடைய சடலம் ஒன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது. அவரது உடலில் அடிகாயங்கள் காணப்படுகின்ற நிலையில் கொலையாக இருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். »04

## மோ.சைக்கிளிலிருந்து வீழ்ந்தவர் உயிரிழப்பு

யாழ்., ஓக. 13

வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணிக்கும் »15

## டெங்குக் கட்டுப்பாட்டு வாரம் நாளை ஆரம்பமாகின்றது

வடக்கில் யாழிலேயே பாதிப்பு அதிகம்

யாழ்ப்பாணம், ஓக. 13

வடக்கு மாகாணத்தில் இந்த ஆண்டின் முதல் ஐந்தரை மாதங்களில் ஆயிரத்து 819 பேர் டெங்கால் பாதிக்கப்பட்டுள்ளனர். அரைவாசிக்கும் அதிகமானோர் யாழ்ப்பாணத்திலேயே பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் பருவப்பெயர்ச்சி மழைக்குப் பின்னர் டெங்குப்பரவல் »14

சஞ்சீவி

# மன்னார் மற்றும் முல்லைத்தீவில் மருத்துவ நிபுணர் பற்றாக்குறை

## வடக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் தகவல்



**யாழ்ப்பாணம், ஓக.13**

**வடக்கு மாகாணத்தில் முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்ட மருத்துவமனைகளில் மருத்துவ நிபுணர்களுக்குப் பற்றாக்குறை காணப்படுகின்றது. இது தொடர்பாக சுகாதார அமைச்சருக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.**

- இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் நேற்றுச் சனிக்கிழமை கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையிலும், மாகாண சுகாதார சேவையின் கீழ் இயங்கும் மருத்துவமனைகளிலும் கணிசமான மருத்துவ நிபுணர்கள் கடமையில் உள்ளனர்.

விசேட மருத்துவ நிபுணர்கள் வெளிநாடுகளுக்குப் பயிற்சிக்குச் செல்வதாலும், சிலர் தொழில் நிமித்தம் செல்வதாலும் மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைகளில் மருத்துவ நிபுணர்களுக்கு பற்றாக்குறை காணப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பில் சுகாதார அமைச்சருக்குச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது - என்றார். (எ-125)

# போராட்டங்களை நடத்தி காலத்தை விரயமாக்காதீர்

## பல்கலை மாணவர்களிடம் கல்வியமைச்சர் கோரிக்கை

கொழும்பு, ஓக. 13

இன்றைய மாணவர்கள் கல்வி கற்பதற்கும் புதிய அறிவைப் பெற்றுக்கொள்வதற்கும் பதிலாக, இருக்கும் காலத்தை போராட்டங்களை நடத்தி வீணாக்கிக் கொண்டிருக்கின்றனர் என்று கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் பல்கலைக்கழக மாணவர்களால் முன்னெடுக்கப்படும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பல்கலைக்கழகங்களிலிருந்து கல்விகற்று பட்டப்படிப்பை முடித்து வெளியேறும் 100 சதவீதமான மாணவர்களுக்கு தொழில் வாய்ப்புகள் உள்ளன. உயர்தரத்தில் சித்திபெறும் அனைவரும் பல்கலைக்கழகத்துக்குச் செல்லமுடியாது. நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் 40 ஆயிரம் மாணவர்கள் மாத்திரமே உள்ளீர்க்கப்படுவர். கல்வி கற்பதற்கும் புதிய அறிவைப் பெற்றுக் கொள்வதற்கும் இருக்கும் காலத்தை, போராட்டத்தில் கழிப்பதால் பயன் கிடைத்துவிடுமா? - என்றார். (ச-இ)

# வரட்டுக் கௌரவத்தை கைவிட்டு ஒன்றிணைக

## மலையக எம்.பி.க்களை அழைக்கின்றார் ஜீவன்

கொழும்பு, ஓக. 13

மலையக மக்களின் பிரச்சினைகளை தீர்க்க வேண்டும் என்பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மிகவும் அக்கறையுடன் செயற்படுகின்றார். எனவே, மலையகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது வரட்டுக் கௌரவத்தை விட்டுவிட்டு இதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அப்போதுதான் மாற்றமொன்று வரும்' என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், மலையகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இந்தச் சந்திப்பின் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மலையக மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதியிடம் எடுத்துரைத்தோம். இந்தியாவின் 3 ஆயிரம் மில்லியன் ரூபாவை எப்படிப் பயன்படுத்தவேண்டும் என்பது பற்றியும் எடுத்துரைத்திருந்தோம். அத்துடன், காணி உரிமை பற்றியும் கதைக்கப்பட்டது. இதற்கான பொறுப்பு எனக்கும், அமைச்சர் ரமேஷ் பத்திரணவுக்கும் வழங்கப்பட்டுள்ளது. மலையகத்தில் ஏற்கனவே நிர்மாணிக்கப்பட்டுள்ள 44 ஆயிரம் வீடுகளுக்கு காணி உரித்து வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது. ஜனாதிபதி மலையக மக்களின் உரிமைகளை வழங்குவதிலும் அபிவிருத்தியை நிலைநாட்டுவதிலும் சரியான பாதையில் பயணப்படுகின்றார். எனவே மலையக நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரட்டுக் கௌரவத்தைக் கைவிட்டு அவரைப் பலப்படுத்த வேண்டும் - என்றார். (ம)

### ஈ.பி.எப். விவகாரம்

# நாடாளுமன்றின் தீர்மானத்தை சவாலுக்கு உட்படுத்தமுடியாது!

## சபாநாயகர் விடாப்பிடி

ஊழியர் சேமலாப நிதியம் தொடர்பான நாடாளுமன்றத் தீர்மானத்தை நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்த முடியாதென்ற தனது தீர்மானத்தில் மாற்றமில்லையென சபாநாயகர் அறிவித்தார்.

'இது தனியே எடுத்த முடிவல்ல. சட்ட ஆலோசனை பெற்ற பின்னரே முடிவெடுத்தோம். நாடாளுமன்றத்தின் அதி உயர் தன்மை, நாடாளுமன்றத்துக்கே உரியது என்பதன் அடிப்படையில் இந்த முடிவெடுக்கப்பட்டது. நாடாளுமன்றத்துக்கே நிதி அதிகாரமுள்ளது. என்னுடைய முடிவில் எந்த மாற்றமும் இல்லை. அதில் மாற்றம் செய்ய வேண்டிய அவசியமில்லை' என்றார் சபாநாயகர்.

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு திட்டத்தின் கீழ் ஊழியர் சேமலாப நிதிய வட்டி விகிதங்களைக் குறைப்பது தொடர்பாக, ஆளும் தரப்பு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிய பிரேரணையை நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்த முடியாது என சபாநாயகர் அறிவித்திருந்தார். சபாநாயகரின் இந்த முடிவு நாடாளுமன்றத்தின் மாண்புக்கு எதிரானது, மோசமான முன்னுதாரணம் என எதிர்க்கட்சிகள் சுட்டிக்காட்டின. நிறைவேற்றதிகாரத்தின் அடியாளாக இருக்காதீர்கள் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

சபாநாயகரின் அறிவிப்பு அரசமைப்பின் ஜனநாயக அடித்தளத்தையே அழிப்பதாக ஜீ.எல். பீரிஸ் சுட்டிக்காட்டினார்.

அனுரகுமார திஸாநயக்க தெரிவித்த போது, 'அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ சிறப்புரிமை பிரச்சினையெழுப்பிய உடனே நீங்கள் எழுதிவைத்த தீர்ப்பை வாசித்தீர்கள். நீங்கள் 3 வருடங்களாக சபாநாயகராக இருக்கிறீர்கள். சிறப்புரிமை பிரச்சினை எழுப்பிய உடனேயே தீர்ப்பை வழங்கிய எந்தச் சந்தர்ப்பமும் இல்லை. அன்று சிறப்புரிமைப் பிரச்சினை எழுப்பப்படும் என கனவில் உங்களுக்குத் தோன்றியதா? ஜனாதிபதி மாளிகையில் நடந்த முழு அரசியல் நாடகமும் இதன் மூலம் வெளிப்படுகிறது' என தெரிவித்திருந்தார். (அ-ஒ,இ)



# கிளிநொச்சிப் பாடசாலைக்கு ஜப்பானால் புதிய கட்டடம்!


கிளிநொச்சி, ஓக. 13

ஜப்பான் - இலங்கை நட்புறவின் அடையாளமாக ஜப்பான் மக்களின் நிதிப்பங்களிப்பில் கிளிநொச்சி ஸ்கந்தபுரம் இலக்கம் - 2 அ.த.க. பாடசாலையில் அமைக்கப்பட்ட புதிய கட்டடம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

ரூபா 17.6 மில்லியன் நன்கொடையில் இந்தப் புதிய கட்டடம் அமைக்கப்பட்டு மாணவர்களின் கற்றல் நடவடிக்கைக்காக கையளிக்கப்பட்டது. நிகழ்வில் இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிசுசி கிடாக்கி அதிதியாக பங்கேற்று கட்டடத்தைத் திறந்து வைத்தார். கிளிநொச்சி மேலதிக மாவட்டச் செயலர் முரளிதரன், மாகாணக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர், பாடசாலைச் சமூகத்தினர் உள்ளிட்டோரும் நிகழ்வில் பங்கேற்றனர். (ச-27)

### 13 தொடர்பில்

# ரணிலுடைய முயற்சிகளை கண்டிக்கவேண்டுமாம் கோத்தா



கொழும்பு, ஓக. 13

அரசமைப்பின் 13ஆவது திருத்தம் தொடர்பில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்டுள்ள முயற்சிகளை கோத்தாபய ராஜபக்ச கண்டிக்கவேண்டும் என்று பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சன்ன ஜெயசுமண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வின் முயற்சிகள் குறித்து முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தனது மௌனத்தைக் கலைக்க வேண்டும். தேசத்தின் நலன்களுக்குப் பாதகமான விதத்தில் விக்கிரமசிங்க, ராஜபக்ச அரசாங்கம் செயற்பட முயல்வதால் கோத்தாபய ராஜபக்ச தொடர்ந்தும் அமைதியாகயிருக்க முடியாது.

பயங்கரவாதத்துக்கு எதிரான வெற்றியை பிரதிபலிக்கும் புதிய அரசமைப்பு என்ற வாக்குறுதியின் அடிப்படையில் வெற்றிபெற்ற கோத்தாபய ராஜபக்ச, தனது மக்கள் ஆணை ஒற்றையாட்சியை இல்லாமல் செய்வதற்காக பயன்படுத்தப்படும்போது அவர் எவ்வாறு மௌனமாகயிருக்க முடியும்? - என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது
சம்பத் வங்கியிடமிருந்து நிலையான வைப்பிற்கு
நிகரற்ற அதிகூடிய வட்டி

மூன்று மற்றும் நான்கு மாதங்களுக்கு
12.5%
03 மாதங்களுக்கு (வ.வ.வீ. 13.10%)
04 மாதங்களுக்கு (வ.வ.வீ. 13.03%)

ஒரு மாதம், ஏழு மாதங்கள் மற்றும் 300 நாட்களுக்கு
11.5%
01 மாதத்திற்கு (வ.வ.வீ. 12.13%)
07 மாதங்களுக்கு (வ.வ.வீ. 11.77%)
300 நாட்களுக்கு (வ.வ.வீ. 11.61%)

பதின்மூன்று மாதங்களுக்கு
10.5%
(வ.வ.வீ. 10.46%)

மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள சம்பத் வங்கிக் கிளையை நாடுங்கள்.

Sampath Bank PLC- Company PQ 144 Sampath Bank is a licensed commercial bank supervised by the Central Bank of Sri Lanka.

1332 www.sampath.lk Sampath Bank Fitch Ratings 'A(lka)'/RWN *நிபந்தனைகள் உண்டு.

சம்பத் வங்கி
எதிர்காலத்தின் முன்னோடிகள்

## போலியான ஸ்ரிக்கர்களை கண்டறிவதற்காக செயலி!

கொழும்பு, ஓக. 13

மதுபானப் போத்தல்களில் ஒட்டப்படும் பாதுகாப்பு ஸ்ரிக்கர்களில் போலியானவற்றை அடையாளம் காணும் வகையில் அலைபேசி செயலியை உருவாக்க நடவடிக்கை எடுக்குமாறு நாடாளுமன்ற வழிவகைகள் பற்றிய குழு பணிப்புரை விடுத்துள்ளது.

குழுவின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தலைமையில் நாடாளுமன்றத்தில் அண்மையில் இந்தக் கூட்டம் கூடியது. இதன்போது மதுவரித் திணைக்கள அதிகாரிகள், பாதுகாப்பு ஸ்ரிக்கர் தயாரிப்பு நிறுவனத்தின் பிரதிநிதிகள் அழைக்கப்பட்டிருந்தனர்.

கூட்டத்தில் மதுபானப் போத்தல்களுக்கு பாதுகாப்பு ஸ்ரிக்கர் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தாலும் நாட்டிலுள்ள அனைத்து மதுபானத் தயாரிப்பாளர்களாலும் அது பயன்படுத்தப்படாமை குறித்து குழு அதிருப்தி வெளியிட்டது. இந்தப் பாதுகாப்பு ஸ்ரிக்கர்களை அடையாளம் காண்பதற்கான 200 விசேட உபகரணங்கள் மதுவரித் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டுள்ளபோதும் அவை இதுவரை பயன்படுத்தப்படாமையும் தெரியவந்தது. இந்த உபகரணங்களைப் பயன்படுத்தக்கூடிய நிலைமைக்கு ஏற்ற வகையில் தொழில்நுட்ப ரீதியில் மேம்படுத்துமாறு குழுவின் தலைவர் பணிப்புரை வழங்கினார். அத்துடன், போலியான ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட்ட மதுபானப் போத்தல்களை மீட்பதற்கு மேற்கொள்ளப்படும் சுற்றிவளைப்புக்களின் விவரங்கள், கையகப்படுத்தப்பட்ட மதுபான உற்பத்தி மற்றும் விநியோகம் செய்தோர் தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. (ச-இ)

## விவசாயத்தில் நவீனம்: செயலணி விரைவில்!

### ஜனாதிபதி அறிவிப்பு

விவசாயத்தை நவீனமயமாக்குவதற்கான செயலணியொன்று விரைவில் ஸ்தாபிக்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். 'விவசாயத்துறையை நவீனமயப்படுத்தல்' தொடர்பில் ஜனாதிபதி அலுவலகத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பெருந்தோட்டம், விவசாயம், நீர்ப்பாசனம் மற்றும் மகாவலி அபிவிருத்தி ஆகிய அமைச்சுக்களை ஒன்றிணைத்து – அரசாங்க மற்றும் தனியார் துறையின் பிரதிநிதிகளை உள்ளடக்கி இந்தச் செயலணி ஸ்தாபிக்கப்படும். 9 மாகாணசபைகளின் வளங்களைக் கொண்டு விவசாயத்துடன் தொடர்புடைய பிரச்சினைகள் இந்தச் செயலணியூடாக நிவர்த்தி செய்யப்படும். அந்தந்தப் போகங்களுக்கு ஏற்ற நெல் வகைகளைப் பயிரிடுதல், குறித்த பயிர்கள் தொடர்பில் நிபுணத்துவம் பெற்ற நிறுவனங்களிடம் இருந்து அறிவைப் பெறுதல், தரமான விதைகளைக் கொள்முதல் செய்தல் ஆகிய விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும். நாடு பூராகவும் உள்ள கமநலசேவைகள் நிலையங்கள் ஊடாக சிறு விவசாயிகளுக்கு அவசியமான நவீன தொழில்நுட்ப அறிவை வழங்கும் திட்டத்தை உருவாக்கவும் கவனம் செலுத்தப்படும் – என்றார்.

அத்துடன், விவசாய அபிவிருத்தி வேலைத்திட்டத்துக்குத், தனியார்துறை தொழில் முயற்சியாளர்களை உள்ளீர்ப்பதன் மூலம் அதிக நன்மைகளைப் பெற முடியும் என்பதுடன், நிலையான விவசாயத்தை கட்டியெழுப்பமுடியும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். (ச-இ)

## விளையாட்டுத் துறைக்கென விரைவில் பல்கலைக்கழகம்

### இராஜாங்க அமைச்சர் ரோஹண தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 13

விளையாட்டுத்துறையில் தேர்ச்சியுடன் பட்டப்படிப்பை நிறைவு செய்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தும் வகையில், பல்கலைக்கழகமொன்று நிறுவப்படவுள்ளது என்று விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர் ரோஹண திஸாநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்றுமுன்தினம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இளைஞர்கள் தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பையும், நம்பிக்கையையும் வைத்துள்ளார். அதன்படி, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் செயற்பாடுகளை பிரதேச ரீதியில் செயற்படுத்த ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுகளிலும் ஓர் அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். மேலும், தேசிய இளைஞர் படையணி ஊடாகவும் பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சிகளை வழங்குவதுடன் அவர்களுக்கு திறன்விருத்தி, தகவல்தொடர்பாடல்தொழில்நுட்பம் தொடர்பான பயிற்சிகள், சர்வதேச மொழிகளைக் கற்றுக்கொடுத்தல் மற்றும் சர்வதேச அளவில் சிறந்த வேலை வாய்ப்புகளை பெற்றுக்கொள்வதற்கான வழிகாட்டல்களும் வழங்கப்படுகின்றன

சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்வதற்காக விளையாட்டு வீரர்களைத் தெரிவுசெய்யும்போது இதுவரை பல்வேறு பிரச்சினைகள் தோன்றின. அவற்றைத் தீர்த்து வைப்பதற்காக தற்போது தேசிய விளையாட்டுச்சபை நிறுவப்பட்டுள்ளது. அத்துடன் விளையாட்டுப் பல்கலைக்கழகமொன்றை நிறுவி விளையாட்டுத்துறையை அடுத்த கட்டத்துக்கு மேம்படுத்திச் செல்லவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது – என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாட்டைப் பொறுப்பேற்காமல்

# தப்பியோடியமைக்காக சஜித்துக்கு கின்னஸ்!

## ஜனாதிபதி ரணில் சீண்டல்

கொழும்பு, ஓக. 13

நாடு பொருளாதாரத்தில் நலிவடைந்திருந்த வேளையில், நாட்டைப் பொறுப்பேற்காமல் தப்பியோடியமைக்காக எதிர்க்கட்சித் தலைவர் சஜித்துக்கு கின்னஸ் விருதை வழங்கவேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கிண்டலாகத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த வருடம் நாங்கள் தீர்வுகள் மற்றும் முன்னெடுக்கக் கூடிய யதார்த்தபூர்வமான நடவடிக்கைகள் குறித்துச் சிந்திக்கவில்லை. நாங்கள் அதன் அரசியல் குறித்தே எங்கள் கவனத்தைத் திசைதிருப்பியிருந்தோம்.

மக்கள் அழுத்தங்கள் காரணமாக விரக்தியடைவதை என்னால் புரிந்துகொள்ள முடியும்.

ஆனால் ஆர்ப்பாட்டங்கள் தீர்வைக் கொண்டுவருவதில்லை.

ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறும்போது உள்நோக்கம் கொண்ட வேறுசக்திகள் அதனைப் பயன்படுத்த முயலக்கூடும்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ச பதவி விலகியவேளை அப்போதைய ஜனாதிபதி எதிர்க்கட்சித் தலைவரைத் தலைமை தாங்க அழைத்தவேளை அவர் அதிலிருந்து தப்பியோடினார்.

இந்த நாட்டுக்குத் தலைமை தாங்குவதிலிருந்து தப்பியோடியமைக்காக எதிர்க்கட்சித் தலைவருக்கு கின்னஸ் விருதை வழங்கவேண்டும். ஏனைய பலரும் அவ்வாறே செயற்பட்டனர்.

என்னை அழைத்தவேளை நான் இதில் மீண்டும் ஈடுபடுவதா? என சிந்திக்கவேண்டிய நிலையிலிருந்தேன். நான் கிட்டத்தட்ட அரசியல் ஓய்வு நிலையிலிருந்தேன். ஆனால் நாடு நெருக்கடி நிலையிலிருந்தது.

என்னால் அதனை மாற்றமுடியும் என எனக்குத் தெரியும். ஆகவே அனைத்து விமர்சனங்களுக்கு மத்தியிலும் நான் பொறுப்பை ஏற்றேன் - என்றார். (ம-26)

# மோசமாகப் பாதிப்புற்ற வட்டுவாகல் பாலம்!

## புனரமைப்பு செய்யுமாறு பயணிகள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஓக. 13

முல்லைத்தீவுக்கான பிரதான பாதைகளில் ஒன்றாகக் காணப்படுகின்ற வட்டுவாகல் பாலத்தில் உடைவு ஏற்பட்டுக் காணப்படுவதால் ஆபத்தான பயணம் மேற்கொள்ள நேரிடுகிறது எனப் பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் கூறுகையில்,

வட்டுவாகல் பாலம் நீண்டகாலமாக எந்தவித புனரமைப்புமின்றி மிக மோசமாகச் சேதமடைந்து காணப்படுகிறது. பாலத்தில் அடிக்கடி உடைவுகள் ஏற்படும்போது தற்காலிக புனரமைப்பே செய்யப்படுகிறது. தற்போது பாலத்தின் மையப்பகுதியில் உடைவு ஏற்பட்டு ஆபத்தான நிலையில் பெரிய குழியும் தோன்றியுள்ளது. அத்துடன் பாலத்தின் பல்வேறு பகுதிகளிலும் வெடிப்புகள் ஏற்பட்டு தாழிறங்கியும் காணப்படுகிறது.

இதுதொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எடுத்துக் கூறியும் புனரமைப்புப் பணிகள் எவையும் நடைபெறவில்லை. மழைகாலம் ஆரம்பமாகவுள்ள நிலையில் நீர்மட்டம் உயர்ந்து பாலத்தை மேவிச் செல்ல நேரிடும். எனவே ஆபத்தான பயணத்தைத் தவிர்க்க உரிய அதிகாரிகள் முன்வந்து உடன் பாலத்தை சீரமைத்துத் தரவேண்டும் - என்றனர். (ச-இ)

### மலையகத்...

இந்த வருடம் முழுவதும் பல்வேறு தரப்பினரால் பல நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. 200 வருட நிகழ்வுகள் வெறுமனே நிகழ்வுகளாக முடிந்துவிடாமல் மலையகத் தமிழ் மக்களுக்கான ஒரு நிரந்தரத் தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டியதன் அவசியத்தை அனைத்துத் தரப்பினரிடமும் வலியுறுத்துகிறோம் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் சார்பில் அதன் தலைவர் அ.விஜயகுமார் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

1980களின் பின் அவர்களுக்கான குடியுரிமை படிப்படியாக வழங்கப்பட்டதன் பின்னரே இச்சமூகத்தில் சில மாற்றங்கள் உருவாகின. தோட்டத்தொழிலாளர்களின் பிள்ளைகள் எத்தனையோ வறுமை, சமூக நெருக்கடி, துன்பங்களின் மத்தியிலும் கல்வியில் முன்னிலை வகிக்கின்றனர். அதற்குச் சான்றாக எமது பல்கலைக்கழகத்தில் மலையக தமிழ் மாணவர்கள் அனைத்துத் துறைகளிலும் மிளிர்ந்து வருகின்றார்கள். படிப்படியாக அவர்கள் தமது சுய முயற்சியிலேயே முன்னேறி வந்துள்ளார்கள்.

ஆனால், தேசிய ரீதியான வளர்ச்சியுடன் ஒப்பிடும் போது இன்றுவரை அவர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை. கடந்த 200 வருடத்தில் அடைந்தவை சில, அடைய வேண்டியவை பல என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. இருப்பினும் 200 வருட வரலாற்றை நினைவுகூரும் இந்த வருடத்தில் எம் மலையகத் தமிழ் மக்களின் பிரச்சினைகள் சர்வதேசத்திலும் அரசியல் மற்றும் சிவில் சமூக மட்டத்திலும் பேசுபொருளாக உள்ளது. அந்த முன்னேற்றத்தை மலையகத் தமிழ் மக்களின் நிரந்தரத் தீர்வுக்குப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

இலங்கையில் தமிழ் மக்களின் இனப்பிரச்சினை பற்றிப் பேசும்போது எங்கள் மலையகத் தமிழ் மக்களின் தேசிய அடையாளம் மற்றும் சுயநிர்ணயம் பற்றியும் கூடுதல் கவனம் செலுத்தி அழுத்தம் கொடுக்க வேண்டிய பொறுப்பு எம்மிடம் உள்ளது.

எங்கள் மலையகத் தமிழ் மக்கள் மீது அரசால் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள கட்டமைக்கப்பட்ட ஒடுக்கு முறைக்கு எதிராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களாகிய நாங்கள் என்றும் தொடர்ந்து போராடுவோம். எங்கள் தமிழ் மக்களின் உரிமையை வென்றெடுக்கும் வரை நாம் தோளோடு தோள் நின்று களமாடுவோம் - என்றுள்ளது. (அ-ஒ.27,125)

### பெரிய...

துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளாரென பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

சிறுமியின் பெற்றோர் தமது வறுமை நிலைமை காரணமாக, சிறுமியை தந்தையின் சகோதரர் வீட்டில் தங்கவைத்துள்ளனர். இந்த நிலையில் சிறுமியின் பெரிய தந்தையால் நீண்டகாலமாக அவர் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளாரெனத் தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பில் சிறுமியால் வீட்டாருக்கு நேற்றுத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. அதனையடுத்து பொலிஸில் சிறுமியின் பெற்றோரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பில் 50 வயதான பெரிய தந்தையைக் கைது செய்யவுள்ளதாகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார். (அ-ஒ.125)

### ஆசிரியர்களுக்கு...

நடவடிக்கை எடுக்கப்படுவதை வலயக் கல்விப் பணிப்பாளர் உறுதிப்படுத்த வேண்டும் - இவ்வாறு வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலர் ம. பற்றிக் டிரஞ்சன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்திலுள்ள அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர், வடக்கு மாகாணக் கல்வித் திணைக்கள அதிகாரிகள் ஆகியோருடன் நேற்று [illegible] இடம்பெற்ற நீண்ட கலந்துரையாடலிலேயே மேற்படி விடயத்தை அவர் வலியுறுத்திக் கூறியுள்ளதாக அறியமுடிகின்றது.

வடக்கு மாகாணத்திலுள்ள ஆசிரியர் வெற்றிடங்கள் தொடர்பிலும் சில வலயங்களில் மேலதிகமாக உள்ள ஆசிரியர்கள் தொடர்பிலும், ஆசிரியர் வளத்தின் சமமான பங்கீடு தொடர்பிலும் இதன்போது ஆராயப்பட்டுள்ளது.

பாடசாலைகளில் மாணவர்கள் காயமடையும் அளவுக்கு ஆசிரியர்கள் தண்டிப்பது தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டுள்ளது. இவ்வாறானவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை சரியான முறையில் எடுக்கப்படவேண்டும். அத்துடன் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் இதனைக் கண்காணிக்கவேண்டும். மேலும், தொடர்ச்சியாக இதே செயற்பாட்டில் ஈடுபடுபவர்கள் தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தவேண்டும் என்றும் கல்வி அமைச்சின் செயலர் அறிவுறுத்தியுள்ளாரென அறியமுடிகின்றது. (அ-ஒ.5)

### மோ.சைக்கிள்...

போதுமோட்டார் சைக்கிளால் மோதுண்டு காயமடைந்த நிலையில் சிகிச்சைபெற்று வந்த பெண் நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்துள்ளார்.

கோப்பாய் தெற்கைச் சேர்ந்த நாகராசா ராசபூபதி (வயது - 68) என்பவரே உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண், நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 7.30 மணியளவில், யாழ்ப்பாணம், பருத்தித்துறை பிரதான வீதியில் தனது வீட்டுக்கு அருகில் வீதியின் இடதுபக்கத்திலிருந்து வலதுபக்கத்துக்குச் சென்றபோது, பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிவந்த மோட்டார் சைக்கிள், வீதியின் மத்திய கோட்டுக்கு அண்மையாக வைத்து அவரை மோதித்தள்ளியது. அதில் படுகாயமடைந்த அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுமுன்தினம் இரவே உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ஒ.26)

### நிர்வாண...

அதேயிடத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை மகேந்திரம் (வயது - 52) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவர் மனைவியுடன் வசித்து வருகிறார். அவரது மனைவி கொடிகாமத்தில் உறவினர் ஒருவரின் பூப்புனித நீராட்டு விழாவுக்கு நேற்றுமுன்தினம் சென்றுள்ளார். இவர் வீட்டிலேயே தனித்து இருந்துள்ளார். நேற்றுமுன்தினம் மாலை 4 மணியளவில் அவரை அயலவர்கள் கண்டுள்ளனர்.

இந்த நிலையில் நேற்றுக்காலை அவரது வீட்டுக்கு உணவு கொடுக்கச் சென்ற பெண் ஒருவர், அவரது சடலத்தைக் கண்டு பொலிஸாருக்கு அறிவித்துள்ளார். இதனையடுத்து கோப்பாய் பொலிஸார், யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஆனந்தராஜா மற்றும் சட்ட மருத்துவ அதிகாரி மயூரன் ஆகியோர் சம்பவ இடத்தை நேரில் சென்று பார்வையிட்டனர்.

சடலத்தில் பல்வேறு இடங்களில் அடிகாயங்கள் காணப்படுகின்றன. உடற்கூற்றுப் பரிசோதனைகள் இன்று முன்னெடுக்கப்படவுள்ளன. (அ-ஒ.26.27,125)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவள்ளுவர் சிலை திறப்பு

சாவகச்சேரி, ஓக. 13

மிருசுவில் விடத்தற்பளை கமலாசனி வித்தியாலய வளாகத்தில் அமைக்கப்பட்ட திருவள்ளுவர் திருவுருவச்சிலை திறப்பு நிகழ்வு நாளை திங்கட்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் இ.நாகேந்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலாநிதி ஆறு.திருமுருகன். சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய தமிழ்ப்பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் வே.உதயகுமார் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (ச-9)



# வறள்கிறது மன்னார் விவசாயிகள் அவதி

மன்னார், ஓக. 13

**மன்னாரில் நிலவிவரும் கடுமையான வறட்சி காரணமாக பேரிடர் ஏற்பட்டுள்ளது. வறட்சியால் விவசாய நடவடிக்கைகள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன், கால்நடைகளும் பெரும் இன்னலைச் சந்தித்து வருகின்றன.**

கடந்த ஆறு மாதங்களாக மன்னாரில் மழை பெய்யவில்லை. இதனால், பல நீரேந்துப் பகுதிகள் வறண்டுள்ளன. சிறுபோகப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளின் நெற்செய்கையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதுடன் கத்தரி, கச்சான் போன்ற தோட்டச் செய்கைகளும் முற்றாகப் பாதிப்படைந்துள்ளன. கால்நடைகளும் தண்ணீரின்றி இறக்கும் நிலையில் அந்தரித்துத் திரிகின்றன. எனவே துறைசார் அதிகாரிகள் வறட்சி நிவாரணங்களைப் பெற்றுத் தரவேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் வலியுறுத்தியுள்ளனர். (ச-213)

# விருதுகளுக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஓக. 13

நல்லூர்ப் பிரதேச பண்பாட்டுப் பெருவிழாவை முன்னிட்டு கலைஞர்களைக் கௌரவிக்கும் முகமாக 'கலைஞானச்சுடர்' விருது மற்றும் 'இளங்கலைஞர் விருது' என்பன வழங்கப்படவுள்ளன.

அதற்கென கலைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பங்களை நல்லூர்ப் பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் பெற்று எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்குமாறு நல்லூர்ப் பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (ச)




# கண்ணிவெடி அகற்றல்; ஜப்பானுடன் ஒப்பந்தம்

கிளிநொச்சி, ஓக. 13

ஜப்பானிய அரசாங்கத்தின் 'சார்ப்' நிறுவனத்துடன் 2028ஆம் ஆண்டுவரை கண்ணிவெடி அகற்றுவதற்கான ஒப்பந்தம் நேற்று சனிக்கிழமை முகமாலையிலுள்ள 'சார்ப்' நிறுவனத்தில் கைச்சாத்திடப்பட்டது. நிகழ்வில் ஜப்பானியத் தூதுவர் மிசிகுசி கிடாக்கி, யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி கெட்டியாராச்சி, கிளிநொச்சி மாவட்டச் செயலர் றூபவதி கேதீஸ்வரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். (ச-113)

# பொலிஸ் சுற்றுக்காவல் முக்கொம்பனில் தேவை

## மகளிர் அமைப்புகள் கோரிக்கை

கிளிநொச்சி, ஓக. 13

கிளிநொச்சி, பூநகரி முக்கொம்பனில் பொலிஸாரின் கண்காணிப்புப் பலப்படுத்தப்படவேண்டும் என்பதுடன், காவலரண் ஒன்றும் அமைக்கப்படவேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பில் அந்தப் பகுதி பொதுமக்கள் மேலும் தெரிவித்ததாவது:

கிளிநொச்சி முக்கொம்பன் கிராமத்தில் சட்டவிரோத மதுஉற்பத்தி அதிகரித்துள்ளது.

அதனால் திருட்டுச் சம்பவங்கள் உள்ளிட்ட துர்நடத்தைகள் தலைதூக்கியுள்ளன.

அதனைக் கட்டுப்படுத்துவதற்கு முக்கொம்பன் கிராமத்தில் பொலிஸ் காவலரண் வேண்டும் என கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலத்தில் கோரிக்கை விடுத்தோம்.

பூநகரி, அக்கராயன் பொலிஸார் இணைந்து சுற்றுக்காவலில் ஈடுபடுவர் எனத் தெரிவிக்கப்பட்டது. ஆயினும் பொலிஸ் கண்காணிப்பு இடம்பெறாததால் கிராமத்தில் கசிப்புக் காய்ச்சுதல் உள்ளிட்ட சட்டவிரோதச் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. அவற்றைக் கட்டுப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர். (ச-13)

# இன்றைய (ராசிபலன்)



**மேடம்:** உற்சாகமாகச் செயல்படும் நாள். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். சிலருக்கு அவ்வப்போது சிறுசிறு சலனங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்த்து விடுவது நல்லது. சிலருக்கு நண்பர்கள் மூலம் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். பணிச்சுமை அதிகரிக்கும்.

**மிதுனம் :** மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவம் நடைபெறும். பிள்ளைகளின் உற்சாகம் உங்களையும் தொற்றிக்கொள்ளும் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். எதிர்பார்த்த காரியம் நடக்கும்.

**கடகம்:** செலவுகள் அதிகரிக்கும் நாள். என்றாலும் தேவையான பணம் கையில் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். ஆதாயம் உண்டாகும். எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். காரியங்கள் அனுகூலமாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும்.

**கன்னி:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். குடும்பம் தொடர்பான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். ஆனாலும் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். பேசும்போது நிதானம் அவசியம்.

**துலாம்:** உறவினர்கள் வருகையால் திடீர் செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்து விடுவீர்கள். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிர்ப்புகளைக் கடந்து வெற்றி பெறுவீர்கள்.

**விருச்சிகம் :** பதற்றம் தவிர்த்து எதிலும் நிதானமாகச் செயற்படவும். செலவுகள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் வீண் சச்சரவுகள் ஏற்படும் . பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**தனுசு:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. என்பதால் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் மறையும்.

**மகரம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றி பெறும். தேவையான பணம் கிடைக்கும். தாய்வழி உறவினர்கள் மூலம் ஆதாயம் கிடைக்கும். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும்.

**கும்பம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உடல்நலனில் கவனம் தேவை. எதிர்பாராத செலவுகளுடன் தேவையற்ற அலைச்சலும் ஏற்படும்.

**மீனம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். புதிய முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். ஆதாயம் உண்டாகும். உங்கள் யோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். கவனம் தேவை.

# மாணவனைத் தாக்கிய ஆசிரியருக்குப் பிணை



யாழ்ப்பாணம், ஓக.13

ஆனைக்கோட்டையிலுள்ள பாடசாலையொன்றில் மாணவன் ஒருவரைத் தாக்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஆசிரியருக்குக் கடும் எச்சரிக்கை விடுத்து பிணையில் செல்ல நீதிமன்று நேற்றுமுன்தினம் உத்தரவிட்டுள்ளது.

ஆனைக்கோட்டையிலுள்ள பாடசாலையொன்றில் கடந்த 30ஆம் திகதி மாணவரொருவர் ஆசிரியரால் தாக்கப்பட்டபோது முகநரம்பு பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். சம்பவம் குறித்து மருத்துவமனை நிர்வாகம் மானிப்பாய் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியது. அதற்கமைய பொலிஸார் குறித்த ஆசிரியரை நேற்றுமுன்தினம் கைது செய்து மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிமன்று குறித்த ஆசிரியருக்கு கடுமையான எச்சரிக்கை விடுத்து பிணையில் செல்ல அனுமதித்தது. (ச-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இந்துமா சமுத்திரத்தை இரையாக்கும் போதை!

வடக்கு மாகாணத்துக்குள் போதைப்பொருள் ஊடுருவலைத் தடுக்கவும் கட்டுப்படுத்தவும் அவுஸ்திரேலியக் கடலோரக் காவற்படையின் உதவியைக் கோரியுள்ளார் ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ். உலகின் மிகப்பெரிய தீவு நாடான அவுஸ்திரேலியா, சட்டவிரோதக் குடியேற்றத்துக்கு எதிராகவும், போதைப்பொருள் கடத்தலுக்கு எதிராகவும் கொள்கையளவில் மிகக் கடுமையான தீர்மானங்கள் பலவற்றை எடுத்து, அவற்றை இறுக்கமாக நடைமுறைப்படுத்தியும் வருகின்றது. தனது நாட்டுக்குள் எந்தெந்த நாடுகளில் இருந்தெல்லாம் சட்டவிரோதக் குடியேறிகள் வருகின்றார்களோ, எந்தெந்த நாடுகளில் இருந்து போதைப்பொருள் கடத்தப்படுகின்றதோ அந்தந்த நாடுகளிலேயே மில்லியன் டொலர் செலவில் சிறப்புச் செயற்றிட்டங்கள் பலவற்றை அவுஸ்திரேலியா நடைமுறைப்படுத்தி வருகின்ற பின்னணியில்தான் இந்தக் கோரிக்கையை – பரிந்துரையை முன்வைத்திருக்கின்றார் வடக்கு ஆளுநர்.

உலகளாவிய ரீதியில் இடம்பெறும் போதைப்பொருள் கடத்தல்களில் 80 சதவீதத்துக்கும் அதிகமானவை கடல் வழியாகத்தான் இடம்பெறுகின்றன. இதனால்தான் நாலாபக்கமும் கடல்சூழ்ந்த தீவு நாடுகள் அல்லது தன் எல்லையைக் கடலெல்லையாகக் கொண்டிக்கும் நாடுகள் போதைப்பொருள் தாக்கத்துக்கு அதிகம் இரையாகின்றன. இற்றைக்கு மூன்று தசாப்தங்களுக்கு முன்னரும் இந்தப் போதைப்பொருள் கடத்தல்கள் இருந்தனதான். ஹெரோய்ன், ஹொக்கெய்ன் உள்ளிட்ட அதி அபாயகரமான போதைப்பொருள்கள் கடத்தப்பட்டனதான். ஆனால், அன்று அவை பசுபிக் சமுத்திரத்தை மையமாகக் கொண்டியங்கின. பசுபிக் சமுத்திரத்துக்கு அடுத்தபடியாக அட்லாண்டிக் கடற்பரப்பு போதைப்பொருள் கடத்தலின் கேந்திரமாக இருந்தது. இந்தச் சமுத்திரங்களை தம் எல்லைகளாகக் கொண்டிருக்கும் பிரேஸில், பெரு, சிலி, மெக்ஸிக்கோ, உருகுவே போன்ற தென்னமெரிக்க நாடுகளும் நைஜீரியா, செனகல், கானா போன்ற ஆபிரிக்க நாடுகளும் போதையின் தாக்கத்தில் நின்று உழன்றன. ஆனால், தற்போது இந்தக் கடத்தல்கள் கைமீறிவிட்டன. கடத்தல் எல்லைகள் பல்லாயிரம் கடல்மைல்களாக விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றன.

பசுபிக், அட்லாண்டிக் கடற்பரப்புகளை மிஞ்சுகின்ற வகையில் இன்று இந்துமா சமுத்திரத்துக்குள் போதை ஆழ ஊடுருவி விட்டது. இலங்கை – அவுஸ்திரேலியா – மடகஸ்கர் இவற்றுக்கு இடைப்பட்ட முக்கோண வலயம்தான் இன்றைய திகதியில் போதையின் சுவர்க்காபுரி. அதிலும், ஹெரோய்ன், ஹொக்கெய்ன் உள்ளிட்ட அதிஅபாயமான போதைப்பொருள்கள் விடயத்தில் உலகின் ஆகப்பெரும் வணிகச் சந்தையாக மடகஸ்கர் மாறியிருக்கின்றது. மடகஸ்கரை மையப்படுத்தி மேற்கொள்ளப்படும் போதைக்கடத்தல்களை இன்று பில்லியன் டொலரில் கணக்கிட்டுவிட முடியாது. இந்த முக்கோண வலயம் தீவிரமானதும் தொடர்ச்சியானதுமான கண்காணிப்புக்குள் உட்படாத பட்சத்தில் இலங்கையும் மடகஸ்கரைப் போன்ற இழிநிலைக்குள் தள்ளப்படும். எந்தவொரு நாடு பொருளாதாரத்தில் வீழ்ந்துள்ளதோ அந்த நாடு போதைப்பொருள் கடத்தல் மாபியாக்கள் எனும் பிணம்தின்னிக் கழுகுகளுக்கு இலகுவில் இரையாகும். இலங்கையின் பொருளாதார இயலுமையும் தற்போது இரையாகக்கூடிய நிலையிலேயே உள்ளது. இவையெல்லாவற்றையும் ஒரு நேர்கோட்டில் வைத்துப் பார்த்தால் அவுஸ்திரேலியக் கடற்கண்காணிப்பை ஆளுநர் கோரியிருப்பதன் தாற்பரியமும் பின்னணியும் தவிர்க்கமுடியாத் தனமும் பட்டவர்த்தனமாகும்.


ரைட்டானிக்கை மூழ்கடித்த பனிப்பாறைபோன்று, எங்கள் கண்ணுக்குப் புலப்படும் போதைப்பொருள் கடத்தல்களும், செய்திகளாக வந்துசேரும் கடத்தல் முறியடிப்புகளும் மிகமிகச் சொற்பமானவைதான். இன்னும் சொல்லப்போனால், அவை இந்துமா சமுத்திரத்தை மையப்படுத்திய போதைக்கடத்தலில் வெறும் ஒரு சதவீதம்கூட இல்லை. இது இவ்வாறிருக்கையில், நிலைமை கைமீறி இலங்கை இரையானால் அதன் ஆபத்தம்சங்கள் எம்மால் கற்பனைகூட செய்து பார்க்க முடியாதவையாகவே அமையும்.

சோமாலியா, சூடான், எத்தியோப்பியா, கென்யா, தன்சானியா, மடகஸ்கர் ஆகிய நாடுகளை முற்றுமுழுதாகவும், இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளை பகுதியளவிலுமாகக் கொண்டு– மிகவேகம் பெற்றுவரும் இந்துமா சமுத்திரத்தின் போதைக்கடத்தல்களை, பொருண்மிய வல்லரசான அவுஸ்திரேலியாவின் தலைமையில் பொதுப்பொறிமுறை ஒன்றின் கீழ் அணுகுவதும் – முறியடிப்பதும்தான் இந்துமா சமுத்திர நாடுகளினது குறிப்பாக இலங்கையினது எதிர்காலத்தை தக்கவைக்கும்.

## நாளொரு நல்வார்த்தை

"ஆசை பேராசையாக மாறும்போது அன்பு வெறியாக மாறும்போது அங்கே அமைதி நிற்காமலே விலகிச் சென்றுவிடும்"

– மாக்ஸிம் கார்க்கி



# சீனப் போர்க்கப்பலை கண்காணிக்கிறோம்!

## இந்தியா அறிவிப்பு



**கொழும்பு, ஓக. 13**

**சீனாவின் போர்க்கப்பலொன்று கொழும்புத் துறைமுகத்தில் தரித்துநிற்கும் நிலையில், அந்தப் போர்க்கப்பலை உன்னிப்பாகக் கண்காணிக்கிறோம் என்று இந்தியா அறிவித்துள்ளது.**

இது தொடர்பில் இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் அரின்டம் பக்தி தெரிவித்ததாவது:-
இந்தியாவின் பாதுகாப்பு நலன்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் எந்த விடயத்தையும் இந்தியா உன்னிப்பாக அவதானிக்கின்றது. இந்தியா தனது பாதுகாப்பு நலன்களைப் பாதுகாப்பதற்கான அனைத்து அவசியமான நடவடிக்கைகளையும் எடுக்கும். கொழும்புத்துறைமுகத்தில் உள்ளது யுத்தக் கப்பலா? இல்லையா? என்பது எனக்குத் தெரியாது. எனினும் வெளியான தகவல்களைப் பார்வையிட்டதன் அடிப்படையில் இந்திய அரசாங்கம் தனது பாதுகாப்பு நலன்களில் தாக்கம் செலுத்தும் எந்த விடயத்தையும் உன்னிப்பாக அவதானித்து பாதுகாப்பை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்கின்றது என்பதை வலியுறுத்துகின்றேன் - என்றார்.

(ம)

## ரணில் - மனோ தரப்பு அடுத்தவாரம் சந்திப்பு!

கொழும்பு, ஓக. 13

மலையக விவகாரங்கள் தொடர்பில், ஜனாதிபதி ரணிலுக்கும் மனோ தரப்பினருக்கும் இடையில் திட்டமிடப்பட்ட சந்திப்பு அடுத்த வாரம் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெறுவதாக இருந்தது. ஆனால், மலையக மக்கள் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டு 200 ஆண்டுகள் நினைவுநாளை முன்னிட்டு மலையகத்தில் இடம்பெறும் நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்காக தமிழ் முற்போக்குக் கூட்டணி எம்.பிக்கள் சென்றுள்ளதால் இந்தப் பேச்சு அடுத்தவாரத்துக்குப் பிற்போடப்பட்டுள்ளது. (ம)

## நேபாளம் – இலங்கை மோ.சைக்கிள் பேரணி

கொழும்பு, ஓக. 13

புத்தர் பிறந்த இடமான நேபாளத்தின் லும்பினி நகரிலிருந்து கொழும்பு வரையில் மோட்டார் சைக்கிள் பேரணியொன்று இடம்பெறவுள்ளது.

நேபாளம், இந்தியா, இலங்கை உள்ளிட்ட நாடுகளை உள்ளடக்கி இந்தப் பேரணி இடம்பெறவுள்ளது. மூன்று நாடுகளையும் சேர்ந்த முப்படையினரும், இளைஞர்களும் இந்தப் பேரணியில் கலந்துகொள்ளவுள்ளனர். புத்தர் தன் வாழ்வில் அதிக காலங்களைச் செலவிட்ட நகரங்களான குஷிநகர், புத்தகயா, ஷவஸ்திரி, சாரநாத், சங்காரா ஆகிய பிரதேசங்கள் ஊடாகப் பேரணி புறப்பட்டு இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலத்தின் அஜந்தா, எல்லோரா வழியாக இராமேஸ்வரம் வந்து தலைமன்னார் ஊடாக கொழும்பை பேரணி வந்தடையவுள்ளது. (ம-6)

**நாளை**

**14.08.2023**
**திங்கட்கிழமை**
**ஆடி 29**

சுபநேரம் : 12.05 - 01.35
ராகுகாலம் : 07.35 - 09.05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம்
18 . 07 . 1944

மறைவு
08 . 08 . 2023

## கந்தசாமி அன்னம்மா

அல்வாய் கிழக்கு தாமன் தோட்டத்தை பிறப்பிடமாகவும் கப்பூது மற்றும் அச்சுவேலி தோப்பை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி அன்னம்மா கடந்த 08.08.2023 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஆசைப்பிள்ளை லக்ஷிமி தம்பதியரின் மருமகளும், கந்தசாமி (தோரை) அவர்களின் அன்பு மனைவியும், சிறிதரன் (சிறி - ஜேர்மனி), ராஜேஸ்வரி (ரதி - சுவிஸ்), மங்களேஸ்வரி (ரஞ்சி - ஜேர்மனி), சாரதா (பிரான்ஸ்), சிவகுமார் (சிவா - பெல்ஜியம்), வளர்மதி (சோபா - சுவிஸ்), காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி (கிளி), சிவானந்தம் (சிவா), சிவநேசன் (அப்பன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சாந்தரூபி, மோகன், குமார், விக்ரர், ஜெயா, காலஞ்சென்ற பற்குணநாதன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், லவன், சிரன், ஆதுசியா, ஸ்ருதி, பிரியங்கா, சிவநேசன், சாருஜா, ஸ்ருதி, அஞ்சலி, சயனன், நித்தீஸ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.08.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் அச்சுவேலி தோப்பு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 25907) A-1


## காணி விற்பனைக்கு

திருநெல்வேலிச் சந்தியில் இருந்து கொக்குவில் செல்லும் வழியில் ஆடியபாத வீதியில் 200 மீற்றர் தூரத்தில் 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (CS/25702) AH-1

**077 166 3859, 076 243 0394**

## விற்பனைக்கு

- பளையில் வீடு விற்பனைக்கு
- அச்சுவேலி பேரூந்து நிலையத்திற்கு அருகில் அடுக்குமாடி சொகுசுவீடு விற்பனைக்கு
- நாவற்குழியில் காணி விற்பனைக்கு
- தனங்கிளப்பில் காணி விற்பனைக்கு (5 பரப்பும், 4 பரப்பும், 9 பரப்பும்) உடைய காணிகள் உண்டு.

(CS 51617) (N.1)

**தொடர்பு: +94 77 221 5649**

## விற்பனைப் பிரதிநிதி தேவை

**வர்ணப்பூச்சுக்கள் (Paint)** மற்றும் **நீர்க்கசிவு இரசாயனப் பதார்த்தம் (Water Proofing) வெள்ளை சிமெந்து** Super Plast 3 in 1 போன்ற பொருட்களை விற்பனை செய்வதற்கு இத்துறையில் அனுபவமும் ஆர்வமும் துடிப்புமுள்ள விற்பனைப் பிரதிநிதி தேவை.

**விண்ணப்பதாரர் மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருக்க வேண்டும்.**

(CS/51565)AH-1 **077 594 2322**

## அறைகள் வாடகைக்கு

திருநெல்வேலிச் சந்தியிலிருந்து 200m தூரத்தில் கொக்குவில் பக்கமாக ஆடியபாதம் வீதியில் புதிதாகக் கட்டப்பட்ட அறைகள் வாடகைக்குண்டு.

**பல்கலைக்கழக மாணவிகளுக்கு மட்டும்.**

(CS/25915)AH-1

**076 772 0059, 077 166 3859**



### கலந்துரையாடல்

பூநகரி - மணித்தலை புனித செபஸ்தியார் ஆலய வருடாந்த திருவிழா எதிர்வரும் 25ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. திருவிழா ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் பூநகரி பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் 17ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. ஆலயத்தில் வியாபார நடவடிக்கையில் ஈடுபடவுள்ள உள்ளூர் வர்த்தகர்கள் வியாபார நிலையங்களுக்கான பதிவுகளை மேற்கொள்ளுமாறு பூநகரி பிரதேச சபை செயலாளர் கோரியுள்ளார். (ச)

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர்
# ஆறுமுகம் சதாசிவம்

(உரிமையாளர், நந்தி ஓட்டுத்தொழிற்சாலை, தங்கொட்டுவ)



மலர்வு
21.07.1956

உதிர்வு
25.07.2022

ஆண்டு ஒன்று கடந்தாலும்
அழியாத உங்கள் நினைவுகள்
கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண்நோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாமல்
கன காலம் இருப்பீர்கள்.

இந்தநாள் வரையில் உங்களை
இழந்துமே துடிக்கின்றோமே!
அந்தநாட் போல உங்கள்
அன்பிற்குத் தவிக்கின்றோமே!
சொந்தமோ சுகமோ எல்லாம்
சொர்க்கமே நீங்கள் தானே!
எந்தநாள் மீண்டும் உங்களை
எப்போ காண்போம்!

தந்தையாய் இருந்து எம்மைத்
தாங்கியே வாழ்ந்தீர்! இந்த
விந்தைமிகு உலகை வென்று
வாழவும் கற்றுத் தந்தீர்!
சிந்தையில் உங்கள் பாச
நினைவுகள் சுண்டி இழுக்க
வெந்திடும் மனதைத் தேற்ற
வருவீரோ நீங்கள் மீண்டும்!

**நித்தம் உங்கள் நினைவுகளோடு உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல தில்லைக் கூத்தனைப் பிரார்த்திக்கின்றோம்.**

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

**இல. 146, ஜெயகொடி மாவத்தை, தங்கொட்டுவ.**
**தங்கோடை, காரைநகர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீர்க்கசிவைத் தடுப்பதற்கு

உங்கள் புதிய பழைய கட்டடங்கள், கோவில், வில்லு மண்டபங்கள், கொங்கிறீட் சிலப்புகள் அனைத்திற்குமான நீர் கசிவை தடுப்பதற்கும் மற்றும் வீடுகளில் ஏற்படும் வெடிப்புகளை உத்தரவாதத்துடன் சீர்செய்யும் தருவோம். நீங்களும் இரசாயன பொருட்களை பெற்று சீர்செய்யலாம். கொங்கிறீட் பாறைகள், சுண்ணாம்பு கற் பாறைகள் லேசாக உடைப்பதற்கான இரசாயனத்தை யும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**10 வருட உத்தரவாதத்துடன் பொருள்களுக்க விலைக்கழிவும் உண்டு (உலகத்தரம் மிக்க Finexஸ்தாபனத்தாரின் வட மாகாண ஏக விநியோகத்தர்கள்)**

முதன் முதலில் வடமாகாணத்தில் அறிமுகம் செய்தவர்கள்

**North and East Engineering**
55 Stanly Road, Jaffna, Srilanka. FINEX
021 222 2363, 077 524 4177, 077 232 3000
www.northandeastengineering.com

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பான்சிக் கடைகளுக்கு வேலையாட்கள் (பெண்கள்) தேவை.

**சம்பளம் - 25,000 - 30,000**

(CS/51607)AH-1

இல.55, முனீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம் (தனியார் பேருந்து நிலையத்துக்கு அருகில்)

இல.1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் (அரச பேருந்து நிலையத்துக்கு அருகில்)

**074 129 7447, 077 153 6914**

## யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

## பொதுக்கூட்ட அறிவித்தல்

யாழ்ப்பாணம். தொழில்நுட்பவியல் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் **பொதுக்கூட்டம் எதிர்வரும் (20.08.2023) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு** கல்லூரி யின் சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அன்றையதினம் **புதிய நிர்வாக உறுப்பினர்கள் தேர்வு** நடைபெறவுள்ளமையினால் அங்கத்தவர் களையும் மற்றும் அனைத்து பழைய மாணவர் களையும் தவறாது கலந்துகொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

(CS/51642)AH-1 - செயலாளர் -

## C.S.K. English Academy

Grade 03 to Grade 11 - English Language Classes and Spoken with Grammar
English Literature Classes - Grade 10 and Grade - 11
Grade 03 to Grade 11 - Online Zoom Classes (night)

**By: S.Kokulan (English Trained and B.Ed English)**
**T.P. No: 077 923 9474**

107, Nanthavil Amman Road, Kokuvil East, Kokuvil.
Adiyapatham Road, Kokuvil West, Kokuvil.

**ஆங்கில வகுப்புக்கள்**

தரம் 3 முதல் தரம் 11 வரை ஆங்கில வகுப்புக்கள் மேற்படி இடங்களில் நடைபெறுகின்றன. இணைய விரும்புபவர்கள் மேற்குறிப்பிட்ட இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும்.

**Zoom Classes Time Table Details**

| Monday | Tuesday | Wednesday | Thursday | Saturday |
|---|---|---|---|---|
| Gr.6 - 6.00-6.40 | Gr.8 - 6.00-6.40 | Gr.10 - 6.00-6.40 | Gr.10 - 6.00-6.40 | Gr.3 - 6.00-6.40 |
| Gr.7 - 6.45 to7.30 | Gr.9 - 6.45 to 7.30 | Gr.11 - 6.45 to 7.30 | Gr.11 - 6.45 to 7.30 | Gr.4 - 6.45- to 7.30 |

**Grade - 11 Special Zoom Paper Classes and Revision**

## (தரகர்கள் வரவேற்கப்படுகிறார்கள்)

**12 பரப்பு தேவை**

(வெறும் காணி நிலம் அல்லது நிலத்துடன் கூடிய வீடு) மாத வாடகைக்கு தேவை

சாவகச்சேரி, நாவற்குழி, கைதடி, நல்லூர், கோப்பாய், உடுவில், உயரபுலம், கொக்குவில், மானிப்பாய்

நிலம் உள்ள உங்கள் நண்பர்களுக்கு தெரியப்படுத்தவும்


புகைப்படம் எடுத்து வாட்ஸ்அப்பில் பகிரவும்

**Vajira House Company**
**071 593 3299**

1916 ம் ஆண்டு தொடக்கம், **107** வருட 4 தலைமுறையாக தொடரும் கட்டிட நிர்மாண துறையினர்

**வஜிரா ஹவுஸ் நிறுவனம்**

23, டீல் பிளேஸ் A, கொள்ளுபிட்டி



Mr. டைரோன் மேலாளர்

## தேவை

வீட்டில் தங்கியிருந்து வயதான பெண் ஒருவரைப் பராமரிப்பதற்கும், சமையல் செய்வதற்கும் 40 - 55 வயதுக்குட்பட்ட நம்பிக்கைக்குரிய பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

**077 958 3573**

## வாடகைக்கு

இல.27, ஸ்ரான்லி ரோட் யாழ்ப்பாணம். (கடை வாடகைக்குண்டு)

**075 803 9586**

## காணி விற்பனைக்கு

பளை நகரில் புலோப்பளையில் உள்ள காணியொன்றும் வயல்காணியும் விற்பனைக்குண்டு.

**077 932 5343**

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ். மாநகர சபை எல்லைக்குள் 2 / 1 அறை வீடு 3 மாதங்களுக்கு வாடகைக்குத் தேவை. (CS/25006)AH-1

**077 566 9245**

## ஆசிரியர் தேவை

ஆண்டு 5 கற்பவருக்கு தமிழ், கணிதம், ஆங்கிலம் வீட்டிற்கு (இருபாலை சந்தி) வருகை தந்து கற்பிக்கக்கூடியவர்கள் தேவை. கொடுப்பனவு உண்டு. பெயரை யும் ரெலிபோன் இலகத்தையும் S.M.S இல் பதியவும்.

**077 557 4325**

## பராமரிப்பாளர் தேவை

யாழ்ப்பாணம். கச்சேரிக்கு அருகில் உள்ள பிரபல விருந்திநர் விடுதிக்கு பராமரிப்பாளர் தேவை. ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது.

**077 442 4240**

## மணமகள் தேவை

1996. யாழ். இந்து. ஆயிலியம். Engineer, U.S.A (பூர்வீகம் - காரைநகர்), மணமகன் பதிவு #8722. தரகர் கூலி இல்லை. பதிவுக் கட்டணம் மட்டுமே. www.EQMarriage Service.com இணையவழி திருமணசேவை பம்பலப்பிட்டி. கொழும்பு 04. அழையுங்கள் (CS 25004) AH-1

**076 664 9401**

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் கோவில் வீதியில் வீடு வாடகைக்கு உண்டு.

**074 330 8968**

## திருமண முகூர்த்த நாட்களுக்கான பதிவு

அண்ணாமலையான் ஸ்ரீ ராகவேந்திரர் கலாசார திருமணமண்டபத்தில் 21.08.2023, 23.08.2023, 04.09.2023, 10.09.2023, 11.09.2023 ஆம் முகூர்த்த திகதிகளில் உங்கள் பிள்ளைகளிற்கு திருமணம் செய்ய விரும்புவோர் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.மண்டபத்தை 09 - 05 மணிவரை பார்வையிடலாம்

**அண்ணாமலையான் ஸ்ரீ ராகவேந்திரர் கலாசார திருமண மண்டபம்**
**இல.542, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.**

**021 222 1355, 021 222 1356**

## நேர்முகத்தேர்வு

**எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 19 ஆம் திகதி கிளிநொச்சியில் AKR HOTEL இல் ருமேனியா** நேர்முகத்தேர்வுகள் நடைபெறவுள்ளது.

தொடர்புகளுக்கு:
**077 013 2288 / 077 730 9971**
**051 222 5205 / 051 222 2363**
(கிரிசாந்தி மேன்பவர் கன்சல்டன்ஸ், அட்டன்)

## The Royal College of Jaffna

ஆண்டு 10, 11, 12 மாணவர்களுக்கு சிறு குழுக்களாக ஆங்கிலம், வணிகம், கணக்கீடு, I.C.T வகுப்புக்கள் ஆரம்பமாகியுள்ளன.
Kuberan Building, சங்கானை.

**Tel: 077 675 1649**

## கடை வாடகைக்குத் தேவை

யாழ்.நகரில்/ திருநெல்வேலியில் (பலாலி வீதி) ஆகிய இடங்களுக்குட்பட்ட பிரதேசத்தில் கடை ஒன்று வாடகைக்குத் தேவை.

**077 411 5601, 077 410 9151**

## தேவை

"ஆண் உதவியாளர்கள் எங்கள் பலசரக்குக் கடைக்குத் தேவை. மாதத்துக்கு **30,000/=** சம்பளம் வழங்கப்படும். (உணவும் தங்குமிடமும் வழங்கப்படும்)

**S.A.W & Sons - Hambantota**
**077 480 3379**

## கடை விற்பனைக்கு

வண்ணார்பண்ணை சிவன்கோவிலுக்கு முன் வீதியில் கடையொன்று விற்பனைக்குண்டு. (CS/51640) AH-1

**077 138 0670**

## அறைகள் நாள் வாடகைக்கு உண்டு

வெள்ளவத்தையில் காலி வீதியில் Tiles பதித்த Attach Bathroom உடன் நாள் வாடகைக்கு அறைகள் உண்டு. (கொமர்ஷியல் Bank Opposite)

**076 965 9679, 071 262 5405**

## மணமகன் தேவை

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் (Rc, 1985), PhD - Doctorate (கலாநிதி) பட்டம் பெற்று தனியார் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராக (Medical Science) தொழில்புரியும் மணமகளுக்கு (குடும்பத்தில் ஒரே பிள்ளை) தகுந்த மணமகனை (Doctor) பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

**077 251 7450** (CS/51546) AH-1
**Proposal4750@gmail.com**

## மணமகன் தேவை

1990, யாழ். கிறிஸ்தவம், பூசம், Lawyer, வல்வெட்டித்துறை, மணமகள் பதிவு #6019, தரகர் கூலி இல்லை. பதிவுக் கட்டணம் மட்டுமே. www.EQMarriage Service.com இணையவழி திருமணசேவை பம்பலப்பிட்டி, கொழும்பு 04. அழையுங்கள் (CS 25005) AH-1

**076 664 9401**

## மணமகள் தேவை

1988, யாழ். இந்து. சதயம். Electrical Engineer, Australia (பூர்வீகம் - காரைநகர்), மணமகன் பதிவு #7108, தரகர் கூலி இல்லை. பதிவுக் கட்டணம் மட்டுமே. www.EQMarriage Service.com இணையவழி திருமணசேவை பம்பலப்பிட்டி, கொழும்பு 04. அழையுங்கள் (CS 25004A AH-1

**076 664 9401**

## வேலையாள்கள் தேவை

**கட்டட நிர்மாண நிறுவனம் ஒன்றிற்கு காங்கேசன்துறை** மற்றும் **திருநெல்வேலியில்** வேலை செய்வதற்கு **மேசன், கூலி** தொழிலாளர்கள் தேவை.

**077 239 7211**

## விற்பனைக்குண்டு

வெள்ளவத்தையில் 950, 1260, 1400, 1620 sqft Apt,3p, 5p, 8p, 12p காணி. வீடுகள். Shops Galle Rd க்கு அருகில். பம்பலப்பிட்டியில் 1000, 1050, 1650 sqft Apt, 7p,8.5p, 22p தெஹிவளையில் 1000, 1200, 1350 sqft Apt,5p, 6p, 8.6p கல்கிசையில் 1100, 2200 sqft Apt,3p புதியவீடு 8.5p வீடு Galle Rd க்கு 300m இல் இரத்மலானை. வத்தளை. கொட்டாஞ்சேனை மற்றும் பருத்தித்துறை. யாழ்ப்பாணம். நல்லூரில் வீடுகள். காணிகள் விற்பனைக்குண்டு. (C525003)(AH-1)

**076 306 0013**

# அபிவிருத்தி அலுவலர்கள் தென்மராட்சிக்கு மாற்றம்

சாவகச்சேரி, ஓக. 13

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களில் கடமையாற்றிய 21 அபிவிருத்தி அலுவலர்கள் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் கடந்த வியாழக் கிழமை கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர்.

வருடாந்த இடமாற்றப் பட்டியலின் பிரகாரம் இந்த இடமாற்றம் அவர்களுக்கு வழங்கப்பட்டது. அவர்களுக்கான இடமாற்றக் கடிதம் கடந்த புதன்கிழமை வழங்கப்பட்ட நிலையில் அவர்கள் நேற்று வெள்ளிக்கிழமை கடமைகளைப் பொறுப்பேற்றனர். (ச-ரி3-9)

# நிறுவை, அளவைகள் முத்திரையிடும் பணி

பளை, ஓக. 13

பச்சிலைப்பள்ளி பிரதேசசபைக்குட்பட்ட வியாபார,வர்த்தக மற்றும்தொழில் நிலையங்கள் பயன்படுத்தும் அளவை மற்றும் நிறுவை உபகரணங் களுக்கு இந்த வருடத்துக்கு உரிய முத்திரையிடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த வியாழக் கிழமையும் வெள்ளிக்கிழமை யும் பிரதேச சபை வளாகத்தில் இந்தப் பணிகள் முன்னெடுக்கப் பட்டன (ச-ரி29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ருவிற்றருக்கு அமெரிக்கா அபராதம்

வொஷிங்டன், ஓக. 13 ட்ரம்பின் பதிவுகளை வழங்க தாமதம் செய்ததற்காக ருவிற்றர் நிறுவனத்துக்கு 3.5 லட்சம் அமெரிக்க டொலர் அபராதம் விதித்து அமெரிக்க நீதிமன்று தீர்ப்பளித்துள்ளது. ருவிற்றர் நிறுவனத்தி டமிருந்து அமெரிக்காவின் கொலம்பியா நீதிமன்றம் ட்ரம்ப் பற்றிய ருவிற்றர் பதிவுகளை வழங்க உத்தரவிட்டிருந்தது. ஆனால் ருவிற்றர் நிறுவனம் நீதிமன்று கேட்ட தகவல்களை வழங்கத் தாமதம் செய்தது. இந்தநிலையில் குறிப்பிட்ட காலத்துக்குள் கேட்கப்பட்ட தக வல்களை வழங்காததனால் ருவிற்றர் நிறுவனத்துக்கு அபராதம் விதித்துள்ளது.

(ச-இ)


## பகுதிநேர வேலையாட்கள் தேவை

* ஆண் A/L, கணினி அறிவு உள்ளவர்கள்
* கனரக வாகன சாரதி தேவை

40 வயதிற்கு மேற்பட்டவர்கள் AD Licence உள்ளவர்கள் மட்டும்.

* வாகன உதவியாளர்கள் தேவை

விற்பனை வாகனத்திற்கு உதவியாளர்கள் தேவை

* களஞ்சிய காப்பாளர் தேவை

A/L, கணினி அறிவு உள்ளவர்கள் ஆண்கள் விரும்பத்தக்கது.

**குறிப்பு:**

திருநெல்வேலி, கோண்டாவில் பகுதியை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது.

**தொடர்புக்கு:077 009 0189**

(CS 25935) A-1


## கிழவன்காடு கலாமன்றத்தின் கண்ணீர்ப் பூக்கள்

எமது கலாமன்ற அறநெறிப் பாடசாலை ஆசிரியராக கடமையாற்றும் திருமதி புஸ்பரஞ்சினி ஹம்சன் அவர்களின் பாசமிகு தந்தையார்

### கிருஷ்ணபிள்ளை கதிர்காமத்தம்பி

தோற்றம்: 26.11.1951 மறைவு : 10.08.2023




அவர்களின் மறைவுத்துயர் அறிந்து எமது ஆழ்ந்த அனுதாபங்களை குடும்பத்தினருக்கு தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பர தில்லைக்கூத்தன் திருவடிகள் சேரப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

நிர்வாக சபையினர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள். கிழவன்காடு கலாமன்றம் காரைநகர் - யாழ். கிளை.

## மரண அறிவித்தல்

தோற்றம் 14 . 12 . 1968 மறைவு 07 . 08 . 2023



### துரைராசசிங்கம் செல்லப்பாநாதன் (மணி)

சுழிபுரம் கிழக்கைப் பிறப்பிடமாகவும் சுவிஸ்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட துரைராசசிங்கம் செல்லப்பாநாதன் (மணி) அவர்கள் கடந்த (07.08.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துர்ரைராசசிங்கம் செல்வபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், மீனலோஜினி (சுவிஸ்) அவர்களின் அன்புக் கணவரும், பிரபுசன் (சுவிஸ்). சாருஜனா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், அமரர் கோபாலசாமி. புனிதவதி தம்பதியரின் மருமகனும். லோகேஸ்வரி (அமரர்). சற்குணேஸ்வரி. இளைய தம்பிநாதன். வைரவநாதன் (அமரர்). நாயகப்பிள்ளை (வவுனியா). இராசநேசன் (பிரான்ஸ்). மாசிலாமணி. பக்தகௌரி. வைத்தியநாதன் (பிரான்ஸ்). சீமான் (அமரர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும். இராசேந்திரம் (அமரர்). மனோகரன். சிவசக்தி. செந்தில்குமார் (அமரர்). ரோஸ் வேர்சினி (பிரான்ஸ்). சியாமினி ஆகியோரின் அன்பு மைத்துனரும், நீலவேணி (கஜேந்திரன்). கோகுலன் (தராங்கினி) அவுஸ்திரேலியா. சயந்தினி (சிவலிங்கம்) லண்டன். பவித்திரா (ஐங்கரன்). பிரதாப். அமரா. தனுசீரா ஆகியோரின் மாமனாரும், அர்ச்சனா (ஜெயக்குமார்). உஷா (பகீரதன்). விஜிதா. மதுசன் ஆகியோரின் சித்தப்பாவும். வியூலா (பிரானஸ்). லிசானியா (பிரான்ஸ்). நிதானியா (பிரான்ஸ்). துஷாந். சேதுசன் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.08.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணியளவில் அவரின் இல்லத்தில் (சுழிபுரம் கிழக்கு. சுழிபுரம். நெல்லியான் வைரவ கோவில் வீதி) நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **குடும்பத்தினர்.**

**தொ.பே.இல: 077 4820 733**

(CS 25933) A-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 26 . 01 . 1942 மறைவு 12 . 08 . 2023



### செல்வரட்ணம் பத்மாதேவி

காரைநகர் சிதம்பராமூர்த்தி கேணியடியை பிறப்பிடமாகவும், இல.17, பிரம்படி லேன் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வரட்ணம் பத்மாதேவி நேற்று (12.08.2023) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அமரர் அண்ணாமலை கந்தையாபிள்ளை செல்வரட்ணத்தின் (நெடுங்கேணி "செல்வம்ஸ்") அன்பு மனைவியும், அமரர்களான நாகலிங்கம் செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகளும். அமரர்களான கந்தையாபிள்ளை பூரணம் தம்பதியரின் அன்பு மருமகளும், அமரர்களான சபாரட்ணம். பாக்கியம், இராசம்மா, சர்மா, சந்திரசேகரம், தருமையா, கிருபால், நாகரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும். அமரர்களான தில்லைநாதன். விசுவலிங்கம். துரைராசசிங்கம். தேவராணி மற்றும் உமாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும், வரதராசா. சற்குணராசா. ஜெகராசா. ஜெயமாலினி ஆகியோரின் அன்புத் தாயாரும். சிவலலிதா. பவானி. தர்சினி. தவராஜா (ஆசிரியர். புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியும். பவித்திரா. ராகவி. யதுஷன். நர்மிகா. சர்மிகா. லக்ஷா. சர்வின். பாலகீர்த்தனா. கஜன் ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.08.2023) திங்கட்கிழமை காலை 8.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **குடும்பத்தினர்.**

**தொ.பே.இல:077 239 5858**

(CS 25930) A-1

## மரண அறிவித்தல்



### திருமதி ஞானாம்பிகை இராசதுரை

**(ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியை சாவகச்சேரி இந்துக் கல்லூரி)**

கல்வயல், சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஞானாம்பிகை இராசதுரை (ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியை சாவகச்சேரி இந்துக் கல்லூரி) அவர்கள் கடந்த (11.08.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் திரு.கந்தையா இராசதுரை (ஓய்வுபெற்ற வங்கி முகாமையாளர் தேசிய சேமிப்பு வங்கி-சாவகச்சேரி) அவர்களின் ஆருயிர் மனைவியும். காலஞ்சென்றவர்களான கந்தையா காசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும். காலஞ்சென்றவர்களான கந்தையா சின்னாச்சிப் பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும். சுதர்ஜினி கலைச்செல்வன் (பிரதம கணக்காளர், வடமாகாண சுகாதார அமைச்சு). சுரேஷ்குமார் (City of Brampton - கனடா). சுபாஜினி முகுந்தன் (Reasearch Scientist கனடா). ஞானராஜ் (தேசிய சேமிப்பு வங்கி - யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும். கலைச்செல்வன் (பிரதம கணக்காளர் வட மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்). நந்தா சுரேஷ்குமார் (Spectrum Health care system கனடா). முகுந்தன் (Network Analyst கனடா). வினோதா ஞானராஜ் (ஆசிரியர் உடுப்பிட்டி. மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியாரும், கீர்த்திகன் (மருத்துவ பீட மாணவன், ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்). வித்தகன் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி). பிரணவன் (கனடா). லக்ஷியா (கனடா). அருண் (கனடா). ஆரணி (கனடா). அனுஜன் (கனடா). அபிசன் (ஹாட்லிக் கல்லூரி) அபிசனா (மெதடிஸ் பெண்கள் உயர்தர பாடசாலை). அபிதா (மாணிக்க வாசகர் வித்தியாலயம்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும். காலஞ்சென்றவர்களான குமார சாமி. தையல்நாயகி. சின்னம்மா. சிவபாக்கியம். சோமசுந்தரம். திருநாவுக்கரசு. கனகாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரியும். கண்மணி. சுப்பிரமணியம். சிவனேஸ்வரன் மற்றும் காலஞ் சென்றவர்களான சின்னம்மா. சங்கரப்பிள்ளை. கைலாயபிள்ளை. கிருஸ்ணபிள்ளை. சுபத்திரா. தங்கராசா. தங்கவடிவேலு. நாகபூசணி. பூமணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.08.2023) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் 1.30 மணியளவில் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

**இராமலிங்கம் வீதி,**
**கல்வயல், சாவகச்சேரி.**

**077 757 0294, 077 441 2200,**
**021 2057 830**
**Canada - 6473176560**

(CS 25929) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலகுவான வழிமுறைகளை பின்பற்றி நீங்களும் இன்றே



# கனடா

# செல்லலாம்!

## A) ஆரம்பக்கல்வி

1. 4 தொடக்கம் 17 வயதிற்குட்பட்ட பிள்ளைகள் ஆரம்பக்கல்விக்கு விண்ணப்பிக்கலாம்
2. அனுமதி பெற்றுக்கொண்டதன் பின் பெற்றோர்களும் பிள்ளைகளுடன் கனடாவிற்கு செல்லலாம்
3. பெற்றோர்களின் கல்வித் தகமை அத்தியாவசியமாக கருதப்படமாட்டாது
4. பெற்றோர்கள் மற்றும் பிள்ளைகளின் விசா அனுமதிக்குப் பிறகு பள்ளிக் கட்டணம் செலுத்தக்கூடிய வாய்ப்பு
5. நாங்கள் பிள்ளையின் பெற்றோருக்கும் கனேடிய வேலை வாய்ப்புகளை பெற்றுக்கொடுக்கின்றோம்



**சிறந்த சலுகைகள்**

1) நீங்கள் தொழில் அனுமதியை பெற்றவுடன், உங்கள் பிள்ளைக்கு இலவசக் கல்வியைப் பெற அனுமதிக்கப்படுவீர்கள்.
2) நீங்கள் தொழில் அனுமதியைப் பெற்றவுடன், உங்கள் மனைவி மற்றும் 25 வயதிற்குட்பட்ட பிள்ளைகளை கனடாவிற்கு அழைத்து வரலாம்.

**தேவையான ஆவணங்கள்**

1. பாதுகாவலர் ஆவணங்கள் (கஸ்டோடியன் பேப்பர்கள்) மிக முக்கியமானது (பாதுகாவலர் ஆவணங்கள் இல்லாமல் விசா வழங்கப்படமாட்டாது)
2. பண வைப்பை உறுதி செய்தல் (நிலையான வைப்பு / சேமிப்பு கணக்குகள் போன்றவை)
3. இலங்கையுடன் உறவுகளை பேணுவதை உறுதிசெய்வதற்கான ஆவணங்கள் (சொத்துக்கள் / வருமானம்)
4. பட்டியலிடப்பட்ட பிற ஆவணங்கள்

## B) கல்வி + வேலை மதிப்பாய்வு திட்டங்கள்



1. கனடாவில் 48 வார வேலை பயிற்சி
2. முறையான பயிற்சிக்குப் பின் வேலை அனுமதியை பெறமுடியும்
3. ஒரு வருட சேவைக்குப் பின் நீங்கள் கனேடிய PR க்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர்
4. விண்ணப்பதாரரின் குடும்பத்தினரும் உடன் வரலாம்
5. பயிற்சிக் கட்டணம் விசா உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே செலுத்த வேண்டும்

**தகமைகள்**

1. வயது: 40 வயதிற்குட்பட்ட ஆண்கள் / பெண்கள்
2. கல்வித்தகமை: குறைந்தபட்சம் 12ம் வகுப்பு (Grade 12) மற்றும் அதிகபட்சம் இளங்கலை பட்டம் (Bachelors) வரை
3. அனுபவம் : குறைந்தபட்சம் 01 வருடம்
4. ஆங்கிலம் எழுத, படிக்க கூடிய திறன்

**முக்கிய திட்டங்கள்**

1. விவசாய ஆய்வுத்திட்டம்
2. பொறியியல் மற்றும் வர்த்தக மறுஆய்வு திட்டம்
3. சுகாதார தகவல் ஆய்வுத்திட்டம்
4. தாதியர் மதிப்பாய்வு திட்டம்
5. திட்ட மேலாண்மை மறுஆய்வுத்திட்டம்
6. வணிக மேலாண்மை மற்றும் மதிப்பாய்வு திட்டம் மற்றும் பல....

## C) வர்த்தக வேலை + கற்றல் திட்டங்கள்

1. கனடாவில் 41 வார வேலை பயிற்சி
2. பயிற்சி காலத்திலும் வேலை செய்யக்கூடிய வாய்ப்பு
3. விண்ணப்பத்தின் போது சரளமான ஆங்கில அறிவு தேவையில்லை
4. குறைந்தபட்ச கல்வித் தகமைகள் எதுவும் அவசியமில்லை
5. விண்ணப்பதாரரின் குடும்பத்தினரும் உடன்வரக்கூடிய வாய்ப்பு
6. பயிற்சிக் கட்டணம் விசா உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே செலுத்த வேண்டும்

**முக்கிய திட்டங்கள்**

a. Plumbing work based training program
b. Electrical work based training program
c. Carpentry work based training program

## வேலை வாய்ப்புகள்

உங்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்கக்கூடிய கனடாவில் உள்ள பல புகழ்பெற்ற ஏஜென்சிகளுடன் நாங்கள் உங்களை இணைக்கிறோம்.

**பிரபலமான வேலைவாய்புக்கள்**

1. கனரக வாகன சாரதி
2. பண்ணை தொழிலாளர்
3. உற்பத்தித் தொழிலாளர்
4. கட்டுமானத் தொழிலாளர்
5. சமையல்காரர்கள் (Cooks and Chefs)
6. இயந்திரவல்லுனர் (Mechanics)
7. கோழிப்பண்ணை தொழிலாளர்கள்
8. உணவு மேற்பார்வையாளர்கள்

**தகமைகள்**

1. 40 வயதிற்குட்பட்டவர்கள்
2. ஆங்கில அறிவு
3. குறைந்தபட்சம் 12 ஆம் வகுப்பு வரை கல்வி கற்றிருத்தல்
4. 01 வருடத்திற்கும் மேலான முன் அனுபவம்

**Consolidated Academic Lanka (Private) Limited**

No.22-B, Station Lane, Nugegoda.
admissions@academiclanka.com
www.academiclanka.lk

0740 270 054 - ஆரம்பக்கல்வி (தமிழ் மற்றும் சிங்களம்)
0760 090 166 - கல்வி + வேலை மதிப்பாய்வு திட்டங்கள் + தொழில் விசா (தமிழ் மற்றும் சிங்களம்)
0770 852 514 - தகவல்களை ஆங்கில மொழி மூலமாக பெற்றுக்கொள்ள
0112 890 692 - பொதுவான தகவல்களை பெற்றுக்கொள்ள


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் • 20 • 08 • 1936



மறைவு • 11 • 08 • 2023

## திருமதி பரமலிங்கம் பங்கஷாம்பாள் (பகவதி)
## (நயினாதீவு)

நயினாதீவு 7ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் 160, சேர் பொன்.இராமநாதன் வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமலிங்கம் பங்கஷாம்பாள் (பகவதி) கடந்த (11.08.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகநாதபிள்ளை பரமலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செல்லப்பா - பார்வதிபிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நாகநாதப்பிள்ளை பார்வதிப்பிள்ளை செல்லம்மா ஆகியோரின் மருமகளும், காலஞ்சென்ற உதயகுமாரன் (உதயா செரமிக் உரிமையாளர், யாழ்ப்பாணம்) மற்றும் நந்தகுமாரன் (கனடா), அருள்மொழி, அன்புமொழி (ஓய்வுநிலை ஆசிரியர், யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை), தேன்மொழி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், வத்சலா (உதயா செரமிக்), ருக்மணி (கனடா), காலஞ்சென்ற Dr. தட்சணாமூர்த்தி (வைத்திய அத்தியட்சகர், வாழைச்சேனை) மற்றும் சத்தியபாலன் (கனடா) ஆகியோரின் மாமியும், காலஞ்சென்றவர்களான சத்தியேஸ்வரி (குடும்பநல உத்தியோகத்தர்), குகதாசன் (குகன் மோட்டோர்ஸ், கொழும்பு) மற்றும் இராமச்சந்திரன் (லண்டன்), அன்னலிங்கம் (குகன் மோட்டோர்ஸ்- வவுனியா), யோகலிங்கம் (லண்டன்), காலஞ்சென்ற கனகாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரியும், மகேந்திரநாதன் (ஜேர்மனி), சந்திரவதி (உரிமையாளர், குகன் மோட்டோர்ஸ்), மகாலெட்சுமி (லண்டன்), ஜெதீஸ்வரி (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், தேசிய சேமிப்பு வங்கி), உதயராணி (லண்டன்), காலஞ்சென்றவர்களான கனகசேகரம்பிள்ளை, மாங்கயற்கரசி, சோமேஸ்வரி மற்றும் இரத்தினேஸ்வரி (ஓய்வுநிலை ஆசிரியர்), சண்முகானந்தன் (ஓய்வுநிலை பட வரைஞர், நிள அளவைத் திணைக்களம்), காலஞ்சென்ற லோகநாதன் ஆகியோரின் மைத்துனியும், ஜனனி (அவுஸ்திரேலியா), சிவாணி (கணக்காளர்- கொழும்பு), கடம்பன் (முகாமையாளர், HNB -நானாட்டான்), துவாரகன் (உதயா செரமிக்), எழிலினி (மலேசியா), கவிதா (இந்தியா), விஜயதர்சன் (ஆசிரியர், மட்.தளவாய் விக்கினேஸ்வரா வித்தியாலயம்), கஜவதனன் (சிரேஷ்ட மென்பொருள் பொறியியலாளர்), பபிதா (விரிவுரையாளர் SLIIT), காயத்திரி (கனடா), விஷாலி (கனடா) ஆகியோரின் பேர்த்தியும், யஸ்வின், லியானா (அவுஸ்திரேலியா), ஸாரா, சிதேன், ஆட்ரேயன் (கொழும்பு), நிதின், செல்வா (மலேசியா), சண்மாதுரி, பவித்திரன், குருஷித் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.08.2023) திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, நண்பகல் 12.00 மணியளவில் பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.160, சேர் பொன். இராமநாதன் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
021 222 7431

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 25934) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# காஞ்சன கைகளுக்கு வருகிறது அதிகாரம்!

## நாட்டுக்குப் பெரும் தீங்கான விடயம் என மின்பாவனையாளர் சங்கம் சுட்டிக்காட்டு



கொழும்பு, ஓக. 13

மின்சாரத்தைக் கொள்வனவு செய்வதற்காக எரிசக்தி அமைச்சருக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட்டு புதிய ஆபத்தான சட்டவரைவொன்றைக் கொண்டு வர நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இதனால் நாடு பெரும் நெருக்கடியைச் சந்திக்கும் என்று மின்பாவ னையாளர் சங்க பொதுச்செயலாளர் சஞ்ஜீவ தம்மிக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

24 மணிநேரமும் தடையின்றி மின்சாரம் வழங்குவதற்காக 40 பில்லியன் ரூபாவுக்கு மின்சாரம் கொள்வனவு செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். இது மக்களை தவறாக வழிநடத்தும் முயற்சி. சகல அவசர மின்தேவைகளையும் 2009ஆம் ஆண்டு 20ஆம் இலக்கப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு சட்டத்தின் கீழேயே கொள்வனவு செய்ய முடியும்.

இந்த விடயத்தில் இறுதி அங்கீகாரம் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் கைகளிலேயே உள்ளது. 2016ஆம் ஆண்டிலிருந்து 16 தடவைகள் தேவையில்லாமல் மின்சாரம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. அமைச்சின் யோசனைக்கு பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தடைபோடும் எனக் கருதி புதிய வழியில் மின்சாரம் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அமைச்சருக்கு கூடுதலான அதிகாரங்களை வழங்கி அந்தச் சட்டவரைவு தயாரிக்கப்பட்டுள்ளது. இது மிகவும் ஆபத்தான சட்டவரைவு. இந்தச் சட்டவரைவினூடாக மின் உற்பத்தி நிலையங்களுக்கு அனுமதி வழங்குதல், மின்கட்டணத்தைத் தீர்மானித்தல் போன்ற விடயங்கள் அமைச்சரின் கைகளுக்கு மாற்றப்பட்டுள்ளன - என்றார். (ச-6)

SRI LANKA RED CROSS SOCIETY

## அறிவித்தல்

பின்வரும் நபர்களுடைய சேவைக் காலம் முடிவுற்றுள்ளமையினால் அவர்கள் இலங்கை செஞ்சிலுவை சங்கத்தில் பதவி வகிப்பதில்லை எனவும் பணியில் இல்லை எனவும் இலங்கைப் பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.



642660187 V இலக்க தேசிய அடையாள அட்டை உடைய திரு. செல்ல ஹென்னெதிகே நிமல் குமார் (எஸ்.எச்.நிமல் குமார் என்றும் அழைக்கப்படுபவர்) தேசிய செயலாளர்.



630984190 V இலக்க தேசிய அடையாள அட்டை உடைய திரு.பிரசன்ன பியும் தசநாயக்க நிதி ஆணைக் குழுத் தலைவர்



562821325 V இலக்க தேசிய அடையாள அட்டை உடைய திசாநாயக்க ராலலாகே சுனில் திசாநாயக்க மத்திய ஆளுனர் சபை உறுப்பினர்

இலங்கை செஞ்சிலுவை சங்கம் அதன் பொதுச் சபை கூட்டத்தையும் தேர்தலையும் சட்டபூர்வமாகவும் யாப்புக்கமையவும் 2023.06.24 ஆம் திகதி நடாத்தி, அதன் புதிய தேசிய செயலாளரையும், நிதி ஆணைக் குழுத் தலைவரையும், மத்திய ஆளுனர் சபை உறுப்பினர்களையும் தேர்ந்தெடுத்தது.

ஆதலினால், 2023.06.24 ஆம் திகதி முதல் மேற்படி நபர்களின் செயல்களுக்கும் கூற்றுக்களுக்கும் இலங்கை செஞ்சிலுவை சங்கம் பொறுப்பேற்க மாட்டாது.

அன்டன் எஸ். விக்டோரியா
தேசிய செயலாளர்
இலங்கை செஞ்சிலுவை சங்கம்

# சிவில் பாதுகாப்புத்துறையை வலுப்படுத்தல்

## கோபா குழுவில் ஆராய்வு

கொழும்பு, ஓக. 13

சிவில் பாதுகாப்புத் திணைக்களம் அரசாங்கக் கொள்கையுடன் பொருந்தும் வகையில் எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சட்டரீதியான கட்டமைப்பைத் தயாரிக்குமாறு கோபா குழு பணித்துள்ளது.

சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் கடந்த மூன்றாண்டுகளுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைகள் மற்றும் தற்போதைய செயலாற்றுகை தொடர்பில் விசாரணை செய்வதற்கு அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவான கோபா குழு நாடாளுமன்றில் அண்மையில் கூடியது.

சிவில் பாதுகாப்புத் திணைக்களம் தொடர்பான அரசாங்கக் கொள்கையுடன் பொருந்தும் வகையில் எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சட்[illegible]ரித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு குழுவின் தலைவர் லசந்த [illegible]தார். (ச-இ)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடனடி வேலைவாய்ப்பு

புதிய கம்பனிக்கு உத்தியோகத்தர்கள் உடன் தேவை. கணினி அறிவுள்ள O/L தகுதி ஆண், பெண், கல்வித் தகைமை, திறமைக்கு ஏற்ப பதவிகள் வழங்கப்படும்.

**076 1124 145**

## வேலையாட்கள் தேவை

புடைவைக் கடையொன்றுக்கு ஆண், பெண் விற்பனையாளர் தேவை. (சுன்னாகத்தை அண்மித்த பகுதிகளில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.)
பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம். தொடர்பு:

**077 17 23554**

## தேவை

யாழ்ப்பாண மாவட்ட தோட்டக் குடிலில் தங்கியிருந்து தோட்ட வேலை செய்யப் படித்த இளைஞர் தேவை.
சம்பளம் பேசி முடிவு செய்யப்படும்.

**071 858 4882**
**077 927 6008**

CS/51638/AH-1

## வீடு வாடகைக்குத் தேவை

கோண்டாவில், கொக்குவில் பகுதிகளில் வீடு ஒன்று வாடகைக்குத் தேவை.
(தரகர்கள் தேவையில்லை)

**075 260 4360**

## வேலையாட்கள் தேவை

* யாழ். திருநெல்வேலியில் குழந்தைகளை பராமரிப்பதற்கு பணிப்பெண் தேவை. (தங்கிநிற்பவர்கள் விரும்பத்தக்கது)
* ஐஸ்கிறீம் வான் உதவியாளர் தேவை. (தங்கிநிற்பவர்கள் விரும்பத்தக்கது)

**077 3696 714, 077 049 2210**

## காணி விற்பனைக்கு

பருத்தித்துறையில் புலோலி வட கிழக்கில் 10 பரப்பில் அமைந்த தோட்டக் காணி உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:**076 4511 436**
**0777 111 716**

## ஆல் சிலோன் டிஸ்றிபியூட்டர்ஸ்
## All Ceylon Distributors
## வேலைவாய்ப்பு

- முகாமையாளர்
- கணினி இயக்குநர்
- விற்பனையாளர்கள் தேவை.

**077 494 9683**
**077 077 6469**

CS/25927/AH-1

## பெண் துப்பரவு பணியாளர் தேவை [முழுநேர/பகுதிநேர வேலைவாய்ப்பு]

* யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் விருந்தினர் விடுதி ஒன்றிற்கு பெண் துப்பரவு பணியாளர்கள் தேவை.
* வயது எல்லை 35 வயதிற்கு மேல்.
* முழு நேரமாகவோ பகுதி நேரமாகவோ வேலை செய்யக் கூடியவர்கள் விரும்பத்தக்கது.

சம்பளம் :- 25000/=

தொடர்புகளுக்கு: **077 320 1599**

## இரண்டு வீட்டுடன் காணி விற்பனைக்கு

A9 வீதி, மிருசுவில் புகையிரத நிலையம் என்பவற்றுக்கு 100 M தொலைவில் வடக்கு மிருசுவில் வீதியில் 2 வீட்டுடன் கூடிய 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. வார நாட்களில் திங்கள் முதல் புதன் வரை பார்வையிடலாம்.

தொடர்பு:

**077 5250 882**

## சிறுநீரகம் தேவை

34 வயதுடைய பெண் ஒருவருக்கு B+ குருதி வகையைக் கொண்ட ஒருவருக்கு B+, B- அல்லது O+ அல்லது O- குருதி வகையைக் கொண்ட சிறுநீரகம் அவசரமாகத் தேவை.

**077 8336 848**


## டெங்குக்...

தீவிரமாகும் அபாயம் இருப்பதால் நாளை திங்கட் கிழமை தொடக்கம் ஒரு வாரம் டெங்குக் கட்டுப்பாட்டு வாரமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் ஆயிரத்து 472 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 62 பேரும், மன்னார் மாவட்டத்தில் 76 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 106 பேரும், வவுனியா மாவட்டத்தில் 103பேரும் டெங்கு நோயாளர்களாக இந்த ஆண்டின் முதல் ஐந்தரை மாதங்களில் அடையாளம் காணப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணத்தில் கரவெட்டி மற்றும் நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரிகள் பிரிவிலேயே அதிகளவான டெங்குத் தொற்றாளர்கள் கண்டறியப்பட்டனர்.

இந்த நிலையில், வட மாகாணத்தில் பருவப் பெயர்ச்சி மழைக்குப் பின்னர் டெங்கு தீவிரமாகப் பரவக்கூடிய அபாயம் உள்ளமையால், பருவப்பெயர்ச்சி மழை ஆரம்பிக்க முன்னர், டெங்கு பரவும் இடங்களை இல்லாது ஒழிப்பதன் மூலம் டெங்குப் பரவலைக் கட்டுப்படுத்த முடியும் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இதேவேளை - டெங்குக் கட்டுப்பாட்டு வார நடவடிக்கைகள் தொடர்பில் யாழ். மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன் விடுத்துள்ள அறிக்கையில், நாளை திங்கட்கிழமை, நாளை மறுநாள் செவ்வாய்க்கிழமை மற்றும் புதன்கிழமைகளில் வீடுகள், அரச மற்றும் தனியார் திணைக்களங்கள், நிறுவனங்கள், மதத் தலங்கள், கட்டட நிர்மாணப் பகுதிகள், உயர்கல்வி நிறுவனங்கள் என்பவற்றில் டெங்குக் கட்டுப்பாட்டுச் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. எதிர்வரும் 17ஆம் திகதி பாடசாலைகள், முன்பள்ளிகள், தனியார் கல்வி நிலையங்கள், சகலவிதமான உணவு கையாளும் நிறுவனங்கள், தங்கு விடுதிகள், கடற்கரைகள் என்பவற்றில் டெங்குக் கட்டுப்பாட்டுப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

எதிர்வரும் 18 மற்றும் 19 ஆம் திகதிகளில் அரச மற்றும் தனியார் மருத்துவமனைகள், வடிகால்கள், மயானங்கள், பொது இடங்கள், மைதானங்கள், பராமரிப்பற்ற காணிகள் என்பவற்றில் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. இறுதி நாளான 20ஆம் திகதி பிரதேச செயலக மட்டத்தில் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைச் சிறப்பாக முன்னெடுத்த செயற்பாட்டாளர்களையும் கிராமங்களையும் கௌரவித்தல் செயற்பாடும் முன்னெடுக்கப்படவுள்ளது. (அ-ஓ,27,125)


## விற்பனைக்கு

பட்டா வான்கள், இசுசு லொறிகள்.

**077 77 222 15**

## Filter Water

உங்கள் வீடுகளுக்கு விரைவாக தண்ணீர் விநியோகம் செய்யப்படும்.

தொடர்புகளுக்கு : **074 30 30 311**
**077 38 58 804**

**Home Delivery**

Kondavil Junction, Kondavil, Palali Road, Jaffna.

## வீடு வாடகைக்கு

திருநெல்வேலிச்சந்தியிலிருந்து 200m தூரத்தில் கொக்குவில் பக்கமாக ஆடியபாதம் வீதியில் புதிதாகக் கட்டப்பட்ட 4 அறைகளும், சமையலறையும், இரண்டு குளியலறைகளும் உள்ளடங்கலாக கீழ்வீடும், மேல்வீடும் தனித்தனியாக வாடகைக்குண்டு.

**077 166 3859, 076 243 0394**

CS/25913/AH-1


## தேடல்

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகக் கொண்ட பெந்தர ஹபுருகல (Benthara, Haburugala) பிரதேசத்தில் 1979, 1980 களில் சேவையாற்றிய **வைத்தியர் சின்னத்தம்பி தர்மலிங்கம்** அவர்களுடன் தொடர்புகொள்ள விரும்புகின்றோம். அவரைப் பற்றிய தகவல் அறிந்தவர்கள் கீழ் தரப்பட்ட தொலைபேசி எண்ணைத் தொடர்புகொள்ளவும். அவரது உறவினர்கள் அவரைத் தொடர்புகொள்ள விரும்புகின்றனர்.

**தொடர்பு:071 404 0640**
**வைத்தியர் சஜிதரன்**

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியை
**திருமதி புஸ்பறஞ்சினி ஹம்ஷன்**
அவர்களின் தந்தையார்
**கிருஸ்ணபிள்ளை கதிர்காமத்தம்பி**
அவர்கள் 10.08.2023 அன்று இறைபதம் எய்தியதையிட்டு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 26.11.1951 மறைவு 10.08.2023

யா/ கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் மகா வித்தியாலயம் ஊர்காவற்றுறை.

## நாளொன்றுக்கு...

மூர்த்தி தெரிவித்தார். நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சராசரியாக நாள் ஒன்றுக்கு 120 பேர் பல்வேறு விபத்துப் பாதிப்புக்களால் சேர்க்கப்படுகின்றனர். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு நேரடியாகச் சேர்க்கப்படுபவர்களும், ஏனைய மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக இங்கு அனுப்பப்படுபவர்களும் இதில் உள்ளடங்குகின்றனர்.

இவ்வாறு வருபவர்களில் 5 தொடக்கம் 10 பேர் எலும்பு முறிவுடன் காணப்படுகின்றனர். சிறிய முறிவுகளுக்கு உடனடியாகச் சிகிச்சையளிக்க முடியும். பெரும்பான்மையான என்பு முறிவுகளுக்கு சத்திர சிகிச்சையே மேற்கொள்ளவேண்டியுள்ளது. இது சிக்கலான சத்திரசிகிச்சை. இதன்போது என்புகள் ஒழுங்குபடுத்தப்பட்டு சிலவேளைகளில் தகடு வைக்கவேண்டிய சூழல் ஏற்படலாம். இதற்கு 3 தொடக்கம் 4 மாதங்கள் காத்திருக்கவேண்டிய சூழல் காணப்படுகின்றது. இதற்கான மருந்துப்பொருள்களுக்குப் பற்றாக்குறை நிலவுகின்றது. இந்தச் சத்திரசிகிச்சைக்கு 5 இலட்சம் ரூபா முதல் 10 இலட்சம் ரூபா வரையில் செலவாகும். வீதிகளில் பயணிக்கும்போது இளையோர் அவதானமாக இருக்கவேண்டும். புது மோட்டார் சைக்கிள் வாங்கியவுடன் வேகமாகப் பயணித்து விபத்தில் சிக்குகின்றனர். மேலும், மன அழுத்தங்களுடன் பயணிப்பதாலும், பயணிக்கும்போது வேறு சிந்தனைகளுடன் செல்வதாலும் விபத்துகள் சம்பவிக்கின்றன. அவதானமாக இருப்பதன் ஊடாக விபத்துகளைத் தவிர்க்கலாம் - என்றார். (அ-ஓ,125)

## விகாரைக்குத்...

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் நிறுத்தப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்றுக் காலை 9 மணி தொடக்கம் 10.30 மணி வரை பிக்குகளால் வீதியை மறித்துப் போராட்டம் நடத்தப்பட்டது.

திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட திருகோணமலை - நிலாவெளி பிரதான வீதியின் இடப் பக்கத்தில் உள்ள பெரியகுளம் சந்தியை அண்மித்துள்ள, தொல்லியல் திணைக்களத்தால் தொல்லியலுக்குரிய இடமாக அறிவிக்கப்பட்டுள்ள பகுதிக்கு அருகில், பொரலகந்த ராஜமகா விகாரை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த விகாரை அமைக்கப்படவுள்ள பிரதேசத்தில் 2 ஆயிரத்து 202 தமிழ் குடும்பங்களும், 538 சிங்களக் குடும்பங்களும் வசிக்கின்றன எனவும் விகாரை அமைக்கப்படுவதால் இனமுறுகல் ஏற்படும் வாய்ப்பு உள்ளதாகவும் தெரிவித்தே விகாரை நிர்மாணப் பணிக்கு கிழக்கு ஆளுநர் தடைவிதித்திருந்தார். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே நேற்றுப் போராட்டம் நடத்தப்பட்டது.

'சிங்கள, தமிழ், முஸ்லிம் சகோதரத்துவத்தைக் குழப்புகின்ற ஆளுநரை அனுப்புவோம்', 'புத்தசாசன அமைச்சால் அனுமதி வழங்கப்பட்ட விகாரையின் நிர்மாணப் பணியை நிறுத்த சம்பந்தன் யார்?' போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு பிக்குகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

'நாங்கள் தொல்லியல் காணிக்குள் விகாரை அமைக்கவில்லை. அதற்கு அண்மையில் உள்ள புத்தசாசன அமைச்சால் விகாரைக்காக வழங்கியுள்ள காணியில்தான் அமைக்கப் போகின்றோம். இதனால் எவருக்கும் பிரச்சினை இருக்காது' என்று பிக்குகள் கூறுகின்றனர்.

ஆனால், அந்தப் பகுதி மக்கள் பௌத்தர்களே இல்லாத இடத்தில் யாருக்காக இந்த விகாரை? என்று கேள்வி எழுப்புவதுடன் காலம் காலமாக இப்பகுதியிலும் இந்தப்பகுதியைச் சுற்றியுள்ள சூழலிலும் தமிழ் மக்களே வாழ்ந்து வருகின்றார்கள். எனவே, இதற்கு அனுமதி கொடுக்கக்கூடாது. விகாரை அமைக்க அனுமதி வழங்கினால், அது மூவின மக்களினதும் ஒற்றுமையை சீர்குலைத்து, இன வன்முறைக்கும் வித்திடும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. அதுமட்டுமல்லாமல், இலங்கையானது உலகளவில் இன நல்லிணக்கத்துக்கான செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்ற நிலையில், அந்தச்செயற்பாட்டிலும் இது பாதிப்பை ஏற்படுத்தும் என்கின்றனர் அந்தப்பகுதி மக்கள்.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த அந்தப் பகுதி வாசி ஒருவருடன்பிக்கு ஒருவர் கருத்து மோதலில் ஈடுபட்டு எச்சரிக்கை விடுத்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ஓ,இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருத்துவ...

கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மையில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மற்றும் சிறுவர் அபிவிருத்திக் குழுக் கூட்டம் என்பனவற்றில் இந்த விடயம் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் மாத்திரம் கடந்த 3 ஆண்டுகளாக சிறுமிகள் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்ட 106 சம்பவங்கள் தொடர்பில் சட்ட மருத்துவ அதிகாரியின் அறிக்கை வழங்கப்படவில்லை. சட்ட மருத்துவ அதிகாரிகள் மாற்றலாகிச் சென்றமை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் அந்த அறிக்கைகள் இதுவரை கிடைக்கப்பெறவில்லை. இதன் காரணமாக சந்தேகநபர்களுக்கு எதிராக வழக்கை தொடர முடியாத நிலைமை இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இது தொடர்பில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தியிடம், 'உதயன் பத்திரிகை' வினவியது.

'எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் சம்பந்தப்பட்ட அனைத்து மருத்துவ அறிக்கைகளையும் உடனடியாகச் சமர்ப்பிக்குமாறு சம்பந்தப்பட்ட மருத்துவ அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளேன். எனவே 31ஆம் திகதி முன்னர் அனைத்து அறிக்கைகளும் கிடைக்கப்பெறும்' என்று அவர் பதிலளித்தார். (அ-ஓ.5.125)

## போரின்...

இதற்குப் பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போருக்குப் பின்னரும் பல்வேறு சமூக நெருக்கடிகளும் பொருளாதார நெருக்கடிகளும் தற்கொலைக்குக் காரணமாக அமைகின்றன. சுகாதாரத் திணைக்களத்தின் ஊடாக உளவள ஆலோசகர்கள், மருத்துவநிபுணர்கள் சிகிச்சையைப் பெற வலியுறுத்தவேண்டும். அவ்வாறு பெறமுடியாதவர்கள் அபயம் - 071071 2345 என்ற தொலைபேசி சேவையினூடாகவும் ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளலாம்.

தற்கொலை செய்து கொள்பவர் அதனைச் சொல்லமாட்டார். ஆனால், ஏதோ ஒரு வடிவில் அதனை வெளிப்படுத்துவார். நேரடியாக வெளிப்படுத்தாவிட்டாலும் மறைமுகமாக வெளிப்படுத்திருப்பார். அதை உணர்ந்து அவர்களுக்கு உளநல ஆலோசனையைப் பெற்றுக் கொடுக்கவேண்டும். நண்பர்கள், குடும்பத்தவர்கள், உறவினர்கள் மூலமே அவர்களை அடையாளம் கண்டு ஏதாவது ஒரு வழியில் சிகிச்சைக்குக் கொண்டு வரவேண்டும் - என்றார். (அ-ஓ,125)

## பொருளாதார...

பொருளாதார அழுத்தங்கள் மற்றும் எதிர்காலம் தொடர்பான நிச்சயமற்ற நிலைமை ஆகியன இந்த உளவியல் பிரச்சினைகளுக்கு பிரதான காரணம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிய நிச்சயமற்ற நிலைமை, இளையோரின் எதிர்பார்ப்புகள் சிதைந்துள்ளமை, கல்வி கற்றாலும் சிறப்பாக வாழ முடியாத எதிர்மறையுடன் கூடிய நிச்சயமற்ற மன நிலை, பிள்ளைகளை வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்க பணத்தைப் பெற்றுக் கொள்ள முயற்சித்து முடியாமல் போயுள்ளமை, பிள்ளைகள் வெளிநாடு சென்ற பின்னர் தாம் தனித்துப் போவோம் என்ற எண்ணம் என்பனவே இந்த மன அழுத்தங்களுக்குப் பிரதான காரணம்.

இப்படியான மன அழுத்தங்கள் அதிகரிப்பது மனச்சோர்வு போன்ற நோய்களுக்கு வழிவகுக்கும் எனவும் ரூமி ரூபன் மேலும் தெரிவித்துள்ளார். (அ-ஓ,இ)

## தொடர்...

ளார். கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த நாராயணன் கோவர்த்தனன் (வயது - 42) என்ற 3 பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

கடந்த 5 நாள்களாக காய்ச்சல் நீடித்துள்ளது. அவர் தனியார் மருத்துவ மனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். அதன் பின்னர் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனைக்கு மாற்றப்பட்டுள்ளார். அங்கு மாற்றப்பட்டு சில மணி நேரத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ஓ,26)

## மோ.சைக்கிளிலிருந்து...

போது வீழ்ந்தவர் உயிரிழந்துள்ளார். யாழ். நகர், அபூபக்கர் வீதியைச் சேர்ந்த கனகசபை பாலராசா என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இவர் 3 பிள்ளைகளின் தந்தையாவார்.

கடந்த 10ஆம் திகதி இரவு 7.30 மணியளவில் தனது வீட்டுக்கு அருகிலேயே இவ்வாறு மோட்டார் சைக்கிளால் வீழ்ந்துள்ளார். காயமடைந்த அவர் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தநிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

இவர் மதுபோதையில் பயணிக்கும் போதே வீழ்ந்துள்ளாரென இறப்பு விசாரணைகளின்போது தெரிவிக்கப்பட்டுள்ளது. இறப்புவிசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம் குமார் மேற்கொண்டார். (அ-ஓ,26)

**காணி விற்பனைக்கு**

திருநெல்வேலி மருத்துவபீட பல்கலைக்கழகத்துக்கு அண்மையில் 3 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
(தரகர் தேவையில்லை)

**077 209 8826**

**காணி விற்பனைக்குண்டு**

தெல்லிப்பளை K.K.S. வீதியில் சந்தியில் இருந்து 60 மீற்றர் தூரத்தில், பழைய D.R.O கந்தோர் ஒழுங்கையில் இடது புறமாக இரண்டாவது காணி 3 பரப்பு விற்பனைக்குண்டு.
(தரகர் தேவையில்லை)

தொடர்பு: **077 968 7777**

(cs.25001) (2.6)

**ஆடு விற்பனைக்கு**

தாவடியில் சணல் இன கடா ஆடும் மறி ஆடும் விற்பனைக்குண்டு.

**077 689 4344**

**வீடு வாடகைக்கு**

கொடிகாமச் சந்தியிலிருந்து 200 மீற்றர் தூரத்தில் கண்டி வீதியில் உள்ள வீடு வாடகைக்குண்டு.

**077 964 0508**

**பெண் வேலையாள் தேவை**

யாழில் இயங்கும் பிரபல்ய கலர்லாப் ஒன்றிற்கு வேலைக்கு பெண்கள் தேவை. முன் அனுபவம் தேவையில்லை. யாழ். நகரை அண்மித்து இருப்போர்க்கு முன்னுரிமை. வயது: 18-25
தொடர்புகளுக்கு:

**0777 55 0008**

**காணி விற்பனைக்கு**

கச்சேரியடியில் 2 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
4 பக்க சுற்று மதில்,
வெட்டு கிணறு உண்டு.
A9 றோட்டில் இருந்து 50m தூரம்.

தொடர்பு: **074 134 1567**

**கணித ஆசிரியர் தேவை**

யாழ்ப்பாணம் மாவட்டத்தைச் சேர்ந்த BSc பட்டம் (கணிதம்) பெற்ற அனுபவமுள்ள ஆசிரியர் புத்தளத்தில் உள்ள பிரபலமான தேசிய பாடசாலைக்கு தங்கியிருந்து முழு நேரமாக கற்பிப்பதற்குத் தேவைப்படுகின்றார். கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
(உணவு. தங்குமிடம் இலவசம்)

**077 089 2266**
**077 534 3800**

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் நுணாவில் பகுதியில் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**நிலப்பரப்பு**

- நுணாவில் மேற்கு சாவகச்சேரி வேதாக்கன்னி கந்தசாமி கோவிலுக்கு அருகாமையில் உள்ளது.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீர் ஊற்று சூழல்
- ஒரு பரப்பின் விலை பிரதான வீதியை முகப்பாக கொண்ட காணித் துண்டுகள் 14 லட்சமும் 18 அடி பாதையை முகப்பாக கொண்ட காணித் துண்டுகள் 12 லட்சம் வரையும் உள்ளது.
- பார்வையிடும் நேரம்: காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

தொடர்புகளுக்கு - ஜெயம்

**077 8147 389**
**077 9865 457**

**வேலைவாய்ப்பு**

1. Graphic Designer (கிராப்பிக் டிசைனர்)
2. Marketing Staff
(சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்)



மேற்குறிப்பிட்ட பதவி வெற்றிடங்களுக்கு தகைமையுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஆர்வமுள்ளவர்கள் நாளை (14.08.2023) திங்கட் கிழமை காலை 9.00 மணிமுதல் பி.ப. 2.00 மணிவரை தங்கள் சுயவிபரக் கோவையுடன் நேரில் சமுகம்தரவும்.

உதயன்

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SINGER FURNITURE

# ஓம்!

UP TO

# 50% விலைக்கழிவு!

சிங்கரின் சிறப்பு தளபாடங்கள் கண்காட்சிக்கு உங்களை அன்புடன் அழைக்கின்றோம்!

2023 ஆகஸ்ட் 15, 16, 17 திகதிகளில்

காலை 9.30 - மாலை 7.00 வரை



சிங்கர் காட்சியறை

NSR கட்டிடம் ஸ்ரான்லி வீதி - யாழ்ப்பாணம்

BOC CARDS · பான் ஏஷியா வங்கி · Sampath Cards · HSBC · COMMERCIAL BANK · HNB · LOLC FINANCE · NDB bank · SEYLAN

தொடர்பு

021 222 5408




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.08.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடைக் கொடும்பனி
மழைக்குளிரை அஞ்சி
கோடி புரத்தினுள்
உறங்கிவிடலாமோ.
ஆடை கலைந்து தலை
மீதினில் அணிந்தோம்
ஆழக்கடல் தயிர்
எனக்கடைய வந்தோம்.
மஹாகவி உருத்திரமூர்த்தி

பக்கங்கள்: 08

சஞ்சீவி

Registered as a Newspaper

மலை : 33 வள்ளுவர் ஆண்டு : 2053 ஆடி 28 ஞாயிற்றுக்கிழமை (13.08.2023) சிகரம்: 164

# சமஷ்டிக்காகப் போராடுவது யார்?



○ நிலாந்தன்

தேசத்தை அங்கீகரிக்கும் சமஷ்டிக் கட்டமைப்பே இனப்பிரச்சினைக்கான தீர்வாக அமையமுடியும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தனது நிலைப்பாட்டை மீண்டும் ஒரு தடவை தெளிவுபடுத்தியிருக்கிறது. 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கு கட்சிகள் தமது தரப்பு யோசனைகளைத் தருமாறு ஜனாதிபதி அண்மையில் கேட்டிருந்தார். அதற்கமைய முன்னணியானது 13ஆவது திருத்தத்தை நிராகரித்து சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்திருக்கிறது.

அதேசமயம் கடந்த நான்காம் திகதி யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர்களைச் சந்தித்த விக்னேஸ்வரன் ஒரு கருத்தைத் தெரிவித்திருந்தார். தமிழ்க் கட்சிகள் எல்லாவற்றினதும் இறுதி இலக்கு கூட்டாட்சி தான் என்ற போதிலும் அதை அடைவதற்கான வழிவகை எது என்பதை தமது கட்சி உட்பட எந்த ஒரு கட்சியும் வெளிப்படுத்தவில்லை என்று அவர் கூறியுள்ளார். சமஷ்டியை அடையும் வழி தெரியாதபடியால் அரசியலமைப்பில் இருக்கும் 13ஆவது திருத்தத்தைப் பலப்படுத்தி அதிகாரங்களைப் பெற்றுக்கொள்வோம். பின்னர் அதிலிருந்து மேலும் முன்னேறிச் செல்லலாம் என்றும் விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

சமஷ்டியைப் பெறுவதற்கான வழிவகை குறித்த அவருடைய கருத்து யதார்த்தமானது. கடந்த 14ஆண்டுகளாக மட்டுமல்ல அதற்கு முன்னரும் அதாவது ஆயுதப் போராட்டத்துக்கு முன்னரும் தமிழ் மிதவாதிகளிடம் சமஷ்டியை அடைவதற்கு உரிய வழிவரைபடம் எதுவும் இருக்கவில்லை. கடந்த 14 ஆண்டுகளாக தமிழ்க் கட்சிகள் 'போராடுகிறோம் போராடுகிறோம்' என்று கூறிக்கொள்கின்றன. ஆனால் அந்த அரசியல் இலக்கை நோக்கி எவ்வாறு அறவழியில் போராடுவது என்பது குறித்து எந்த ஒரு கட்சியிடமும் தெளிவான பார்வையோ அல்லது அதற்கு வேண்டிய அரசியல் ஒழுக்கமோ அல்லது அதற்குத் தேவையான அர்ப்பணிப்போ இருப்பதாகத் தெரியவில்லை.

விக்னேஸ்வரன் அது தன்னிடமும் இல்லை என்பதை ஒப்புக்கொள்கிறார். ஆனால் அதற்காக அதாவது போராடத் தயாரில்லை என்பதற்காக அல்லது போராடத் தெரியவில்லை என்பதற்காக கிடைப்பதைப் பெற்றுக் கொள்வது என்ற தத்துவம் ஏற்புடையதல்ல. கிடைக்கும் அரைகுறைத் தீர்வை ஏற்றுக் கொண்டால் அதை நோக்கியே தமிழ் மக்களின் கவனமும் சக்தியும் குவிக்கப்படும். மாகாணசபைக்குள் எப்படி தங்களுடைய இருப்பைத் தக்கவைப்பது என்பதிலேயே கட்சிகளின் கவனம் முழுதும் குவிக்கப்பட்டு விடும். அதாவது தனது இறுதி அரசியல் இலக்கை நோக்கி முன்னேறுவதற்குப் பதிலாக தமிழ் அரசியலானது மாகாணசபைகளுக்குள் தேங்கி நின்றுவிடும். கிடைக்கும் இடைக்கால ஏற்பாடுகளை நிராகரித்துவிட்டு விட்டுக்கொடுப்பின்றிப் போராடிய மக்களே இறுதி வெற்றியைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால் இங்கே பிரச்சினை என்னவென்றால், அப்படிப்பட்ட போராட்டம் எதுவுமே நடக்கவில்லை என்பதுதான். இப்பொழுது நடக்கும் எல்லாப் போராட்டங்களும் பதில் வினையாற்றும் 'ரியாக்டிவ்' போராட்டங்களே. எதிர்த் தரப்பின் ஆக்கிரமிப்புகளுக்கு எதிர்ப்புக் காட்டுபவை.

13ஐ நிராகரிக்கும் முன்னணியானது சக கட்சிகளுக்கும் இந்தியாவுக்கும் எதிராகக் கோஷம் எழுப்பினால் மட்டும் போதாது. அதைவிட ஆழமான பொருளில் சமஷ்டிக்காகப் போராடவும் தியாகங்களைச் செய்யவும் தயாராக இருக்க வேண்டும். சமஷ்டியை அடைவதற்கான வெளியுறவுக் கொள்கை எது என்பதை வெளிப்படையாக விவாதிக்கவேண்டும். அதற்கு வேண்டிய கட்டமைப்புகளை உருவாக்க வேண்டும். தாயகத்தில் நிலப்பறிப்பு மற்றும் சிங்கள - பௌத்தமயமாக்கலுக்கு எதிராக முன்னணிதான் அதிகமாகப் போராடுகிறது. அதன்மூலம் தமிழ் அரசியலை அவர்கள் நொதிக்கச் செய்கின்றார்கள். ஆனால் அந்தப் போராட்டங்களில் அநேகமானவை ஒரு கட்சிப் போராட்டங்கள், அல்லது சிறு திரள் போராட்டங்கள், அல்லது கவனவீர்ப்புப் போராட்டங்கள். அதாவது தொகுத்துக்கூறின் அரசாங்கத்துக்குத் தாக்கமான விதங்களில் சேதத்தை ஏற்படுத்தாத போராட்டங்கள்.

கடந்த 14ஆண்டுகளில், 'பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி' வரையிலுமான பேரணி, 'எழுக தமிழ்' போன்றவற்றை நீக்கிப் பார்த்தால் பெரும்பாலான போராட்டங்கள் கவவீர்ப்புப் போராட்டங்கள் அல்லது சிறுதிரள் போராட்டங்கள்தான். இந்தப்போராட்டங்களால் அரசாங்கத்துக்குப் பொருளாதார ரீதியாக நட்டம் எதுவும் ஏற்படவில்லை. குறைந்தபட்சம் அரசு நிர்வாகத்தை முடக்குவதற்குக்கூட இந்தப் போராட்டங்களால் முடியவில்லை. அதாவது இந்தப்போராட்டங்களால் அரசாங்கத்துக்கு நோகக்கூடிய விளைவுகள் ஏற்படவில்லை. அல்லது வெளியுலகத்தைக் கவர்ந்திழுக்கும் சக்தியும் இந்தப்போராட்டங்களுக்கு இருக்கவில்லை.

இந்த விடயத்தில் விக்னேஸ்வரன் மட்டுமல்ல தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழரசுக் கட்சி, குத்துவிளக்கு கூட்டணி உட்பட எல்லாருமே பொறுப்பாளிகள் தான். ஈழத்தமிழர்கள் சமஸ்டிக்காகத் தாக்கமான விதத்தில் போராடவில்லை என்பதைத்தான் கடந்த 14 ஆண்டுகளும் நிரூபித்திருக்கின்றன.

இந்தப் பலவீனத்தைக் கண்டுபிடித்த காரணத்தால் தான் அரசாங்கம் துணிச்சலாக சிங்கள பௌத்த மயமாக்கலைத் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகிறது. நாடு சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் வாங்கிக் கொண்டிருக்கும் ஒரு காலகட்டம் இது. ஐ.நா.வில் மனித உரிமைகள் பேரவைக்குள் ஒரு பொறிமுறை இலங்கைக்கு எதிராகச் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. அது போர்க்குற்றங்கள் தொடர்பாக சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரித்துக் கொண்டிருக்கிறது. அது ஒரு பலவீனமான பொறிமுறைதான். மனித உரிமைகள் ஆணையருடைய அலுவலகத்துக்கு உட்பட்ட ஒரு பொறிமுறைதான். என்றாலும் அது இலங்கை அரசாங்கத்துக்கு நெருக்கடியைக் கொடுக்கக்கூடியது. இப்படிப்பட்டதோர் பின்னணியில், அரசாங்கம் சர்வதேச நாணய நிதியம், மேற்கு நாடுகள், இந்தியா, ஜப்பான், ஐ.நா. போன்றவற்றுக்குப் பதில்கூற வேண்டிய ஒரு காலகட்டத்தில் சிங்கள - பௌத்த மயமாக்கலை அடக்கி வாசிக்க வேண்டும். ஆனால் நிலைமை தலைகீழாகக் காணப்படுகிறது.

அண்மைக் காலங்களில் சிங்கள - பௌத்த மயமாக்கல் பல்வேறு தளங்களில் பல்வேறு பகுதிகளில் செறிவாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அதற்குக் காரணம் என்ன? காரணங்கள் இரண்டு. ஒன்று, தமிழ்த் தரப்பின் போராட்டங்கள் அரசாங்கத்துக்கு நோகக்கூடியவைகளாக இல்லை என்பது. இரண்டாவது காரணம், அடுத்த ஆண்டு நடக்கவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் எப்படித் தனிச் சிங்கள - பௌத்த வாக்குகளை கவர்வது என்று ரணில் சிந்திக்கின்றார். ஏனெனில் ஜனாதிபதித் தேர்தலில் அவர் பெரும்பாலும் ராஜபக்சக்களின் ஆதரவோடு களமிறங்கும் வாய்ப்புக்களே அதிகம் தெரிகின்றன. அவ்வாறு ராஜபக்சக்களோடு இணைந்து வாக்குக் கேட்டால் தமிழ் வாக்குகள் தனக்கு அதிகளவு கிடைக்காது என்றும் அவர் பயப்பட முடியும். ஏனென்றால் கடந்த 14 ஆண்டுகளாக தமிழ் மக்கள் ஒரே ஓர் அரசியல் தீர்மானத்தில் மட்டுமே ஒற்றுமையாக முடிவெடுத்து வந்திருக்கிறார்கள். அது ராஜபக்சக்களுக்கு எதிராக வாக்களிப்பது என்ற தீர்மானம்தான். கடந்த 14 ஆண்டுகளாக நடந்த எல்லா ஜனாதிபதித் தேர்தல்களின்போதும் தமிழ் மக்கள் பெரும் போக்காக ராஜபக்சக்களுக்கு எதிராகத்தான் வாக்களித்தார்கள். அதிலும் குறிப்பாக ராஜபக்சக்களின் ஆணையை ஏற்று யுத்தத்தை வழிநடத்திய தளபதியான சரத் பொன்சேகா ராஜபக்சக்களுக்கு எதிராகத் திரும்பியபோது அவருக்கும் வாக்களிக்கக்கூடிய ஒரு நிலைமை காணப்பட்டது.

எனவே ராஜபக்சக்களின் பதில் ஆளாகத் தேர்தலில் களமிறங்கினால் தமிழ் வாக்குகளைத் திரட்டுவதில் தனக்கிருக்கக்கூடிய நிச்சயமின்மைகளைக் கவனத்தில் எடுத்து, ரணில் தனிச்சிங்கள வாக்குகளைத் திரட்டுவது என்ற முடிவுக்கு வந்துவிட்டார் போலத் தெரிகிறது. அதனால்தான் சிங்கள - பௌத்த மயமாக்கலையும் நிலப்பறிப்பையும் முடுக்கி விட்டுள்ளார். அதிலும் அரசாங்கத்துக்கு நோகாத தமிழ்க் கட்சிகளின் போராட்டங்கள் அவருக்குச் சாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும். எவ்வாறெனில், சிங்கள - பௌத்த மயமாக்கலுக்கு எதிராக தமிழ்க் கட்சிகள் போராடப்போராட அது சிங்கள மக்கள் மத்தியில் ரணிலுக்கிருக்கக்கூடிய செல்வாக்கை உயர்த்தும். சிங்கள - பௌத்தத்தைப் பாதுகாப்பதற்காக அவர் விகாரைகளைக் கட்டுகிறார் என்று அவர்கள் நம்புவார்கள். எனவே அரசாங்கத்துக்கு எதிரான தமிழ்க் கட்சிகளின் சிதறலான, தொடர்ச்சியற்ற சிறுதிரள் போராட்டங்கள் மறைமுகமாக ரணிலின் வாக்கு வங்கியைப் பலப்படுத்துகின்றவைகளாகவே காணப்படுகின்றன.

மாறாக அரசாங்கத்தின் பொருளாதாரத்தை முடக்கும் விதத்தில் அல்லது அரச நிர்வாகத்தை முடக்கும் விதத்தில் அல்லது வெளி உலகத்தின் கவனத்தை ஈர்த்து வைத்திருக்கும் விதத்தில் போராடுவதென்றால் தமிழ் மக்கள் பெருந்திரளாகப் போராட வேண்டும். 'பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி' வரையிலுமான போராட்டத்தை மேற்கத்திய நாடுகளின் தூதரகங்கள் ஆர்வத்தோடும் எதிர்பார்ப்போடும் கவனித்தன.

கடந்த 14ஆண்டு காலமாக தமிழ் மக்கள் மத்தியில் நடக்கும் ஆர்ப்பாட்டங்களில் பெரியவை அல்லது கவனிப்புக்கு உரியவை என்று கருதத்தக்க போராட்டங்கள் அனைத்தும் பெருந்திரள் போராட்டங்கள்தான். அவை ஒரு கட்சியின் போராட்டங்கள் அல்ல. பல கட்சிப் போராட்டங்கள்தான். கட்சிகளும் சிவில் சமூகங்களும் பாதிக்கப்பட்ட மக்களின் அமைப்புகளும் புலம்பெயர்ந்த தமிழ்த் தரப்புகளும் சமயப் பெரியார்களும் இணைந்து முன்னெடுத்த போராட்டங்கள்தான். அண்மையில்கூட முல்லைத்தீவில் ஒப்பீட்டளவில் கவனிப்புக்குரிய ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

அண்மைக் காலங்களில் முன்னெடுக்கப்பட்ட ஊர்வலங்களில் அது ஒப்பீட்டளவில் பெரியது. அது கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழிக்கு நீதி கேட்டு நடத்தப்பட்ட ஒரு போராட்டம். அதுவும் ஒரு கட்சிப் போராட்டம் அல்ல. எனவே கடந்த 14 ஆண்டு கால அனுபவத்தைத் தொகுத்துப் பார்த்தால் தெளிவாகத் தெரிவது என்னவென்றால், கட்சிகளும் சிவில் அமைப்புகளும், புலம்பெயர்ந்த தமிழ்த் தரப்புகளும் இணைந்து போராடினால் தான் அது வெளியுலகத்தின் கவனத்தை ஈர்க்கும். இல்லையென்றால் அவை ரணில் விக்கிரமசிங்கவின் சிங்கள பௌத்த வாக்கு வங்கியைத்தான் வளர்க்கும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கடன் விவகாரம்

# ஆபிரிக்க நாடுகளிடம் பாடம் கற்குமா இலங்கை?

○ அ.நிக்ஸன்



அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு எதிரான ரஷ்ய - சீன வியூகங்களுக்கு இடமளிக்காமல் நெளிவுசுழிவுகளோடு பிறிக்ஸ் கூட்டமைப்புக்குள் இந்தியா பயணிக்க முற்படும் நிலையில், மேற்கு ஆபிரிக்க நாடுகள், அமெரிக்கா - பிரான்ஸ் ஆகிய வல்லாதிக்க நாடுகளுடன் இராஜதந்திர உறவைத் துண்டித்து, ரஷ்யாவுடன் கூட்டுச் சேருவதற்கான முயற்சிகளில் ஈடுபடுகின்றன.

பர்கினோ பசோ, மாலி, கினி, நைஜர் ஆகிய சிறிய ஆபிரிக்க நாடுகள் கடந்த மாதம் ரஷ்யாவுடன் கூட்டுச் சேர்ந்தமை, புவிசார் அரசியல் பொருளாதார நிலைமைகளில் பெரும் தாக்கத்தைச் செலுத்துமென சர்வதேச ஊடகங்கள் அச்சம் கலந்த தொனியில் வர்ணிக்கின்றன. பிறிக்ஸ் நாடுகள் பொதுநாணயப் பயன்பாடு பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கும் நிலையில், மேற்கு ஆபிரிக்க நாடுகள் அமெரிக்காவுக்கும் டொலருக்கு எதிராகவும் கருத்திட்டிருப்பது துணிச்சல் மிக்க நடவடிக்கை எனலாம். இந்த நாடுகளில் கடந்த மாதம் ஏற்பட்ட இராணுவக் கிளர்ச்சிகளையடுத்தே இந்த மாற்றம் ஏற்பட்டிருக்கிறது.

### கிளர்ச்சிக்கு என்ன காரணம்?

அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் மேற்கு ஆபிரிக்க நாடுகளுக்குக் கடன் கொடுத்து, அந்த நாடுகளில் உள்ள இயற்கை வளங்களைச் சுரண்டியிருக்கின்றன. இதனால் ஆபிரிக்க நாடுகளில் வறுமையும் பசியும் தொடர்ச்சியாக நிலவி வந்தன. இந்தப் பின்புலத்திலேயே ரஷ்யாவுடன் கூட்டுச் சேர்ந்து தத்தமது சிறிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்குரிய ஏற்பாடுகளை இந்த ஆபிரிக்க நாடுகள் மேற்கொள்ளத் தயாராகி வருகின்றன.

உலகம் முழுவதும் உள்ள இயற்கை வளங்களில் குறைந்தது முப்பது சதவிகிதம் ஆபிரிக்காவில் உள்ளது. ஆனாலும், ஆபிரிக்க நாடுகள் வறுமையில் உள்ளன. எந்தப் பக்கம் பார்த்தாலும் எலும்பும் தோலுமாக இருக்கும் குழந்தைகளும், சிறிய ஓட்டைக் குடிசைகளும்தான் ஆபிரிக்காவின் அடையாளமாகத் தொடர்ந்து விளங்குகின்றன. இந்த வறுமை நிலையை மாற்றுவதாகக் கூறிக் கடன் வழங்கிய அமெரிக்கா, பிரான்ஸ் ஆகிய வல்லாதிக்கநாடுகள் அந்தக்கடனை வைத்தே ஆபிரிக்க நாடுகளின் அரசாங்கங்களில் தலையிட்டு, அங்கிருந்து இயற்கை வளங்களைச் சுரண்டிக் கொண்டிருந்தன.

இதன் காரணமாகவே ஆபிரிக்க நாடுகளில் கடுமையான பஞ்சம் ஏற்பட்டது. இதனால் எழுந்த கிளர்ச்சியின் பின்னர் அமெரிக்கா, பிரான்ஸ் ஆகிய நாடுகளுடனான உறவு துண்டிக்கப்பட்டுச் சுமார் ஐம்பத்து மூன்று ஆபிரிக்க நாடுகளில் நாற்பத்து ஒன்பது நாடுகள் ரஷ்யாவுடன் இணைவதற்கான சாத்தியங்களை வெளிப்படுத்தி வருகின்றன. ரஷ்ய ஜனாதிபதி புடின் இதனை வரவேற்றுள்ளார். சென்ற வாரம் நூற்று எண்பத்தியொரு செயற்றிட்டங்களுக்குரிய யோசனைகள் முன்மொழியப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் ஆபிரிக்க நாடுகளுக்கு ரஷ்யா, தனது நாணயத்தில் வழங்கிய சுமார் பத்தொன்பது லட்சம் கோடி ரஷ்ய ரூபிள் பெறுமதிமிக்க கடன்களை ரத்துச் செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் ஆபிரிக்க நாடுகளுக்கு அவசியமான நிவாரண உதவிகளை வழங்கவும் ரஷ்யா இணங்கியுள்ளது. இந்தத்திட்டங்கள் பற்றி புடின் கடந்த வாரம் மேற்கு ஆபிரிக்க மாற்றுக் குழுவுடன் உரையாடியிருக்கிறார்.

### ரஷ்யாவே துணை

கடந்த சில ஆண்டுகளாக உக்ரைன் நாட்டில் இருந்து ஆபிரிக்காவுக்கு அனுப்பவேண்டிய 3.28 கோடி தொன் உணவு தானியத்தில் மூன்று சதவிகிதம் மட்டுமே கிடைத்திருக்கிறது. மற்றத் தானியங்கள் அனைத்தும் ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. எனவே ஆபிரிக்க நாடுகள் தானிய உற்பத்தியில் தன்னிறைவு பெற இந்த நிவாரண உதவி கைகொடுக்கும் என்று ரஷ்யா நம்பிக்கை வெளியிட்டுள்ளது. இவை எல்லாவற்றையும் விட முக்கியமாக ஆபிரிக்க நாடுகளுடனான வர்த்தகம் அந்தந்த நாடுகளின் சொந்த நாணயங்களிலேயே மேற்கொள்ளப்படும் என்றும் ரஷ்யா உறுதியளித்திருக்கிறது.

பிறிக்ஸ் மாநாட்டின் பின்னர் ரஷ்யாவும் சீனாவும் உலக நாடுகளின் பொருளாதார மாற்றங்களையும் அதன் வளர்ச்சியையும் தீர்மானிக்கும் சக்தியாக மாறும் என்று பொருளியல் நிபுணர்கள் கருதும் நிலையில், ஆபிரிக்க நாடுகள் ரஷ்யாவுடன் கூட்டுச் சேர எடுத்துள்ள முடிவு அமெரிக்காவுக்குப் பெரும் எச்சரிக்கையாகும். இதனை ஆபிரிக்க அரசியலின் நீண்டகால மற்றும் உடனடி மாற்றங்களாகவும் நோக்கமுடியும். புர்கினோ பசோ, மாலி, கினி, நைஜர் போன்ற சிறிய ஆபிரிக்க நாடுகளில் கிடைக்கும் யுரேனியம் உலகில் வேறு எந்தப் பகுதிகளிலும் கிடைக்காது. யுரேனியம் அணுகுண்டு தயாரிக்க அடிப்படையாக அமைகிறது. அதேபோல மின்சார உற்பத்தியில் மிகப்பெரும் பங்கு வகிக்கிறது. அணு உலைகளில் எரிபொருளாக இந்த யுரேனியம்தான் பயன்படுகிறது. ஏனைய உலக நாடுகளில் கிடைக்கும் யுரேனியத்தை விட மேற்கு ஆபிரிக்க நாடுகளின் யுரேனியம் அதிக நேரம் எரியும் தன்மை கொண்டது. இவ்வாறு ஏராளமான வளங்கள் ஆபிரிக்க நாடுகளில் உண்டு. ஆனாலும் உலகின் மிகவும் ஏழ்மை




நாடுகளின் பட்டியலில் ஆபிரிக்க நாடுகள் முன்னணியில் இருப்பதற்கு அமெரிக்க - பிரான்ஸ் நாடுகளே பிரதான சூத்திரதாரிகள்.

குறிப்பாகக் கடன்களை அள்ளி வழங்கிவிட்டு அங்கிருந்து யுரேனியம் போன்ற இயற்கை வளங்களை அமெரிக்காவும் பிரான்ஸும் சுரண்டிச் சென்றிருப்பதாக ஆபிரிக்க மக்கள் தற்போது பகிரங்கப்படுத்தி வருகின்றனர். பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகள் சுரங்கம் அமைத்து அதன் ஊடாக யுரேனியத்தைத் தமது நாடுகளுக்குக் கொண்டு சென்றிருக்கின்றன. ஆபிரிக்க நாடுகளின் ஆட்சியாளர்களும் இதற்கு நீண்டகாலமாக உடந்தையாக இருந்திருக்கின்றனர். புர்கினோ பசோ, மாலி, கினி, நைஜர் உள்ளிட்ட நாடுகளின் இராணுவம் சாதாரண மக்களின் ஒத்துழைப்புடன் கிளர்ச்சி செய்து அமெரிக்க - பிரான்ஸ் நாடுகளின் கைக்கூலியாகச் செயற்பட்ட தமது ஆட்சியாளர்களைக் கைது செய்திருக்கிறது.

இந்தப் பின்னணியிலேதான் மக்களின் கிளர்ச்சிகளுக்கு மத்தியில் கடந்த வாரம் நடைபெற்ற ரஷ்ய ஆபிரிக்க நாடுகளின் உரையாடல், மேற்கு ஐரோப்பிய நாடுகளின் கவனத்தை ஈர்த்திருக்கிறது. ஐம்பத்து நான்கு ஆபிரிக்க நாடுகளில் நாற்பத்து ஒன்பது நாடுகள் இந்த உரையாடலில் பங்கேற்றிருக்கின்றன. அதில் அமெரிக்கா, பிரான்ஸ் நாட்டுக்கு எதிராகத் தாங்கள் ஓரணியில் திரள்வதாக ஆபிரிக்க மக்கள் உறுதியளித்திருக்கின்றனர். இந்த உரையாடலை நன்கு அவதானித்த அமெரிக்கா, பிரான்ஸ் போன்ற வல்லாதிக்க நாடுகள், ஆபிரிக்க நாடுகளின் குறிப்பாக, புர்கினோ பசோ, மாலி, கினி, நைஜர் ஆகிய சிறிய நாடுகளின் கிளர்ச்சி படைகளைத் தீவிரவாதிகள் என்று வர்ணித்துள்ளன.

ரஷ்யாவுக்கு எதிரான போரில் உக்ரைனுக்கு எவ்வளவுதான் ஆயுத உதவிகளை வழங்கினாலும் போரில் ரஷ்யாவுக்கு எதிராகப் பெரிய மாற்றங்கள் நிகழவில்லை. ஆகவே இந்தப் பின்புலத்தில் ஆபிரிக்க நாடுகள் ரஷ்யாவுடன் கூட்டுச் சேர்ந்துள்ளமையால், அடுத்த வாரம் தென்னாபிரிக்காவில் நடைபெறவுள்ள பிறிக்ஸ் மாநாட்டில் எடுக்கப்படவுள்ள பொருளாதாரம் பற்றிய தீர்மானங்களில் மேலும் புதிய திட்டங்கள் வகுக்கப்படக்கூடிய வாய்ப்புகள் அதிகமாகியுள்ளன.

### மதில்மேல் பூனையாக இந்தியாவின் அரசியல்

ரஷ்ய - ஆபிரிக்க நாடுகள் கூட்டின் பின்னணியிலும், இந்தியாவை பிறிக்ஸ் கூட்டமைப்பில் இருந்து பிரித்து எடுக்கும் நோக்கிலும் அமெரிக்கச் சார்பு சர்வதேச ஊடகங்கள் பிறிக்ஸ் பற்றிய பல விமர்சனங்களை முன்வைக்கின்றன.

இந்தியா, ரஷ்யாவுடன் குறிப்பாக ரஷ்ய - சீன பொருளாதாரக் கூட்டுக்குள் நிற்பதா அல்லது அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளின் பொருளாதாரக் கூட்டில் நிற்பதா என்று இதுவரையும் சரியான நிலைப்பாட்டை முன் வைக்கவில்லை. அரசியல், பொருளாதார, மற்றும் இராணுவக் கூட்டு முறைகளில் தனித்தனி இயங்கு நிலையை, இந்தியா விரும்புகின்றது. ஆனால் ரஷ்ய சீன கூட்டுக்கு எதிராக, மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகள் அரசியல், பொருளாதார, மற்றும் இராணுவச் செயற்பாடுகளை ஒரு குடையின் கீழ் இணைத்துச் செயற்படுத்தும் உத்திகளையே கையாண்டு வருகின்றன.

இதே உத்தியைத்தான் மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு எதிரான ரஷ்ய - சீன கூட்டும் வகுத்துள்ளது. ஆனால் இந்தியா விரும்புவதுபோன்று தமது வசதிக்கு ஏற்ப இரண்டு வகையான சர்வதேசக் கொள்கைகளை வகுக்க ரஷ்ய சீனக் கூட்டு தயாராக இல்லை. அத்துடன் பிறிக்ஸில் மேலும் பல நாடுகளை இணைக்கும் திட்டங்களும் சீன, ரஷ்யாவிடம் உண்டு.

மேற்கு ஆபிரிக்க நாடுகள், அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் ஆகிய இரு நாடுகளுக்கு எதிராக ரஷ்யாவுடன் கூட்டுச் சேர்ந்த ஒரு பின்னணியிலேதான், பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் தென் பசுபிக் பிராந்தியத்துக்கான பயணத்தை முடித்துக் கொண்டு திரும்பும் வழியில் இலங்கைக்கும், ஜூலை 28ஆம் திகதி வருகை தந்திருக்கிறார். பொருளாதார மீட்சிக்கான ஆதரவு, கடன் மறுசீரமைப்பு உள்ளிட்ட பல அபிவிருத்தி உதவிகள் பற்றி ஜனாதிபதி ரணிலிடம் மக்ரோன் கொழும்பில் நின்ற சில மணிநேரங்களுக்குள் உறுதி வழங்கியுள்ளார்.

ஆனால் ஆபிரிக்க நாடுகள் எதிர்கொண்ட பட்டறிவுகளை இலங்கை கற்றுக்கொள்ளவேண்டும். ஏனெனில் பிறிக்ஸ் உள்ளிட்ட சர்வதேசக் கூட்டுப் பற்றிய இந்திய நிலைப்பாடு எதுவென்று புரியாத நிலையில், அமெரிக்க - சீன உறவை அதுவும் சீனாவுடனான பொருளாதார உறவுகளைப் பேணுவதன் ஊடாகச் சமநிலையில் இருப்பதாக இலங்கை உணரலாம். இந்தியாவைத் திருப்திப்படுத்துவதாகவும் நம்பலாம். ஆனால் வருமானத்தை அதிகரிக்க இலங்கையின் ஏற்றுமதிப் பொருளாதாரத்துக்குரிய பொறிமுறை ஒன்றை மேற்கொள்ளாமல், வெறுமனே சர்வதேசக் கடன் உதவிகளை மாத்திரம் நம்பிக் கொண்டிருக்க முடியாது.

இவ்வாறு கடன் வாங்கும் வழமை நீடித்தால், ஆபிரிக்க நாடுகளில் எலும்பும் தோலுமாக இருக்கும் குழந்தைகளையும் சிறிய ஓட்டைக் குடிசைகளையும் இலங்கைத்தீவிலும் காணக்கூடிய ஆபத்துகள் வரலாம். இந்த இடத்திலேதான் 80 வருட இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வும் தமிழ் மக்களை உள்ளடக்கிய பொருளாதாரத் திட்டங்களையும் வகுக்க வேண்டிய நிர்ப்பந்தத்தைச் சமகால உலக அரசியல் சூழல் இலங்கைக்கு உணர்த்தியிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆபிரிக்காவின் பேரெழுச்சி!

○ ஆர்.பிரகாஷ்

'இருண்ட கண்டம்' என்றுதான் வரலாற்றில் அறியப்படுகின்றது ஆபிரிக்கா. பெயருக்கு ஏற்றாற்போல் ஆபிரிக்காவின் இறந்தகாலம் இருண்டேதான் இருந்தது. நிகழ்காலமும்கூட அவ்வாறுதான். இந்தக் காரிருள் யுகத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து, ஆபிரிக்காவை ஒளிரச்செய்வது அதுவும் 'யுரேனியத்தால் ஒளிரச் செய்வது' என்ற முடிவுக்குள் தீர்க்கமாக இறங்கியுள்ளது ஆபிரிக்க இராணுவக் கூட்டணி.

மேற்கத்தேய நாடுகளிடம் இருந்து ஆபிரிக்கத் தேசங்கள் சுதந்திரம் பெற்றாலும் இன்னமும் சுரண்டல்கள் ஓய்ந்தபாடில்லை. இவ்வாறிருக்கையில் ஆபிரிக்காவில் இருந்து மேற்கத்தேய நாடுகளையும், அமெரிக்கக் கூட்டணிகளையும் முழுவதுமாகத் துடைத்தெறிந்து விடுவது என்ற முடிவுக்கு வித்திட்டவர் 35 வயதேயான இப்ராஹிம். 'இளம் சிங்கம்' என்று ஆபிரிக்கர்களால் செல்லமாக அறியப்படும் அவர்தான் புர்கினோ பாஸோவின் தற்போதைய அதிபர். மேற்கத்தேயத்துக்கு எதிரான இராணுவப் புரட்சிக் கலாசாரத்துக்கு வித்திட்டவரும் அவரே. 2020ஆம் ஆண்டில் அவரிட்ட விதைதான் இப்போது மரமாகிறது. அதன் தொடர்ச்சிதான் மாலியிலும் இப்போது நைஜரிலும் மேற்கொள்ளப்பட்டுள்ள இராணுவப் புரட்சிகள்.

### நீண்டகாலத் திட்டம்

2020ஆம் ஆண்டு புர்கினோ பாஸோவில் அந்த நாட்டு அரசாங்கத்துக்கு எதிராகக் கிளர்ச்சி வெடித்தது. இப்ராஹிமின் முழுக்கட்டுப்பாட்டின் கீழ் ஆட்சி வந்தது. இப்ராஹிம் புடினுக்கு மிகமிக நெருக்கமானவர். 'புடினின் ஆபிரிக்கத் தளபதி' என்ற பெயரால் அழைக்கப்படும் அளவுக்கு அவருக்கும் புடினுக்கும் இடையிலான நட்பும் நெருக்கமும் மிகமிக வலுவானதும் ஆழமானதுமாகும். 'ரஷ்யாவை மீறி அமெரிக்காவோ அல்லது மேற்கத்தேய நாடுகளோ ஆபிரிக்காவுக்குள் வரமுடியாது. அதுபோல் புடின் எங்களின் குடும்பத்தவர்' என்பதே இராணுவ ஆட்சியைக் கைப்பற்றிய தன் முதல் உரையில் இப்ராஹிம் உதிர்த்த வார்த்தைகள். கடந்த மூன்று ஆண்டுகளாக புர்கினோ பாஸோவில் எந்தவொரு மாற்றத்தையும் அமெரிக்காவாலோ அல்லது மேற்கத்தேயக் கூட்டணிகளாலோ ஏற்படுத்த முடியவில்லை. அந்தளவுக்கு நேர்த்தியானது அவரின் இந்த இராணுவப் புரட்சி.

### ஆபிரிக்காவில் நடப்பதென்ன?

ஆபிரிக்காவில் உள்ள வறுமைநிலையைப் போன்று உலகின் வேறு எந்தப் பகுதிகளிலும் இல்லை. அதேநேரம் ஆபிரிக்காவில் இல்லாத வளங்களும் உலகின் பிறிதொரு பகுதியில் இல்லை. அள்ளஅள்ளக் குறையாத தங்கம் மற்றும் யுரேனியம் இவைதான் ஆபிரிக்காவின் பொருளாதார மூலங்கள். தொன் கணக்கில் ஆபிரிக்காவில் இருந்து இன்று தங்கம் அகழப்படுகின்றது. ஆனால் அதில் 'ஒப்பந்த வருவாயை மட்டுமே' ஆபிரிக்கா அனுபவிக்கின்றது. மிகுதியெல்லாம் காலணித்துவ விடுவிப்பின்போது செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் மூலமாக பிரான்ஸும், அமெரிக்காவும், இதர ஐரோப்பிய நாடுகளும்தான் அனுபவிக்கின்றன. ஒரு கண்டத்தின் வளத்தை சுமார் 60 ஆண்டுகளாக அகழ்ந்து செல்வது என்பது எவ்வளவு பெரிய அபத்தம். இதில் யுரேனிய அகழ்வின் பாரதூரத்தன்மை மலைக்க வைக்கக்கூடியது.

யுரேனியத்தை செறிவூட்டித்தான் அணுவாயுதங்கள் தயாரிக்கப்படுகின்றன. அத்துடன் யுரேனியச் செறிவூட்டல் கிடைக்கும் மின்னுற்பத்திதான் இன்று ஐரோப்பாவின் இமாலயக் கட்டடங்களை ஒளிர்விக்கின்றது. பிரான்ஸின் மின் தேவையில் சுமார் 60 வீதமான அளவை நைஜரின் யுரேனியம்தான் நிறைவேற்றுகின்றது. தன் தேவையை நிவர்த்தித்துக் கொண்டு ஐரோப்பாவின் நான்கில் ஒரு பங்கு நாடுகளுக்கு மின் விற்பனையில் ஈடுபடுகின்றது பிரான்ஸ். இத்தனைக்கும் ஆபிரிக்காவின் 60 வீதமான பகுதிகளில் இப்போதும் மின் இல்லை. இப்போது நைஜரில் மேற்கொள்ளப்பட்டுள்ள இராணுவப் புரட்சியால் பிரான்ஸுக்கு இனி யுரேனியம் செல்லாது. அந்த யுரேனியத் தடுப்பால் பிரான்ஸுக்குக் கிட்டப்போகும் வருவாய் இழப்பு பில்லியன் டொலரில்தான் கணக்கிடப்படும். நைஜர் இராணுவப் புரட்சிக்கு எதிராக பிரான்ஸ் அளவுக்கதிகமாகக் குத்திமுறிவதற்குக் காரணமும் இதுவே.

### பின்னணியில் ரஷ்யா

சரி, பெர்கினோ பாஸோவிலும், மாலியிலும், நைஜரிலும் இடம்பெற்ற இராணுவப் புரட்சிகளுக்கு எதற்காக ரஷ்யா தொடர்புறுத்தப்படுகின்றது? இங்குதான் உலகின் ஆகச்சிறந்த போர்த்தந்திரியாகவும் ஓர் உளவாளியாகவும் தன்னை நிலைநிறுத்தியிருக்கின்றார் ரஷ்ய அதிபர் புடின். மேற்கத்தேய நாடுகளினதும் அமெரிக்காவினதும் பிடியில் இருந்து ஆபிரிக்கா விடுபடவேண்டுமாயின் அதற்குப் பலம்மிக்க ஓர் இராணுவப் பின்புலம் தேவை. ஒரு வல்லரசின் தயவில்லாமல் இது சாத்தியமில்லை. அந்த வெற்றிடத்தை ரஷ்யா நிவர்த்தி செய்திருக்கின்றது. இதனால்தான் இன்று மேற்கத்தேய நாடுகளுக்கு ஆபிரிக்கத் தேசங்கள் தண்ணி காட்டிக் கொண்டிருக்கின்றன. உக்ரைனுக்கு எதிரான ரஷ்யப் போரில், பிரான்ஸும், அமெரிக்காவும், இதர மேற்கத்தேய நாடுகளும் (குறிப்பாக நேட்டோக் கூட்டணி நாடுகள்) உக்ரைனுக்கு ஏகப்பட்ட ஆயுத உதவிகளை வழங்கி வருகின்றன. இவற்றின் ஆயுதத் தயாரிப்புக்கு நைஜர், மாலி ஆகிய நாடுகளில் இருந்து கொண்டு செல்லப்படும் யுரேனியம் பெருமளவு உதவுகின்றது. இராணுவப் புரட்சியை ஏற்படுத்தி யுரேனிய வெளிச்செல்கைக்கு தடை விதித்தால் உக்ரைனுக்கு ஆதரவான இந்த இராணுவக் கூட்டணி தானாகப் பலமிழக்கும். அதேவேளை ரஷ்யா பலம்பெறும். நைஜர் இராணுவப் புரட்சியின் பின்னர் ஷெலன்ஸ்கி சற்று அடக்கிவாசிக்க ஆரம்பித்தமையும் இதனால்தான்.

ஆபிரிக்காவிடம் என்னதான் இருக்கின்றது?போர் என்று வந்துவிட்டால் அமெரிக்கா, பிரான்ஸின் இராணுவப் பலத்துக்கு ஆபிரிக்காவால் நிலைநிற்க முடியுமா? என்ற கேள்வி உங்களில் பலருக்கும் எழலாம். இங்குதான் புடினின் அடுத்தகட்ட நகர்வு மறைந்திருக்கின்றது. 'தேவைப்பட்டால் வாக்நெர் படை ஆபிரிக்காவுக்குச் செல்லும்' என்ற எச்சரிக்கையை விடுத்திருக்கின்றார் புடின். ரஷ்ய இராணுவம் ஆயுதம் வழங்கத் தாமதித்ததால் சொந்த நாட்டு இராணுவத்துக்கு எதிராகவே போர் அறிவிப்புச் செய்த மூர்க்கக்கூட்டம் வாக்நெர் படை. சிரியாவின் தங்கச் சுரங்கங்களை 'உலகப் பயங்கரவாதிகள்' என்று அறிவிக்கப்பட்ட ஐ.எஸ்.ஐ.எஸ்ஸிடம் இருந்து பத்திரமாகப் பாதுகாத்ததன் மூலம் வாக்நெர் படையின் பலமும் மூர்க்கமும் அப்பட்டமாகும். ஆபிரிக்காவுக்குள் வாக்நெர் படைகள் ஊடுருவலாம் என்ற ஐயப்பாடு ஏற்பட்டதன் பின்னர் பிரான்ஸ், நைஜரில் இருந்து தன் துருப்புகளை திரும்பப் பெற்றுவருகின்றது. அமெரிக்கத் துருப்புகளும் மூடைமுடிச்சுகளுடன் நடையைக் கட்டுகின்றன. ஆக, ஆபிரிக்காவை மையப்படுத்திய பூகோள இராணுவ - வர்த்தகப் போர் ஒன்று ஏற்படுத்தப்பட்டாயிற்று. இதில் ரஷ்யா தன்னையும் பாதுகாத்து ஆபிரிக்காவையும் பாதுகாக்குமாக இருந்தால், யுரேனிய ஆலைகள் இருண்ட கண்டத்தை பல வர்ணங்களில் ஒளிரச்செய்யும். ஆபிரிக்க நாணயங்களின் பெறுமதி உயரும். வறுமை அகலும். அல்லையேல், இருண்ட கண்டம் இறந்தேபோகும்.





## முன்றில் 16

○ இயல்வாணன்

'மிஸ்டர் மலைவேம்பு பேசுகிறேன்' இப்படியொரு பீடிகையுடன் சிறுகதையொன்று அமிர்தகங்கை சஞ்சிகையில் வெளிவந்திருந்தது. கதையின் தலைப்பு 'ஸ்கூல் பிளஸ் மினிபஸ் ரைம்ரேபிள்கள்'. இதை எழுதியவர் அப்போது யூனியன் கல்லூரியின் அதிபராக இருந்த க.பாலசுந்தரம். யூனியனில் நான் இடைநிலை வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். அந்தக் கதை அந்த வயதிலேயே என்னை ஆகர்சித்திருந்தது. அந்த மலைவேம்பு யூனியன் கல்லூரி வாசலில் பெருவிருட்சமாக நிழல் பரப்பி நின்றது. 80களின் நடுக்கூறில் இன விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பகாலத்தில் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பிவிட்டு ஏங்கும் பெற்றோரின் மனநிலையை மிகத் தத்ரூபமாக அந்தக்கதை வெளிப்படுத்தியிருந்தது. பின்னர் அந்தக்கதை உட்பட 10 சிறுகதைகள் தொகுக்கப்பட்டு 'அந்நிய விருந்தாளி' என்ற தலைப்பில் யாழ் . இலக்கிய வட்ட வெளியீடாக வெளிவந்த போது அதைத்தேடி வாங்கி ஏனைய கதைகளையும் படித்தேன். உயர உயரும் அன்ரனாக்கள், முட்டைப் பொரியலும் முழங்கையும், மூன்று பரப்பும் முக்கால் குழியும் என்று ஒவ்வொரு கதைகளும் வித்தியாசமான தலைப்புகள் கொண்டவையாக அமைந்திருந்தன.

1928ஆம் ஆண்டு ஜனவரி 14 தைப்பொங்கல் தினத்தன்று ஆவரங்காலில் பிறந்த கதிர் பாலசுந்தரம் தனது ஆரம்பக்கல்வியை மூன்றாம் வகுப்பு வரை மதவாச்சி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையிலும், ஆங்கிலமொழி மூலக் கல்வியை புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரியிலும் கற்றார். ஐந்தாம் தரத்துடன் கல்வியை இடைநிறுத்திக் கொண்டார். இரண்டாம் உலக யுத்தம் நடந்த காலத்தில்(1939-1945) திருகோணமலை சீனன்குடா வான்படைத் தளத்தில் பொறியியலாளர்கள் நெய்பர், கிளாக் ஆகியோரின் அலுவலகத்தில் பணியாற்றினார். பின்னர் அங்குள்ள கிளப்பன்பேக்கில் (கடற்படை முகாம்) வெள்ளை அதிகாரி கில் என்பவரின் அலுவலகத்தில் பணியாற்றினார். யுத்த முடிவைத் தொடர்ந்து 1946இல் சொந்த ஊரான ஆவரங்காலுக்குத் திரும்பிய இவர் மீண்டும் புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரியில் படித்து எஸ்.எஸ்.சி. (சிரேஷ்ட இடைநிலை தராதரப் பத்திரம்) பரீட்சையில் சித்தியடைந்தார். 1950ஆம் ஆண்டு தேர்தல் திணைக்களத்தில் 6 மாதங்கள் தற்காலிக பணியை ஆரம்பித்த இவர் பின்னர் 'இந்துபோட் 'நிர்வகித்த வவுனியா வடக்கிலுள்ள ஆயிலடி பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றினார். ஓராண்டிற்குள் மட்டக்களப்பு ஒலுவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு இடம்மாறினார். அங்கு ஆறரை ஆண்டுகள் பணியாற்றினார். தொடர்ந்து ஆரையம்பதி மகா வித்தியாலயத்தில்(1958) புவியியல் பாட ஆசிரியராகப் பணியாற்றினார்.

1965இல் கற்றலுக்கான விடுமுறை பெற்று பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மூன்றாண்டுகள் படித்து கலைமாணிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். தொடர்ந்து கேகாலை ஹெம்மாந்தகம அல் அஸார் மகா வித்தியாலயம், நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி, யூனியன் கல்லூரி ஆகியவற்றில் கற்பித்தார். 1977இல் யூனியன் கல்லூரியில் அதிபர் பதவியை ஏற்றுக்கொண்டார். அடுத்த ஆண்டில் இலங்கை கல்வி நிர்வாகசேவைப் பரீட்சையில் சித்தியடைந்தார். தொடர்ந்தும் அங்கேயே அதிபராகக் கடமையாற்றி 1987இல் ஓய்வு பெற்றார். இவரது காலத்தில் யூனியன் கல்லூரி புகழ் பூத்த பாடசாலையாக விளங்கியதுடன் க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் கணிதத்துறையில் நா.சுகந்தன் முதலிடத்தைப் பெற்ற வரலாற்றுச் சாதனை அக்காலத்தில் நிகழ்ந்தது. ஒலுவிலில் பணியாற்றிக் கொண்டிருந்த வேளை இவர் எழுதிய சிறுகதையொன்று தினகரனில் வெளியானது. வானொலி நாடகமொன்று இலங்கை வானொலியில் ஒலிபரப்பானது. தொடர்ந்து வானொலி நாடகங்கள் பலவற்றை எழுதினார். மேடைநாடகங்கள், கட்டுரைகள் பலவற்றையும் எழுதினார்.அமிர்தகங்கை, சிரித்திரன், றோசாப்பூ ஆகியவற்றில் இவரது ஆரம்பகாலப் படைப்புகள் வெளிவந்தன.

இவரது சிறுகதைகள் அந்நிய விருந்தாளி(1986) என்ற தலைப்பில் தொகுக்கப்பட்டுள்ளது. 'கதைகளை அமைக்கும் முறையிலே வெவ்வேறு உத்திகளைக் கையாண்டுள்ளார். பெரும்பாலும் ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு உத்தியில் அமைந்துள்ளன. பாத்திரங்களின் உரையாடலோடு கதையை நகர்த்திச் செல்லும் பண்பும், பாத்திரங்களின் உணர்வோட்டத்தினூடாகக் கதை சொல்லும் பண்பும் ஆசிரியருக்குக் கைவந்த கலையாக உள்ளமையை அவதானிக்க முடிகிறது. பொதுவாக இந்தக்கதைகள் முழுவதையும் தொகுத்து நோக்கும்போது பாலசுந்தரம் அவர்களால் ஈழத்துச் சிறுகதைத் துறையில் புதிய வளர்ச்சி நிலைகளைப் புலப்படுத்த முடியும் என்ற நம்பிக்கை ஏற்படுகிறது' என இந்நூலுக்கு வழங்கிய அணிந்துரையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சு.வித்தியானந்தன் குறிப்பிட்டுள்ளமை நோக்கத்தக்கது. மறைவில் ஐந்து முகங்கள்(2004), வாரிசுகள்(2016), சிவப்பு நரி அங்கத நாவல்(2004), கனடாவில் ஒரு சாவித்திரி, வன்னி(2015) முதலான நாவல்களையும் இவர் எழுதியுள்ளார். ஆங்கிலத்தில் His Royal Highness, The Tamil Tigers(2011)> The Five Hidden Faces(2004)> The Militant's Silence(2015), Blood and Terror ஆகிய நாவல்களையும் எழுதியுள்ளார். கல்வித்துறையில் தடம் பதித்த இவர் யூனியன் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றிய கால அனுபவங்களை பொற்காலம் என்ற நூலில் தந்துள்ளார். அத்துடன் யூனியன் கல்லூரியின் இருநூறு ஆண்டுகால வரலாற்றை பல ஆதாரங்கள், ஆவணங்களுடன் தங்கத்தாரகை(2016) என்ற நூலாக எழுதியுள்ளார். அத்துடன் சிவதலம் என்ற தலைப்பில் ஆவரங்கால் கிராமத்தின் வரலாற்றையும் எழுதியுள்ளார். தமிழரசுக் கட்சியின் ஆரம்பகால உறுப்பினர்களில் ஒருவராக விளங்கிய இவர்,தமிழரசுக் கட்சித் தலைவர்கள் பற்றிய பல்வேறு நூல்களையும் எழுதியுள்ளார். அவற்றில் அமிர்தலிங்கம் சகாப்தம்(2004), சாணக்கியன் கோப்பாய் கோமான் வன்னியசிங்கத்தின் நூற்றாண்டு மலர்(2011), ஆவணம் பல்வேறு இயக்கங்களால் தமிழரசுக் கட்சித் தலைவர்கள், தொண்டர்கள் கொல்லப்பட்ட ஆவணத் தொகுப்பு (2023),சத்தியங்களின் சாட்சியம் முதலான நூல்களையும் பல கட்டுரைகளையும் இவர் எழுதியுள்ளார். 1950களில் பேரறிஞர் அண்ணாத்துரையின் வேலைக்காரி நாடகத்தில் வில்லன் பாத்திரமேற்று நடித்ததுடன் வேறு பல நாடகங்களிலும் நடித்துள்ளார். பிரெஞ்சு நாடகமேதை மொல்லீரின் 'பறக்கும் டாக்டர்' நாடகத்தை மொழிபெயர்த்து மேடையேற்றியுள்ளார். இவர் எழுதி மேடையேற்றிய சாம்பல் மேடு, விஞ்ஞானி என்ன கடவுளா?, விழிப்பு என்பன இவருக்குப் பெயர்தேடித் தந்த நாடகங்களாகும். இவ்வாறு கல்வித்துறையிலும், இலக்கியத்துறையிலும் தடம்பதித்த இவர் ஒரு காலத்தில் பிரபலமான ஆங்கில ஆசிரியராகவும் விளங்கினார். ஆங்கில இலக்கணத்தை தெளிவுறக் கற்பித்ததால் இவரது வீட்டில் நடைபெற்ற ஆங்கில வகுப்புகளில் மாணவர்கள் பெருமளவில் படையெடுத்துக் கற்றமையும் குறிப்பிடத்தக்கது. 95 வயதில் கனடாவில் வாழும் இப்பேரறிஞர் சகாப்தம் கண்டு தமிழுக்குச் சேவை செய்ய வேண்டுமென வாழ்த்துகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சஞ்சீவி சிறுகதை

சாரங்கா தயாநந்தன்

கார்க்கண்ணாடியூடாக வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள் அவள். பார்வை விளம்பரச் சுவரொட்டியில் பிரிக்கமுடியாது ஒட்டியிருந்தது. அவன் திரும்பி வருவதற்குள் அந்த விளம்பரத்தை விழிகளால் விழுங்கி விடுகின்ற தீவிரம். பதினைந்து நிமிடக் காத்திருப்பின் சலிப்பை அவளில் தவிர்க்க வேண்டி அவளையும் கூட வரும்படி அவன் கேட்டபோது தன் ஆர்வமின்மையை வெளிப்படுத்தி அவனைப் போய் வரும்படி சொன்னபொழுதிலேயே அந்த ரோஜாவர்ணச் சுவரொட்டி அவள் விழிகளில் விழுந்து மனதில் இறங்கி நினைவுகளை உக்கிரமாய் உலுக்கத் தொடங்கிவிட்டிருந்தது. அவன் அதை அறிந்து விடாதிருக்க அவள் மிகுந்த முயற்சி எடுக்கவேண்டியிருந்தது. அவன் சற்றே குனிந்து பரிவோடு 'போய்வருவதாகச்' சொன்னபோது மெல்லத் தலையசைத்தாள். ஆனால் அதே பொழுதில் 'அந்தப் பரிவும் நேசமும் காலகாலமும் நிலைத்திருக்குமோ' என்றெண்ணி ஏங்கினாள்.

சுவரொட்டி அதீத அழகுடன் கண்களை அள்ளியது. அதில் உலகத்து மகிழ்வும் நேசமும் ஒட்டுமொத்தமாய்த் தேக்கித் தன் ஆரோக்கியமான குழந்தையைப் பார்த்துக் கொண்டிருக்கும் இளந்தாய். தாயின் இடுப்பின் இருபுறமும் தன் குளுகுளுத்த கால்களைப் போட்டிருந்த குழந்தை, ஒரு பூந்தளிராய், மடியிலிருந்து முழங்கால்வரை நீண்டு படுத்து, தாய் முகம் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தது. அருகில் அந்தக்குழந்தையின் முடிவுகாணமுடியாத ஆனந்தத்தின் காரணம் தாமேயென வெட்கமற்றுப் பொய் சொல்லும் மென்மையான மேனித்தைலங்கள். வரிசைப் படுத்தப்பட்டிருந்த அந்தப் போத்தல்களை இரக்கம் மீதூரப் பார்த்தாள். சடுதியாக அவளது பார்வையை வலிந்திழுத்து மீண்டும் தன் மேனி மீது ஊரவிட்டது குழந்தை.

குழந்தைகளோடு விலகாது இணைந்துள்ள ரோஜாவர்ணம் மனதை சுகமாய் வருடிற்று. ஆனால் இதன் சற்றே வன்மையுற்ற வர்ணம் அவள் வாழ்வை உலுக்கும் நிரந்தரமான பயமாக, வேதனையாக, அவமானமாக வாழ்ந்து வருகிறது. முன்பொருநாள் அதே வர்ணம் அவளது தூய்மையான வெண்ணிறச் சட்டையின் பின்புறம் கலங்கலாக முகங்காட்டி அனைத்து உறவுகளிலும் மலரள்ளி எற்றியது. தொடர்ந்து மெல்லப் பூவிதழாய் விரிந்த பருவம் அவளில் வனப்பள்ளிக் கொட்டியது. பார்ப்பவரை மீண்டும் ஒருமுறை பார்க்கச் சொல்லும் வசீகரம் அவளது. நோக்கமற்றுத் துளித்து விட்டுப் போகும் மழைத்துளிகளைக் கவனமாகத் தேக்கி வைத்து சிலமாதங்களின் பின்னர் பூக்களாய் முகம் மலர்த்தும் இயற்கையின் இரகசியம் பெண்ணின் மென்பூப்பில் பொதிந்திருப்பதாய்த் தோன்றும் அவளுக்கு. வாலிபர்கள் மீது வீசத்தக்க அலட்சியத்தை அவள் விழிகளிலும் பரப்பி பல ரகசியச் சிலிர்ப்புகளை மனதிற்கு அறிமுகப்படுத்திய அதே வர்ணத்தைத் தான் அவளால் இப்போது நேசிக்க முடியாமல் இருக்கிறது.

தூரத்தில் அவன் வருவது தெரிந்தது. குழந்தைகள் நேரத்தை விழுங்கி விடுவதாகத் தாய்மார் அலுத்துக் கொள்வதை அவளிலும் நிரூபித்துவிட்டு நிமிஷங்கள் விலகியிருந்தன. அவை ஊற்றியிருந்த துயரத்தைத் துடைக்கும் எத்தனிப்போடு வேறுதிசை திரும்பினாள். அவளது ஆற்றாமைகளை அறிகிறபோது அவன் மனம் கருகுவதை அவளால் தாங்கிக் கொள்ள முடியாது.

"வெயிற் பண்ணச் சிரமமாயிருந்ததா அகலி...?."

"ச்சீ... இப்பதான் போனது போல இருந்தது..." மிருதுவான புன்னகையோடு அவனை எதிர்கொண்டாள். மீண்டும் ஒருமுறை தன்னைப் பார்க்கும்படி விளம்பரக்குழந்தை தூண்டினாலும் பார்வையை வலிந்து வீதிக்குத் திருப்பினாள். பரபரப்பாய் உலகம் இயங்கிக் கொண்டிருந்தது. வர்ணச்சிதறல்களாக கடக்கும் இளம் பெண்களை விட மெல்ல வயிறுப்பிய இளந்தாய் ஒருத்தியாலேயோ அல்லது பிள்ளைகளுடன் 'இழுபடும் ' ஒரு குடும்பத்தினாலேயோ இலகுவாக ஈர்க்கப்படத்தக்கதன் விழிகளுக்காகக் கழிவிரக்கம் கொண்டாள்.

குழந்தைகளே உலகின் மகிழ்வையும் நிறைவையும் தீர்மானிப்பதாய் உணர்ந்தாள் அவள். பகல்கள் ஓடிவிட்டாலும் இரவுகளைக் குழந்தைகளின் நினைவுகள் ஆக்கிரமித்துக் கொள்வதைத் தவிர்க்க மாட்டாது தினமும் தவிப்பாள். முன்பொருநாள் இவள் சின்னஞ்சிறுமியாய் இருந்தபோது, இருளடர்ந்த இரவுகளை ஒளியேற்றப் பாட்டி சொன்ன, வெண்பட்டுத்துகில் சரிய வானிலிருந்து இறங்கி வருகின்ற தேவதைக் கதைகள் நினைப்புக்கு வரும். அவ்வாறு ஒரு தேவதையேனும் அவளுக்காக இரங்கக் கூடாதா ? என்று கூட நினைப்பாள். அருகில் சுகந்துய்த்த நிறைவோடு திரும்பிப் படுத்துத் தூங்கிப் போயிருக்கும் அவனைப் பார்க்க மனம் நைந்து போகும். சூடாய் வழியும் கண்ணீரை மெல்லத் தலையணையில் ஒற்றித் திரும்பிப் படுப்பாள். உடைகளின் தொந்தரவற்று மென்பஞ்சு மெத்தையுள் புதைந்து கிடக்கும் அவளது மனம் மட்டும் முட்படுக்கையில் உருண்டு தவிப்பதை அவனறியாமல் மறைப்பாள். கூடலின் மகிழ்வைக் கூட குழந்தைக்கான எதிர்பார்ப்பு மேவி விடுகிறது. திருமணமாகி ஐந்து ஆண்டுகள் ஓடிவிட்டன. மூன்றாம் வருடத்தின் தொடக்கத்திலேயே குழந்தை பற்றிய ஏக்கம் பயமாய் விரியத்தொடங்கி விட்டது. இவர்களது திருமணவருடத்தை நினைப்பிலிருத்தி, உள்மனத்தைச் சாகடிக்கத்தக்க கேள்விகளை ஊர்கேட்கத் தொடங்கிவிட்டது. அவளை நன்கு தெரிந்த நடுத்தர வயதுப் பெண்மணிகள் அவளிடம் தம் நாக்கை ஒரு தேளின் கொடுக்காய் விரிப்பார்கள். 'விஷேஷம்' பற்றி விசாரிப்பார்கள். அவர்களின் கடைவாயோரம் வசிக்கின்ற ஏளனச்சிரிப்பு அவளின் ஆழ் மனத்தை உலுக்கும். அவன் அத்தகைய நிலைகளை எதிர்கொள்வதில்லை. அவனிடம் அக்கேள்விகளைக் கேட்கும் துணிச்சல் எவரிடமும் இல்லை. இருவரிடமும் குறையில்லை என்றுதான் மருத்துவர் சொன்னார். அவ்விதமாயின் 'அதுஏன் நிகழாதிருக்கிறது ?'

"என்ன கடுமையான யோசினை போல கிடக்குது ? "

"தாலி கட்டிற நேரத்துக்கு முன்னம் போயிடுவமோ எண்டு யோசிக்கிறன்...."

கூசாமல் பொய் சொன்னாள். 'பொய்மையும் நன்மையுடைத்து' என்று வள்ளுவர் சொல்லியிருக்கிறார். 'குழலையும் யாழையும் பழித்து மழலைச் சொல்லின் மகத்துவம் சொன்ன மனிதர்' அவரென்ற நினைப்பு தேவையே இல்லாமல் அவள் நெஞ்சில் ஓடிற்று. உலகின் சகல புள்ளிகளிலும் குழந்தைகளின் படிமங்கள் ஒன்றியிருப்பதை வகை பிரிப்பதற்கு தானாகவே கற்றுக் கொண்டிருக்கிற தன் மனத்தில் சொல்லமுடியாத ஆத்திரம் கிளர்ந்தது. எப்போது இது முடிவுக்கு வருமோ...? அவன் திடீரெனத் திரும்பி அவளைப் பார்த்தான்.

"இந்த மாதம்.... எத்தினை நாள் தள்ளிப் போயிட்டுது...?"

அவளது மனதை வாசித்து விட்டானா என்ன ? திடுக்கிட்டு அவன் முகம் பார்த்தாள். அவன் சாதாரணமாக வீதியைப் பார்த்து காரைச் செலுத்திக் கொண்டிருந்தான். மெலிந்த குரலில் சொன்னாள்.

"அஞ்சு நாளாகுது..." "இண்டைக்கு நீண்ட தூரம் பிரயாணம் செய்யிறது கஷ்டமில்லையா ?"

"இல்லை.... "

மென்பஞ்சு 'நாப்கின்' நெருஞ்சிமுள்ளாய் மனத்தை உறுத்தியது. மாதமொருமுறை அவளது மனதோரம் துளிர்த்து வாடும் 'ஒளிகாலும் நம்பிக்கைச்செடி' இம்முறையாகிலும் தழைத்து விடக் கூடாதா ? அந்த ஏக்கத்தை மறைத்தபடியே வேறு கேள்வி கேட்டாள்.

"போய்ச்சேர இன்னும் எவ்வளவு நேரம் எடுக்கும் ?..."

"பத்து நிமிஷத்திலை போயிடுவம்... "

தொடர்ந்து அதையும் இதையும் சம்பந்தமற்றுக் கதைத்தார்கள். அவனது பகிடிக் கதைகளுக்கு அவள் குலுங்கிச் சிரித்தாள். அவன் முகம் மலர்ந்தது. எத்துணை நேசமான புருஷன் அவன்! அவள் மனம் அன்பில் உருகி நெகிழ்ந்தது.

★★★★★★

திருமணவீடு களை கட்டியிருந்தது. வர்ணக் கலவைகளாய் மக்கள் கூட்டம். வாண்டுக்கூட்டங்கள் அவர்களைக் குறுக்கறுத்து ஓடின. சந்தனநிறப் பட்டுப்புடைவை சரசரக்கக் காரை விட்டிறங்கி அவனுடன் கூட நடந்தபோது பல விழிகள் அவர்களை விழுங்கினாலும் திருமணமான பொழுதின் சந்தோஷத்தை அவளால் உணரமுடியவில்லை. "என் கண்ணே பட்டிடும் போல..." என்று பெற்ற தாயே வியந்திருந்த அவளது அழகுக்காய், அவர்களது ஜோடிப்பொருத்தத்துக்காக அவள் கொண்டிருந்த சந்தோஷத்தையும் ஒரு திருமணவீட்டில் தான் முதன்முதல் தொலைத்தாள்.

அன்றும் ஒரு வெளிச்சக்கொடியாய் புருஷனின் பக்கத்தில் ஒசிந்து நடந்தாள் இவள். இவளது தங்க நிறத்தில் தம் சோபையிழக்கின்ற மெல்லிய தங்க நகைகளில் விழுந்து அவள் மேனியழகை விழுங்கும் பெண்களின் கண்களைக் கவனியாதது போலக் கவனித்து உள்ளூரக் கர்வமிகும் மனத்தில் எச்சிலாய் விழுந்த அந்த வார்த்தைகளை இப்போதும் மீட்க முடியும் அவளுக்கு.

"கலியாணம் முடிச்சும் அகல்யான்ரை வடிவு குறையேல்லை.... "

யாரோ ஒருபெண் ஏக்கம் வழிந்த குரலில் சொன்னாள். தங்க நிறத்தில் ஒளிக் கண்களோடு ஆஸ்பத்திரிக் கட்டிலில் கிடந்த இவளை அன்போடு தூக்கி அகல்யா என்று பெயர் வைத்தவர் தாத்தாதான். 'எங்கட குடும்பத்துக்குக் கிடைச்ச விளக்கு... அகல்விளக்கு... வெளிச்சம்... அகல்யா...' என்று சொல்லிப் படுத்தினாராம். அவள் வயதுகள் எல்லாவற்றிலும் அழகு ஒளிரத்தான் உலாவந்தாள்.

"அகலி,... அகலிக்குட்டி"

என்று பிஞ்சு வயதில் பெற்றவர் செல்லங்கொஞ்சிய வார்த்தைகளை திருமணமான முதலிரவில் அவன் இரகசியமாய் உச்சரித்தபோது உடல் சிலிர்க்க அவனுள் மூழ்கிப் போனாள். ஆனால் வாழ்வு முழுதும் அவன் குழந்தையாய் அவளே இருக்கவேண்டிய விதிதான் அவனை அவ்விதம் அந்நாளில் அழைக்கவைத்ததோ என்றெண்ணிப் பின்னாளில் மனம் வருந்தியிருக்கிறாள்.

"அதென்ன...பிள்ளையள் பெத்தஉடம்பே... கட்டுக்குலையிறதுக்கு... எனக்கு இந்த வயதிலை நாலாவது பெடியனும் பிறந்திட்டான்..."

கரகரத்த குரலில் எரிஅமிலமாய் மறுபெண் விசிறிய சொல் கேட்ட பிறகு சபைநடுவே நடக்கப் பயமாய் வருகிறது. அவளது பெண்மை பற்றி இரகசியமாய்க் கிசுகிசுக்கப்படும் சந்தேகத் தொனிகளை காற்று இழுத்து வந்து அவளில் மோதவைத்துவிடுமோ என்ற பயம் சகல உற்சாகங்களையும் சிதறடித்து விடுகிறது.

நல்லவேளை தாலிகட்டும் தருணத்துக்குச் சற்று முன்னரே வரமுடிந்திருக்கிறது. ஆண்களின் கூட்டத்தோடு அமர்ந்து கொள்கின்ற புருஷனை ஒருகணம் திரும்பிப் பார்த்துவிட்டு திருமண மேடையிலிருந்து சற்றே விலகி அமர்ந்து கொண்டாள். சுமங்கலிப் பெண்கள் வியர்வை கசகசக்கும் பட்டுடைகளில் நெற்றிக் குங்குமத்தை அழுந்தப் பதித்தபடி பெருமிதத்தோடு நின்றுகொண்டிருந்தார்கள். இந்தப் பெருமைக்காகத் தான் பெண்கள் 'கல்லானாலும் புல்லானாலும் ' புருஷர்களைக் கொண்டிழுக்கிறார்களோ ? இவளது திருமணப் பொழுதில் வயதான ஈஸ்வரிப்பாட்டி மனம் நிறைந்து வாழ்த்தினாள்.

"நிறைஞ்ச சுமங்கலியாய் இரடி கண்ணு... "

"அதென்ன பாட்டி...நிறைஞ்ச சுமங்கலி ... ? "

முகங்கொள்ளாச் சிரிப்போடு இவள் கேட்டாள்.

"எல்லாச் செல்வமும் கிடைச்சு ஆயுள் முழுக்கப் புருஷனோடை சேர்ந்து வாழுறது தான்..."

செல்வங்களுள் தலையாய செல்வம் குழந்தைச்செல்வம் இல்லையா ? பாட்டியின் வாழ்த்துப் பொய்த்துத் தான் போகப் போகிறதோ ? தலைகுனிந்து நாணம் மீதுர அமர்ந்திருக்கும் மணப்பெண் நிறைஞ்ச சுமங்கலியாய் இருப்பாளோ என்னமோ. சின்னப் பையன் ஒருவன் மணமேடைக்கு முன்பிருந்த அரிசிக்கோலம் சிதைத்தபடி ஓடினான். பெரியவர் ஒருவர் அவனை ஆத்திரத்தோடு அதட்டினார். கோல அரிசி விதவித வர்ணங்களில் பரந்திருந்தது. நீலம், ரோஜாவர்ணம், மஞ்சள், பச்சையாய் முகம் காட்டும் தானியமணிகளின் பொய்மை அவள் மனத்தைச் சுட்டது. தாய்மையற்ற பெண்மையும் பொய்மையோ ? சிந்திக்கத்தெரிந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மனந்தான் துயரங்களின் மூலகாரணம். அது ஏன் அவளுக்கு வந்து வாய்த்தது?

புரோகிதர் புரியாத பாஷையில் மந்திரங்களைச் சொல்லிக் கொண்டிருந்தார். மணமக்கள் அவர் ஆட்டி வைக்கும் பொம்மைகளாய் அவர் சொன்னதெல்லாம் செய்துகொண்டிருந்தார்கள். முன்பொரு நாள் அவனோடிருந்து இவ்வாறு செய்து கொண்ட நினைப்பு இனிமையாய் அவளைக் கடந்தது. புரோகிதர் மட்டுமன்றி எவர் எது சொன்னாலும் அதைச் செய்யத்தக்கவர்களாய் மணமக்கள் இருந்தார்கள். பக்கத்துப் பெண் இவள் தோள்தட்டிக் கேட்டாள்.

"தனியத்தான் வந்தீங்களோ ?"

கோலங்குழப்பி ஓடிய பையனைப் பிடித்துப் பலவந்தமாய் அமர்த்தியிருந்த அந்தப் பெண் இவளை அறிந்திருக்க வாய்ப்பில்லை. ஆனால் அந்தக் கேள்வி இவளைக் காயப்படுத்திவிட்டது. மகனினாலான தொல்லையில் கஷ்டப்பட்டு. அதேவேளை குழப்பமற்று இருக்கும் இவளைப் பார்த்தேங்கி அந்தக் கேள்வியை அப்பெண் கேட்டிருக்கக் கூடும். மனிதர்களின் ஏக்கங்கள் தான் எவ்வளவு வேறுபடுகின்றன ?

"அவரும் வந்தவர்... "

சொல்லிவிட்டு சிறுபுன்னகையோடு முகம் திருப்பினாள். அந்தப் புன்னகை உரையாடலை மேலும் தொடர விரும்பாததை நாசூக்காக வெளிப்படுத்திவிடும் என்று நம்பினாள். தான் தேடிய 'கதைக்கத்தக்க' பெண் இவளில்லை என்று புரிந்துகொண்டோ அல்லது தலைக்கனமாக அதைக் கருதியோ அப்பெண் தொடர்ந்து கதைக்கவில்லை. எந்த உரையாடலிலும் நிச்சயமாய் இடம்பெறும் குழந்தை களின் எண்ணிக்கை பற்றிய கேள்வியைத் தவிர்ப்பதே அவளது நோக்கம் என்பதை அவள் மட்டுமே அறிவாள். ஓமப் புகையின் அப்பால் மணமக்களது

சுகந்துய்த்த நிறைவோடு திரும்பிப் படுத்துத் தூங்கிப் போயிருக்கும் அவனைப் பார்க்க மனம் நைந்து போகும். சூடாய் வழியும் கண்ணீரை மெல்லத் தலையணையில் ஒற்றித் திரும்பிப் படுப்பாள். உடைகளின் தொந்தரவற்று மென்பஞ்சு மெத்தையுள் புதைந்து கிடக்கும் அவளது மனம் மட்டும் முட்படுக்கையில் உருண்டு தவிப்பதை அவனறியாமல் மறைப்பாள். கூடலின் மகிழ்வைக் கூட குழந்தைக்கான எதிர்பார்ப்பு மேவிவிடுகிறது.



**மென்பஞ்சு 'நாப்கின்' நெருஞ்சிமுள்ளாய் மனத்தை உறுத்தியது. மாதமொருமுறை அவளது மனதோரம் துளிர்த்து வாடும் 'ஒளிகாலும் நம்பிக்கைச்செடி' இம்முறையாகிலும் தழைத்து விடக் கூடாதா? அந்த ஏக்கத்தை மறைத்த படியே வேறு கேள்வி கேட்டாள்.**

முகம் கலங்கலாய்த் தெரிந்தது. அந்தப் பெண்ணின் மனதிலும் எத்தனை எதிர்பார்ப்புகளோ ? எதிர்பார்ப்புகள் அடையப்படும்வரை மனத்தை முழுதாகக் கைப்பற்றிவிடுகின்றன. அடையப்பட்ட பிறகு மெல்லக் காற்றோடு சேர்ந்துருளும் இலைகளாய் விலகிவிடுகின்றன. அடையப்படாத போது இரும்புத்தகடுகளாய் மனதில் படிந்து கனக்கின்றன. இவளது மனத்தை ஐந்து நாள்களாய்க் கைப்பற்றியுள்ள எதிர்பார்ப்பும் இதற்கு விதிவிலக்கல்ல. இந்தமாதம் இப்படியே 'தள்ளிப்' போய் 'அந்தநாள்' வராமலே போய் விடுமோ? இம்மாதம் 'பொன்மாதமாய்' வாழ்வு முழுமையும் தங்கி விடுமோ ? அது பற்றி ஒரு மெல்லிழைச் சந்தோஷம் அவள் மனதோரம் வசித்தாலும் ஏமாந்துபோய்விடக் கூடாத கவனம் அவள் மகிழ்வைக் கட்டுப்படுத்தியிருந்தது.

சின்னக் குழந்தைகளில் தன் பார்வை அழுத்தமாகாதபடி கவனமாய் இருந்தாள். உள்மன ஏக்கங்களைப் பிறர் அறிவது அவளுக்கு விருப்பமில்லை. துன்பங்கள் அனுபவிக்கப்படுவதைவிட பிறரால் அறியப்படும் போதுதான் அதிகம் வலிக்க வைக்கின்றன.

"கெட்டிமேளம்... கெட்டிமேளம்... "

புரோகிதரின் உரத்த குரலோடு சேர்ந்தொலிக்கும் மங்கள கீதங்களின் மத்தியில் சொரியப்படும் மலர்களோடு தானும் பூக்களைத் தூவினாள் அவள். ஏனோ மனம் மணப்பெண்ணை 'நிறைஞ்ச சுமங்கலியாய் இருக்கவேணும்' என்றுதான் வாழ்த்தியது.

★★★★★★

திருமணவீடு முடிந்து வீடு வரும் போது இரவு எட்டு மணியாகி விட்டிருந்தது. வீட்டினுள் நுழைந்து அடர்ந்திருந்த இருள் தொலைக்க மின்குமிழ் போட்டபோது வீடெல்லாம் ஒளி பரவிற்று.

"அகலி... களைப்பாய் இருக்கா... "

"இல்லையே... "

போலி உற்சாகம் தேக்கிச் சொன்னாள். அருகில் வந்து இவள் நாடி நிமிர்த்தி மெல்லக் கேட்டான்.

"ஆராவது ஏதாவது சொன்னவையா... ? "

'குழந்தை பற்றிய ஊர் விமர்சனங்களுள் சிக்கி ஊமைக்காயத்தோடு இருந்து விடுவாளோ ' என்ற பயம் எங்காவது போய் வந்தவுடன் இப்படி அவன் கேட்பதை வழக்கமாக்கியிருந்தது.

"ச்சீ... "

"சந்தோஷமாய்ப் போச்சுதோ பொழுது... ? "

"ம்...ரீ போட்டுக் கொண்டு வாறன்..."

சொன்னபடியே பட்டுப்புடைவையிலிருந்து இரவுடுப்புக்கு மாறினாள். குறும்புத்தனமாய் அவளைப் பார்த்துக் கொண்டு உடைமாற்றும் அவனைப் பார்த்தாள். அவளது அதீத அழகு தன்வசப்பட்ட பெருமிதம் அவன் கண்களில் நிரந்தரமாக வசிப்பதை அவள் அறிவாள். ஆனால் அந்த அழகைத் திருப்தி செய்கின்ற தாய்மையின் நினைப்பே இப்போதும் அவளை வருத்திற்று. அவன் தேனீர் குடித்தபடி ஏதோ மாத இதழைப் புரட்டிக்கொண்டிருக்கும் போது இரவுணவிற்கான ஆயத்தங்களில் ஈடுபட்டாள். எனினும் எதிர்பார்ப்பில் துடிக்கிற மனத்தைக் கட்டுப்படுத்தமுடியாமல் கழிவறையுள் புகுந்தாள். "நாளையோடை 'தள்ளிப் ' போய் ஆறு நாளாகப் போகுது... "

கடைசியில் பெருமிதமாய்ச் சபை நடுவே அவள் உலவத்தக்க நாள் வந்தே விட்டதோ ? மெல்ல உடைவிலக்கிய போது, அங்கே... இவளின் முழுவெறுப்புக்குரிய குருதிச் சிவப்பு நிர்ச்சலனமாய் உட்கார்ந்திருந்தது.

## திருந்தாயோ...?

பூ முகம் கண்டேனடா
பூரித்துப் போய் நின்றேனடா
பால்வடியும் வாய் கண்டு
பார்த்துமே அகம் மகிழ்ந்தேனடா
சின்னக் கையை அசைத்து
சிங்கார நடைபயில்கையியே
என்னையே நான் மறந்து
ஏக்கம் கொண்டு பார்த்தேனடா



தன்ன்ந் தனிமை கண்டு
தவியாய் நீ தவிக்கையிலே
தாய் மனதும் தாங்கிடுமோ
சேய் உன்னை கைவிடுமா?
மீசை முளைத்த சிங்கமாய்
மிடுக்குடன் உலாவி வருகையிலே
பெற்றெடுத்த பாவி மனம்
பெருமை எண்ணி பூரித்ததே

பண்புச் சொற்கள் பல கூறி
பண்பாய் உன்னை வளர்க்கையிலே
கல்விக் கடலில் முத்தெடுத்து
ககனம் முட்டும் புகழோடு
பதவி என்னும் உயர்வு பெற்று
பலரும் போற்ற வாழ்வாய் என
மாளிகையாய் இருந்த எண்ணம்
மண்ணோடு மண்ணாய் போனதேனோ?


நஞ்சோடு கலக்கும் தேனாக
நாசமறுத்து நீ திரிவாயோ?
போதைப் பிடியில் சிக்குண்டு
பொசுங்கி வாழ்வை அழிப்பாயோ?
மனிதரை மனிதராய் மதித்திடு
மனதினை நல் வழி புகவிடு
தேசத்தை ஆள நினைத்திடு
தேகத்தை கெடுக்கும் நிலைவிடு

**சிவகுமார் லிஜினா,**
4ஆம் வருட இசைத்துறை மாணவி,
சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவனம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாயன்கள் மரணத்தூதுவர்களா?

○ கோகுலராகவன்




அபோகலிப்ரோ ( Apocalypto-2006) மெல் கிப்சனின் (Mel Gibson) இயக்கத்தில் ஆச்சரியப்பட்டு போய் ஆறு, ஏழு தடவை பார்த்த படம். இப்போதும் அது ஒளிபரப்பாகும் போதெல்லாம் தொலைக்காட்சியின் முன்னே அந்தப் படத்தின் விறுவிறுப்புக்காக அமர்ந்துவிடுவதுண்டு. ("சரி தொடங்கிட்டார்" - இது மகளின் முணுமுணுப்பு)

ஆனால் இந்தத் திரைப்படம் பல கேள்விகளை மனதில் உருவாக்கி இருக்கின்றது. மாயன்கள் (Mayans) தமது அயலவரான இன்கா (Inca) இன மக்களை பலியிட்டு அழித்தார்கள் என்பதை நம்பமுடியவில்லை.

நரபலி எல்லா நாகரிகங்களிலும் இருந்தது என்பது வரலாற்று ரீதியில் உண்டு. ஆனால் ஓர் இனத்தை கூண்டோடு நரபலி மூலம் அழித்ததாக வரலாறு இல்லை.

மாயன்கள் உலக வரலாற்றில் மாயன் கலண்டரை அறிமுகம் செய்தவர்கள். பிரமிட் கட்டடக்கலையை வடிவமைத்தவர்கள். இயற்கை விவசாயத்தை உலகுக்கு அறிமுகம் செய்தவர்கள். இயற்கையை பச்சையம்மா என அழைத்து வழிபட்டவர்கள். பச்சையம்மா என்ற சொல் தமிழ் போல இருக்கிறதா? மாயன்களுக்கும் தமிழர்களுக்கும் ஏதோ தொடர்பு உண்டு. ஆனால் அது உறுதிப்படுத்தப்பட முடியாதது.

ஆனால் திரைப்படம்

இவ்வளவு தூரம் அவர்களைக் காட்டுமிராண்டியாகக் காட்ட வேண்டிய அவசியம் யாது?

பிற்காலத்தில் அங்கு கால் பதித்த ஸ்பானியர்கள் கொத்துக் கொத்தாக மாயன்களையும், இன்காக்களையும் கொன்று குவித்து அழித்ததை மெல் கிப்சன் தன் திரைப்படம் மூலம் மறைப்பதாகவே எனக்குத் தோன்றுகிறது.




திரைப்படத்தில் இன்னொரு நம்பமுடியாத அபத்தமாக இருப்பது மாயன்கள் தங்களது கட்டுமானப் பணிகள், விவசாய நடவடிக்கை, ஆன்மீகச் செயற்பாடுகள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு இன்காக்களை அழிப்பதையே ஒரே குறிக்கோளாகக் கொண்டு திரிந்தார்கள் எனச் சித்திரித்திருப்பது தான்.

உலகில் மாயன், இன்கா என்ற மிகப்பெரிய மனித இனக் கூட்டங்கள் இன்று இல்லை என்றால் இதற்கு ஒட்டுமொத்தக் காரணமும் தென்னமெரிக்காவில் குடியேறிய ஸ்பானியர்கள்தான்.

மாயன்களதும், இன்காக்களதும் பழைமை வாதங்களைப் பயன்படுத்தி ஸ்பானியர்கள் கொன்று குவித்தார்கள் .

இரண்டாயிரம் மெய்ப்பாதுகாவலர்களுடன் நின்ற மாயன் இன அரசனை இருநூறு படைவீரர்களுடன் வந்த ஸ்பானிய அரசன் இலகுவாகக் கைது செய்தான். இது மாயன்களின் முட்டாள்தனம்தான். குதிரையில் இறைவன் வருவான் என்ற அவர்களது தீர்க்கதரிசியின் கூற்றை நம்பி குதிரையில் வந்த ஸ்பானிய அரசனை அருகில் அமர வைத்ததே மாயன் அரசனின் முதற்தவறாக அமைகிறது.

மாயன்கள் சித்திர எழுத்துகள் மூலம் களிமண் தட்டுக்களில் பல வரலாற்று, சாத்திர, கட்டட நூல்களை உருவாக்கி வைத்தவர்கள் . இவற்றை எல்லாம்"சாத்தான்களின் நூல்" என்று கூறி எடுத்து அழித்து விட்டதாக ஒரு பாதிரியார் வீரமாகப் பதிவு செய்தும் இருக்கிறார். அவற்றில் எஞ்சியவையே மாயன்களின் பஞ்சாங்கத்தை அறிய உதவிய நூல்களில் ஒன்று.



திரைப்படம் மாயன்களை கொடூர மக்கட்கூட்டமாகக் காட்டுகிறது. இன்னொரு இனத்தை துரத்தித் துரத்தி அழிக்கும் இனமாகச் சித்திரிக்கிறது. ஆனால் மாயன்களின் சரிவின் பின் "மச்சு பிச்சு" போன்ற கோட்டைகளை மலை முகடுகளில் அமைத்து ஆட்சி செய்தவர்கள் இன்கா இன மக்கள். ஆகவேமாயன்கள் இன்கா இன மக்களை அழித்தார்கள் என சித்திரிப்பது அபத்தத்தின் மேல் அபத்தம்.

திரைப்படத்தின் இறுதியில் நாயகன் தப்பிவந்து, மனைவி மக்களோடு காட்டுக்குச் செல்லும்போது இரண்டு பாய்க்கப்பல்கள் கடலில் தெரிகின்றன.

மனைவி கேட்கிறாள்

"அவர்களிடம் போவோமா? "

"இல்லை . அவர்களும் நம்மை அடிமைப்படுத்த வந்தவர்களாக இருக்கலாம்"

என்ற சந்தேகத்தோடு நாயகன் காட்டில் மறைகிறான்.

அவனை விரட்டி வந்த இருவர் கப்பல்களை நோக்கி ஓடிச்செல்கிறார்கள்.

இந்தக் காட்சியின் நோக்கம் என்ன?

மாயன்கள் கப்பலில் வந்தவர்கள் நல்லவர்களா ?கெட்டவர்களா? என்பதை அறிவுபூர்வமாக சிந்தனை செய்யக்கூட ஆற்றல் இல்லாமல் அவர்களை வரவேற்க முனைவார்களா? என்பதை இயக்குநர் யோசிக்கவில்லை என்பது கூட ஒரு ஊமைக்காயம்தான். அல்லது மாயன்கள் அறிவிலிகள் எனக் காட்ட முனைவதாகவும் அமையும். வியட்நாம் போரை வைத்து தயாரான ஹொலிவூட் திரைப்படங்கள் எவையும் வியட்நாமியர்களின் நியாயப்பாட்டை எடுத்துரைத்தவை இல்லை.

எனவே அப்போகலிப்ரா படமும் மாயன்களதும் இன்காக்களதும் சடலங்கள் மீதுதான் ஸ்பானியர்கள் தங்கள் சாம்ராச்சியங்களை அமைத்தார்கள் என்பதை எடுத்துரைக்கும் என எதிர்பார்ப்பது முட்டாள்தனமானது தான்.

இதைவிட இலட்சக்கணக்கான சுதேசியச் செவ்விந்தியர்களைக் கொன்றுதான் வட அமெரிக்காவை கொலம்பஸ் கைப்பற்றினான் என்பதை மெல் கிப்சன் அறிந்திருக்க மாட்டாரா என்ன?

(இன்னும் கதைப்பம்)

1505-1948 வரை

# யாழ்ப்பாண வரலாறு

○ ந.பரமேஸ்வரன்

## 1943 டிசெம்பர்

யாழ்ப்பாண நகரசபை விமானக்குண்டு வீச்சு பாதுகாப்புக் கட்டடம் அமைப்பதற்கென ரூபா 2983.34 சதம் ஒதுக்கீடு செய்தது.

## 1944 பெப்ரவரி

பிரிட்டிஷ் விமானப்படையில் இலங்கையரையும் இணைத்துக் கொள்வதற்கான நேர்முகப்பரீட்சை காங்கேசன்துறையிலும் யாழ்ப்பாணத்திலும் நடைபெற்றது. இதற்கான அடிப்படைத்தகைமையாக ஆங்கில மூலம் எட்டாம் தரம் சித்தியடைந்திருத்தல் வேண்டும் அல்லது சிரேஷ்ட பாடசாலை சாதாரண தரம் (SSC) சித்தி எதிர்பார்க்கப்பட்டது. மாதாந்தம் 60.00 ரூபா சம்பளம் வழங்கப்பட்டது.

## 1944 மார்ச்

முற்றவெளியில் விமானக்குண்டு வீச்சிலிருந்து பாதுகாப்பது எப்படி என்ற ஒத்திகை, விமானக்குண்டு வீச்சு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்,(Air Raid Protecton officers) தீயணைப்பு படையினர் போன்றோரால் செய்து காட்டப்பட்டது.

## 1944 ஏப்ரல் 14

தபால் தணிக்கை இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டது. பொதுமக்கள் கடிதம் எழுதும் போது பின்வரும் விடயங்களைத் தவிர்த்துக்கொள்ளுமாறு பிரிட்டிஷ் அரசாங்கம் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்தது.

இலங்கைக்கு வந்து செல்லும் பாதுகாப்புப்படை உத்தியோகத்தர்கள், வர்த்தக மற்றும் கடற்படைக்கப்பல்கள் பற்றிய விவரங்கள், கப்பல்கள் வரும் புறப்படும் திகதிகள், பாதை, கப்பல்கள் மூழ்கினால் அது பற்றிய விவரங்கள், கடற்படைப்பயிற்சி பற்றிய விவரங்கள், இராணுவக் கட்டமைப்புகள், பயிற்சிகள் தொடர்பான விடயங்கள், துருப்புகள் வரும் புறப்படும் திகதிகள், எதிரிகளின் தாக்குதலில் ஏற்பட்ட சேத விவரங்கள், விமானப்படை விமானங்களின் பெயர்கள் மற்றும் எண்ணிக்கை, விமானங்கள் புறப்படும் மற்றும் தரையிறங்கும் இடங்கள், நேரங்கள், படையினரின் எண்ணிக்கை, விமானத் தளங்கள் போன்ற விவரங்களை கடிதங்களில் தவிர்த்துக்கொள்ளுமாறு பிரிட்டிஷ் அரசாங்கம் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்தது.

யாழ்ப்பாண கூட்டுறவு மத்திய வங்கி தனது ஆண்டறிக்கையில் 1943 ஆம் ஆண்டுக்கான பணச்சுழற்சி இரண்டு மடங்காக அதிகரித்துள்ளதாகத் தெரிவித்தது. 1942 ஆம் ஆண்டு நான்கு மில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட பணச்சுழற்சி 1943 ஆம் ஆண்டு எட்டு மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளதாக யாழ்ப்பாணக் கூட்டுறவு மத்திய வங்கி தனது ஆண்டறிக்கையில் தெரிவித்துள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்தில் கூட்டுறவுக் கிளைகளை ஆரம்பிக்கவுள்ளதாக யாழ்ப்பாண கூட்டுறவு மத்திய வங்கியின் தலைவர் முதலியார் வி.பொன்னம்பலம் தெரிவித்தார்.

## 1944 மே 18

ஹென்ஸ்மன் காலமானார்.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற ஹென்ஸ்மன் ஆங்கிலம், கணிதம் ஆகிய துறைகளில் பாண்டித்தியம் பெற்று விளங்கியதுடன் தென்னிந்தியாவின் கேம்பிரிட்ஜ் என அழைக்கப்பட்ட கும்பகோணம் அரசினர் கல்லூரியில் நீண்டகாலம் அதிபராக இருந்தார். கும்பகோணம் அரசினர் கல்லூரிக்கு அதிபராக நியமிக்கப்பட்ட முதலாவது ஐரோப்பியரல்லாத அதிபர் ஹென்ஸ்மனே. ஸ்ரீனிவாச சாஸ்திரி, சேர்.கே.வி.ரெட்டி, கணித மேதை டி.ஆர்.வெங்கட்ராமன், நீதியரசர் சேர்.சங்கரன் நாயர் போன்ற தமிழ்நாட்டு முக்கியஸ்தர்கள் அனைவரும் ஹென்ஸ்மனின் மாணவர்களே. பிரிட்டிஷ் ஆளுநர் இவரை யாழ்ப்பாணத்தின் நியமன உறுப்பினராக சட்டசபைக்கு நியமித்த போது யாழ்ப்பாணத்தில் முதல் தடவையாக நீரிறைக்கும் இயந்திரங்களை அறிமுகம் செய்து தென்னை, மா செய்கையை ஊக்குவித்தார். ஹென்ஸ்மனின் மறைவுச்செய்தி கேட்ட ஸ்ரீநிவாச சாஸ்திரிகள் அவுஸ்திரேலியாவிலிருந்து இந்தியா திரும்பும் வழியில் இலங்கை வந்து தனது குருவுக்கு இறுதி அஞ்சலியைச் செலுத்தி விட்டுச்சென்றார்.

## 1944 மே 24

சிங்களத்தை அரசகரும மொழியாக்க வேண்டுமென்ற பிரேரணையை சட்டசபையில் ஜே.ஆர்.ஜெயவர்த்தன சமர்ப்பித்தார். அப்போது திருகோணமலை உறுப்பினர் வி.நல்லையா, சிங்களமும் தமிழும் என மாற்றுமாறு கூறினார். எனினும் இந்தப் பிரேரணை (சிங்களமும் தமிழும் உத்தியோகபூர்வ மொழிகளாக அறிவிக்கப்பட வேண்டும்) வாக்கெடுப்பின் போது 25:12 என்ற விகிதத்தில் தோற்கடிக்கப்பட்டது.

(வரலாறு தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




K.அபர்ணன்,
தரம் -11A
யா/ காரைநகர்
இந்துக் கல்லூரி



N.அரிதிகன்,
தரம் -05
யா/ உடுவில்
மகளிர் கல்லூரி



ந.ஹரிஷ்ராம்,
தரம் -7D
யாழ்ப்பாணம்
இந்துக்கல்லூரி.



ச.சாயிஷா,
தரம்-5
பாலர் பாடசாலை



## மாணவர்களே!

நீங்களும்
உங்கள்
கைவண்ணங்கள்,
ஆக்கங்களை
அனுப்பலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி!

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555



ஜ.அவந்திகா,
தரம்- 1A,
சாவகச்சேரி இந்து ஆரம்ப
பாடசாலை




நி.கிரிஷன்,
தரம் -7G
யாழ்ப்பாணம்
இந்துக்கல்லூரி.

## நிரப்புவோம்

7 - 2 = ○

5 - 3 = ○

9 - 7 = ○

9 - 4 = ○



சி.மயூரன்
தரம் - 9
யா/கரந்தன் இராமுப்பிள்ளை
வித்தியாலயம் நீர்வேலி



ஜ. அஸ்மிகா.
தரம்- 2B,
சாவகச்சேரி இந்து
ஆரம்ப பாடசாலை.

## குவா குவா வாத்து

குவா குவா
வாத்து
குள்ளமணி வாத்து
மெல்ல உடலை
சாய்த்து

மேலும்
கீழும் பார்த்து
மெல்லமாக நடக்கும்
சின்னமணி வாத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆபத்தான தீர்மானம்

ஐந்து இஸ்லாமிய அமைப்புகள் மீதான தடையை இலங்கை அரசாங்கம் ஜூலை 16 ஆம் திகதி நீக்கியிருந்தது. இந்த அமைப்புகள் மீதான தடை நீக்கம் தவறானது என 'UNBANNING EXTREEMISM' என்ற தலைப்பில் ரங்க ஜெயசூரிய, 'டெய்லி மிரர்' பத்திரிகையில் எழுதிய கட்டுரையின் தமிழாக்கம் இங்கு தரப்படுகிறது.

தமிழில்: ந.பரமேஸ்வரன்

ஈஸ்டர் தாக்குதலுக்குப் பின்னர் பதினொரு இஸ்லாமிய அமைப்புகள் மீது தடை விதிக்கப்பட்டிருந்த நிலையில், இப்போது அவற்றில் ஐந்து அமைப்புகள் மீதான தடை நீக்கப்பட்டுள்ளது. ஜமைத்துல் அன்சாரி சுன்னத்துல் முகம்மதியா (Jamaithul Ansari Sunnathul Mohamadiya), ஸ்ரீலங்கா தௌஹீத் ஜமாத் (Srilanka Thowheeth Jamath),அகில இலங்கை தௌஹீத் ஜமாத் (All Ceylon Thowheeth Jamath),இலங்கை தௌஹீத் ஜமாத் (Ceylon Thowheeth Jamath),ஐக்கிய தௌஹீத் ஜமாத் (United Thowheeth Jamath) ஆகிய அமைப்புகள் மீதான தடையே நீக்கப்பட்டுள்ளது.

ஏனைய ஆறு அமைப்புகளான ஐ.எஸ்.அல் கெய்தா மற்றும் நான்கு உள்நாட்டு இஸ்லாமிய அமைப்புகளான தாருல் ஆதர், ஸ்ரீலங்கா இஸ்லாமிய மாணவர் அமைப்பு, சேவ் த பேர்ள் மற்றும் சுப்பர் முஸ்லிம் என்பவை மீதான தடை தொடர்ந்து இருக்கும்.

தடை நீக்கப்பட்ட அமைப்புகள் தொடர்ந்து கண்காணிக்கப்படும் .தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் ஏதாவது நடவடிக்கைகளில் ஈடுபட்டால் மீண்டும் அந்த அமைப்புகளுக்குத் தடை விதிக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.இது ஒரு நல்லிணக்க நடவடிக்கையேயன்றி வேறொன்றுமில்லை. ஆனால் இது ஆபத்தான தீர்மானம். இஸ்லாமியத் தீவிரவாதத்துக்கு புத்துயிரூட்டும் நடவடிக்கை. இந்தத் தடை நீக்கம் உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் இலங்கையில் இல்லாதிருந்த வஹாபிச,சலாபிச அமைப்புகளை மீண்டும் காலூன்ற வழிவகுக்கும். இந்தக் குழுக்களுக்கு உயிர்த்தஞாயிறு தாக்குதலுடன் தொடர்பில்லை, இந்தக் குழுக்கள் தீவிரவாதக் குழுக்கள் அல்ல என்று சொல்லப்படலாம். ஆனால் ஐ.நா. பிரகடனத்தின் படி தீவிரவாதச் சித்தாந்தம் வன்முறையாகவே கருதப்படுகிறது.

உள்ளூர்வாசிகளைக் கொல்வது சஹ்றானினதும் சகாக்களினதும் நோக்கமல்ல. கிறிஸ்தவ தேவாலயங்களிலும் நட்சத்திர விடுதிகளில் வெளிநாட்டவர்கள் மீதுமே தாக்குதல் நடத்தியுள்ளனர். இது சர்வதேச ஜிஹாத்தின் விரிவாக்கம். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் ஒரு பிரமிட் கட்டமைப்பைப் போன்றது. இது ஒரு நன்கு திட்டமிடப்பட்ட உயர்ந்தபட்ச வன்முறை. இவர்களது சித்தாந்தங்களும் வழிகாட்டல்களும் இவர்களை நிறுவனமயப்படுத்துகின்றன.நிறுவனரீதியில் ஒன்றுபடுத்துகின்றன.வன்முறை அல்லது தீவிரவாதத்தை கையிலெடுப்போர் ஒரு காலத்தில் வன்முறையற்ற குழுக்களில் உறுப்பினர்களாக இருந்தவர்களே. இலங்கையை எடுத்துக்கொண்டால் வஹாபிச பள்ளிவாசல்கள் புர்காவை வலியுறுத்துகின்றன.சஹ்ரான் தனது தேசிய தௌஹீத் ஜமாத்.அல்லது பின்னைய ஜமாத்தே மிலாத்து இப்ராஹிம் ஊடாக வஹாபிசத்தையும் அரேபியமயமாக்கலையும் இலங்கை முஸ்லிம் சமூகத்தினரிடையே செய்துள்ளார்.

வஹாபி முஸ்லிம் அமைப்புகள் இதனைப் பரப்பியுள்ளன. இந்தக் குழுக்களின் பெயர்கள் வஹாபிசத்தையே குறிக்கிறது.

இவர்கள் தமது சித்தாந்தத்தை முஸ்லிம் சமூகத்தினர் மத்தியில் பரப்புவதுடன் முஸ்லிம் அரசியலிலும் தாக்கம் செலுத்துகின்றனர் அத்துடன் தமது 'பொக்கெற்றுகளை' மத்திய கிழக்கிலிருந்து வரும் பெற்றோலிய டொலர் மூலம் நிரப்பிக்கொள்கின்றனர்.

இந்த அமைப்புகள் அகில இலங்கை ஜமைத்துல் உலமா சபையினருடனும் தொடர்புகளைப் பேணுகின்றன. அகில இலங்கை ஜமைத்துல் உலமா சபையின் ஊடாகப் பெண்கள் கட்டாயமாக புர்கா அணிய வேண்டுமென பத்வா அனுப்புகின்றனர். உள்ளூரில் நடைமுறையில் உள்ள இஸ்லாம், உண்மையான இஸ்லாம் அல்ல என இவர்கள் கூறுகின்றனர். இது கிழக்கிலும் அளுத்கமயிலும் உள்ள உள்ளூர் முஸ்லிம்களுக்கும் இவர்களுக்குமிடையே மோதலை உருவாக்குகிறது.கிழக்கிலும் புத்தளத்திலும் வாழும் முஸ்லிம்களிடையே வஹாபிசம் செல்வாக்குச் செலுத்துகிறது.

உள்ளூர்ப் பாடநூல்களில் யூத வெறுப்பு போதிக்கப்படுகிறது. அரசாங்க பாடநூல்களில் இஸ்லாத்திலிருந்து விலகி வேறு மதத்துக்கு மாறியவர்களை கொலை செய்ய வேண்டும் எனப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இஸ்லாமிய அலுவல்கள் திணைக்களம் 2015ஆம் ஆண்டு 190 புதிய வஹாபி பள்ளிவாசல்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது. 2016 ஆம் ஆண்டு 50 பள்ளிவாசல்களுக்கும்,2017ம் ஆண்டு 80 பள்ளிவாசல்களுக்கும் அனுமதி வழங்கியுள்ளது.

பதிவு செய்யப்படாத உள்ளூர் செயற்கைக்கோள் தொலைக்காட்சிகள், சமாதான தொலைக்காட்சி என்பவற்றின் ஊடாக சாகிர் நாயக் என்ற சர்ச்சைக்குரிய இஸ்லாமிய மதபோதகரின் உரைகள் ஒளிபரப்பப்பட்டுள்ளன. பங்களாதேஷ் 2016 ஆம் ஆண்டு புனித ஆர்ட்டிசன் பேக்கரி மீதான தாக்குதலின் பின் இவரது போதனையை தடை செய்திருந்தது. இலங்கையில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னரே தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு இவரது உரைகளைத் தடை செய்தது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான நாடாளுமன்ற விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரையின் பிரகாரமே முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச இந்த 11 இஸ்லாமிய அமைப்புகளையும் தடைசெய்திருந்தார். எனினும் நாடாளுமன்ற விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரையின் பிரகாரம் பொதுபலசேனாவை தடைசெய்ய அவர் மறுத்து விட்டார்.

இப்போது ஆறு அமைப்புகளுக்குத் தடை நீக்கப்பட்டதன் மூலம் வஹாபிசத்தை மீண்டும் இலங்கைக்குள் கொண்டு வருவதற்கு வழி வகுக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் உடனடிப் பாதிப்பு ஏற்படப்போவது பாரம்பரிய இலங்கை முஸ்லிம்களுக்கே.இது வஹாபிசத்தை விரிவுபடுத்தவும் முஸ்லிம் இளைஞர்களை மதத் தீவிரவாதிகளாகச் செயற்படவுமே வழி வகுக்கும்.வஹாபிஸம் முஸ்லிம் சமூகத்தினரிடையே பிளவுகளை உருவாக்கும். முஸ்லிம் பெண்களை புர்கா அணியவும் முஸ்லிம் சிறுவர்களை மதரஸாக்களை நோக்கிச் செல்லவும் வழி வகுக்கும்.

அரசாங்கத்தின் இந்தத் தீர்மானம் முஸ்லிம் சமூகத்தை தொடர்ந்தும் அந்நியப்படுத்தும் நடவடிக்கையே.அரசாங்கத்தின் இந்தத் தீர்மானம் மிகவும் ஆபத்தானது.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org